24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 48
விலை - 40 ரூபா

சுடர் 34 கதிர் 137 சித்திரை 01ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 14 ஏப்ரல் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


### கேப்பாபிலவு நிலமீட்புப் போராட்டம்:

## இந்தப் புத்தாண்டுக்கு எதிர்ப்பு நடவடிக்கைகள் எதுவுமில்லை

### இழுத்தடிப்புக்களால் சோர்வடைந்துள்ள மக்கள்

முல்லைத்தீவு, ஏப். 14

முல்லைத்தீவு கேப்பாபிலவில் கடந்த இரண்டு ஆண்டுகளாக நிலமீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள், இரண்டு ஆண்டுகளிலும் புதுவருட தினத்தை கறுப்புக் கொடி கட்டி, கவன வீர்ப்புபோராட்டங்களை முன்னெடுத்து எதிர்ப்பை பதிவு செய்து வந்தனர். மூன்றாவது வருடத்தில் இன்று இடம்பெறும் புதுவருட தினத்தில் அத்தகைய போராட்டங்களில் ஈடுபடப் போவதில்லை என்று 46

### விகாரி சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

வாசகர்கள், அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் உதயனின் இனிய விகாரி சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.



# அதிகாரப் பகிர்வு ஆவணம் தயார்

## மைத்திரியின் திகதிக்காக காத்திருப்பு

*யாழ்ப்பாணம், ஏப்ரல் 14*

அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழு ஆவணத்தை தயாரித்து அரச தலைவர் மைத்திரிபால மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளது. அதிகாரப் பகிர்வு தொடர்பான ஆவணத்தை ஆராய்வதற்கு சர்வ கட்சிக் குழுக் கூட்டத்தை கூட்டுவதற்கான திகதி அரச தலைவரிடமிருந்து இன்னமும் கிடைக்கப் பெறவில்லை.

அரச தலைவர் சர்வ கட்சிக் குழுக் கூட்டத்தை கூட்டினால், அந்த ஆவணத்தை மே அல்லது ஜூன் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும் என்று கூறப்படுகின்றது. 46

## திருப்பதி பயணத்தை திடீரென ஒத்திவைத்தார் மைத்திரிபால

### பதவிதுறப்பு காரணமா?

கொழும்பு, ஏப். 14

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் உள்ள திருப்பதி ஏழுமலையான் ஆலயத்துக்கு மேற்கொள்ளவிருந்த பயணத்தை திடீரென ஒத்திவைத்துள்ளார்.

சித்திரைப்புத்தாண்டுக்குப்பின்னர், திருப்பதிக்குப் 46

### அரச தலைவர் தேர்தலில்

## மகிந்த, கோத்தா களமிறங்க அரசமைப்பு இடமளியாது

### மைத்திரியே இறங்குவார் என்கிறார் துமிந்த திசாநாயக்க

கொழும்பு, ஏப். 14

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவோ அல்லது முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவோ நடைமுறையிலுள்ள அரச 46

## லண்டன் வானூர்தி நிலையத்தில் இலங்கையர் நால்வர் கைது

கொழும்பு, ஏப். 14

லண்டன் லூட்டன் வானூர்தி நிலையத்தில் வைத்து இலங்கையர்கள் நால்வர் பிரிட்டன் பயங்கரவாத ஒழிப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தடை செய்யப்பட்ட அமைப்பொன்றின் உறுப்பினர்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்தி 47

## பருத்தித்துறையில் 18 பவுண் நகை கொள்ளை

யாழ்ப்பாணம், ஏப். 14

பருத்தித்துறை புற்றளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை 12 மணியளவில் கத்தி முனையில் 18 பவுண் நகை கொள்ளையிடப்பட்டுள்ளதாகப் 46

### ராணுவத்தினரைக் கொலை செய்தாரென

## முன்னாள் புலி உறுப்பினருக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டு வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஏப். 14

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவருக்கு எதிராக ஜேர்மனியின் அரச சட்டவாளர்கள் நேற்று முன்தினம் போர்க்குற்ற வழக்கைத் தாக்கல் செய்துள்ளதாக 'ஏபி' செய்தி வெளியிட்டுள்ளது.

37 வயதுடைய, சிவதீபன் என்பவருக்கு எதிராகவே, இராணுவத்தினர் 15பேரை படுகொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப் 46

## மைத்திரியுடன் சம்பந்தன் இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப். 14

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், அந்தக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனும் இன்று 47

### கொழும்பு சென்ற மூடுந்து விபத்து:

## நயினாதீவைச் சேர்ந்த பெண் பரிதாபச் சாவு

### லண்டனிலிருந்து வந்தவருக்கு நேர்ந்த துயரம்

யாழ்ப்பாணம் ஏப். 14

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற மூடுந்து (ஹைஏஸ்) புத்தளம் சிலாபம் ஆரச்சிகட்டுவவில் எரிபொருள் நிரப்பிய பவுசருடன் நேருக்கு நேர் மோதியதில், மூடுந்தில் பயணித்த பெண் உயிரிழந்துள்ளதாகப் பொலி 46



## ஐ.நாவின் நடவடிக்கைகளுக்கு இலங்கை முழு ஒத்துழைப்பு

### நற்சான்றிதழ் வழங்கியது சித்திரவதைக்கு எதிரான உபகுழு

கொழும்பு, ஏப். 14

எமது இலங்கைப் பயணத்தின் போது நல்ல ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. அனைத்து தடுப்பு நிலையங்களையும் சென்று பார்வையிட முடிந்தது. இரகசிய நேர்காணல்களுக்கும் அனுமதி கிடைத்தது. இவ்வாறு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. உபகுழு தெரிவித்துள்ளது.

சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. உபகுழுவின் பிரதிநிதிகள் நால்வர் முதல் முறையாக இலங்கையில் ஆய்வுப் பயணத்தை கடந்த 2ஆம் திகதி 46

## வவுனியாவில் சுட்டெரித்த வெயில்: 38.3 பாகை செல்சியஸாக பதிவு

கொழும்பு, ஏப். 14

நேற்றுக் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் வவுனியாவில் அதிக வெப்பநிலை பதிவாகியுள்ளது. 38.3 பாகை செல்சியஸாக வவுனி 47

2019
அக்கறையின்
வரவு செலவுத் திட்டம்

மக்களுக்கு வலிமையும் பலமும்

# புதுத் தம்பதியினருக்கு புது வீடொன்றை அமைக்க ரூ.10 மில்லியன்



தமக்கென சொந்த வீடொன்று காணப்பட வேண்டுமென்பதே திருமணம் செய்யும் ஒவ்வொரு புதுமணத் தம்பதியினரதும் பிரார்த்தனையாகும். அவர்களது எதிர்காலத்தை கட்டியெழுப்பும் அந்த அன்பான பிரார்த்தனையை நிறைவேற்றுவதற்கு புதிய வரவு செலவுத் திட்டத்தில் புதிதாக திருமணம் செய்யும் தம்பதியினருக்கு 10 மில்லியன் ரூபாவுக்கான வீடமைப்பு கடன் வழங்கப்படுகின்றது. "ஹோம் ஸ்வீட் ஹோம்" கடன் திட்டத்தின் கீழ் 6% குறைந்த வட்டிக்கே கடன் வழங்கப்படுகின்றது. அத்துடன் மீளச் செலுத்தும் காலம் 25 வருடங்கள் ஆகும்.

**வட்டி 6%**
**மீளச் செலுத்தும் காலம் 25 வருடங்கள்**

மக்களை பலப்படுத்தி வளமான சமூகத்தை உருவாக்குவோம் | நிதி அமைச்சு


NEW
Clogard
Cavity Protection
Fights Germs - Strengthens Enamel
கை நிறைய பலகாரம் கொண்டு செல்வோம்
பற்களை காக்க க்லோகாட் கொடுப்போம்
இயற்கை கராம்பு எண்ணெய் சேர்க்கைகள் கொண்ட க்லோகாட் உடன் இப் புத்தாண்டில் எந்த உணவையும் சாப்பிடுங்கள்!
எமது தனித்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பற்பசை க்லோகாட் இடமிருந்து
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
இலங்கையரின் முதன்மை பற்பாதுகாவலன்
HEMAS
ரூ.20/- இலிருந்து




AVIC INTL
Avic International Hotels Lanka Ltd.
No.418, R.A. De Mel Mawatha, Colombo 03.
Web : www.astoria.lk | E-mail : avic_astoria@163.com
Tel : 0114-68-66-66
ASTORIA

உதயன்
advt@uthayan.com,
விளம்பர தொடர்புகளுக்கு
021 493 1111

## வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் 5 சந்தியில்
2 மாடிவீடு வாடகைக்குண்டு.
**077 147 6932** (CS/24662) (11.17)

## சேவைகள்

"ONLINE"(ஒன்லைன் விசா) விண்ணப்பங்கள் - கனடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, லண்டன், செங்கன் நாடுகளுக்கான நோர்வே, டென்மார்க், பிரான்ஸ், சுவிடன், பெல்ஜியம், ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, நிரந்தர விசா, தற்காலிக (விசிட்) விசா விண்ணப்பப் படிவங்களும், சத்தியக் கடதாசி வேலைகளும், உடனடியாகவும், முறையாகவும், சரியாகவும் பூர்த்தி செய்து தரப்படும். **காலை 7.30 இல் இருந்து மாலை 05.30 வரை** தொடர்பு கொள்ளவும். எனக்கு வேறு கிளை அலுவலகமோ உதவியாளர்களோ கிடையாது.

**தொடர்பு:** திருமதி ஞானேஸ்வரி குமரகுரு, ஜே.பி., (அகில இலங்கை)
SECRETARIAL & ALIED SERVICES
S - 68, 3ஆவது மாடி, கொழும்பு கோலட் சென்ரர்,
(பழைய டிராலுக்கடை) கொழும்பு - 11.
தொலைபேசி: 077 375 3791 / 011 2431 725/ 011 313 3945
Viber: 077 2991 482
இமெயில்: gnaneswaryk@gmail.com
(cs. 145384) (11.17)

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**மங்கையற்கரசி கந்தசாமி**

பிறப்பு 06.03.1939
இறப்பு 30.04.2007

திதி: 16.04.2019
209, Church Road,
Northholt U.K. UB5
5 BE இல் கொடுக்கப்படும்.

காரைநகர் பொன்னாவளை களபூமி
764, K.K.S. Road, யாழ்ப்பாணம்
11/2 Charlement வீதி வெள்ளவத்தை
29,Douglas Aveneue, Wenbley U.K.HAO 4 DT
**திருமதி மங்கையற்கரசி கந்தசாமி**
(முன்னாள் வடகிழக்கு மாகாண நீர்ப்பாசன பணிப்பாளரின் மனைவி)
அன்னாரை இழந்து தவிக்கும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 3ஆம் ஆண்டு நினைவேந்தல்



அன்னை மடியில் 16 . 04 . 1948
ஆண்டவன் மடியில் 27 . 03 . 2016

**கேதீஸ்வரி தர்மசோதி**

ஆண்டு மூன்று ஆனாலும் ஆறமுடியவில்லை எம்மால்,
இப்புவியில் உம்மை நாம் இழந்த துயரை
ஈடு செய்ய முடியாமல் தவிக்கின்றோம்
இன்று வரை இனியாரும் இல்லை எமக்கு
இப் புவியில் உங்களை இழந்த துயர் நீக்க
ஆண்டு மூன்று ஆனாலும் ஆறவில்லை
எம்மனது என்றென்றும் உங்கள் நினைவோடு
வாழ்ந்து கொண்டிருக்கும்.

அருமை மச்சான் தர்மசோதி, அண்ணன்மார்களாகிய குகராசா மற்றும் குடும்பத்தினர், சிவராஜா மற்றும் குடும்பத்தினர் (லண்டன்), Dr.தாமோதரன் மற்றும் குடும்பத்தினர்(கனடா), ராஜேந்திரன் குடும்பத்தினர்(இந்தியா)

## அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட நூற்றாண்டுப் பெருவிழா 1919 - 2019

**சிறப்புற வாழ்த்துவோர்**

- **அழகுசாதன அன்பளிப்புப் பொருள்கள் விற்பனையாளர்கள்**
  டாட் என்ரபிறைஸ்
  இல.11.12, நவீனசந்தை (உட்புறம்)
  யாழ்ப்பாணம்.
  021 222 3098/ 7622
- **பகலவன் ஸ்ரோர்ஸ்**
  பல்பொருள் வாணிபம்
  A9 வீதி, தபாற்கட்டைச் சந்தி,
  அரியாலை.
- **மருந்து மற்றும் பால்மா வகைகளுக்கு**
  கீர்த்திகா மருந்தகம்
  482, கண்டிவீதி, அரியாலை
- **இரும்பு மற்றும் மின்சாரப் பொருள்களுக்கு**
  நியூ லக்கி ஹாட்வெயர்ஸ்
  343, கண்டி வீதி, அரியாலை
  021 222 2299

(EN/9899) (11.17)

# ராசி அதிர்ஷ்டம்

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை

## உங்களுக்கு தரும் புத்தாண்டு பலன்கள்

### மேடம்

இந்த விகாரி புத்தாண்டு உங்களுக்கு சமசுகம் நல்கும். வருட ஆரம்பத்தில் பொருளாதாரம் குறைவாக இருக்கும். வருட இறுதியில் நல்ல வளமானதாக மாற்றமடையும். உடல் மெலிவு காணப்படும். கொடுக்கல் வாங்கலில் அவதானம் தேவை. சிலருக்கு இனசனம், நண்பர்களால் பொறாமைகளும் கவலைகளும் உருவாகலாம். பூமி இலாபம் உண்டாம். உங்கள் முயற்சிகளை ஆவணியின் பின் ஆரம்பிப்பது நன்மைகளை கொடுக்கும். தொழில் துறைகளில் அலைச்சல்களையும் சிலருக்கு நிம்மதிக் குறைவுகளையும் உருவாக்கலாம்.

**வைரவப் பெருமானை வணங்கி வாருங்கள். நன்மைகள் பெருகி தீமையான பலன்கள் குறைவடையும்**

### இடபம்

இந்த விகாரி வருட புத்தாண்டு உங்களுக்கு ஆரம்பத்தில் நன்மைகளை வாரிவழங்கும். புதிய வித்தை, தொழில் விருத்திகள் உருவாகும். சமூகத்தில் செல்வாக்கும், உடல் நலனும் நன்றாக அமையும். பிற தேச சஞ்சாரங்கள் நன்மைளை உருவாக்கும். வருட இறுதிப்பகுதிகளில் உங்களுக்கு அவ்வளவு நற்பலன் அமைவது கடினம். உங்கள் நடத்தைக் கோலங்களால் உங்களுக்கு நல்லதும், தீயதும் நடக்க வாய்ப்புண்டு. குருதி, மார்பு, வயிறுப்பகுதிகளில் நோய்த்தாக்கங்கள் இருக்கலாம். அவதானம் தேவை. ஏமாற்றங்கள், அவமானங்களைச் சந்திக்க நேரிடும். பேச்சைக் குறைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் வீண்பழி கேட்க வேண்டிவரும்.

**ஆறுமுகப் பெருமானை வணங்கி வாருங்கள். ஆறுதல் கிடைத்து சங்கடம் விலகும்**

### மிதுனம்

பிறக்கும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு நன்மையான சமபலனான ஆண்டாக அமைகின்றது. ஆண்டு முற்பகுதியில் அவ்வப்போது உடல் நிலையில் தாக்கங்கள் காணப்படலாம். பொருளாதாரமும் மந்த நிலையில் இருக்கும். வருட பிற்பகுதி முன்னேற்றமாக செய்காரிய விருத்தியை உருவாக்கும் காலமாக மிளிரும். சிலருக்கு பிரதேச சஞ்சாரங்களை உருவாக்கும். கொடுக்கல் வாங்கலில் அவதானம் தேவை. சினேகிதர், உறவினர்களிடையே மனவேறுபாடுகள் ஏற்படலாம். அவதானம் தேவை.

**விஷ்ணு பகவானை துளசியினால் அர்ச்சித்து வணங்கி வாருங்கள். துன்பங்கள் அகலும்**

### கடகம்

புலரும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு சமசுக ஆண்டாக அமைகிறது. நீங்கள் எடுக்கும் முயற்சிகள் யாவும் நன்மையாக நிறைவு பெறும். புதிய முயற்சிகளுக்கு செயல் வடிவம் கொடுப்பீர்கள். அதனால் உடல் உளரீதியாக புத்துணர்வுடன் காணப்படுவீர்கள். உங்களுக்கு பாராட்டுகள், புகழ்கள் வந்து சேரும். இல்லத்தில் சிறப்பான நிகழ்வுகள் நடந்தேறும். பொறாமைக்காரர்களிடம் அவதானமாக நடவுங்கள். திரவப் பொருட்களினால் பொருளாதார வளத்தை சிலர் பெறுவீர்கள்

**பத்திரகாளியையும், தாய்த் தெய்வங்களையும் வணங்கி அருளைப் பெறுங்கள்**

### சிங்கம்

பிறக்கும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு ஏற்ற இறக்கமான பலன்களை வழங்கவுள்ளது. கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. முன்பின் தெரியாதவர்களுடன் நெருங்கிப் பழக வேண்டாம். அவர்களால் அவமானம், தனநாசம் ஏற்படலாம். அவதானம் தேவை. புதிய காரியங்களில் தடைதாமதங்கள் ஏற்படலாம். பல வழிகளில் செலவுகள் அதிகரிக்கும். வருட பிற்பகுதியில் படிப்படியான முன்னேற்றங்கள் உருவாகும். பகை விலகும் ஆடை, ஆபரணச் சேர்க்கைகளும் உண்டாம்.

**சிவப்பரம்பொருளை வழிபாடாற்றி வாருங்கள். தீமைகள் அகன்று நலன்கள் கிட்டும்**

### கன்னி

பிறக்கும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு இலாபகரமாக அமைய இருக்கின்றது. ஆயினும் ஆண்டு முற்பாகம் தடை தாமதங்களும், உடல் நலக் குறைவுகளும் இருக்கும். இவை வைகாசியின் மேல் நற்பலனாக மாறும். நண்பர், இனசன விரோதங்கள் காணப்படலாம். இதனால் குடும்ப கலகங்கள் சிலருக்கு ஏற்படலாம். அவதானம் தேவை. தருமகாரியங்களில் ஈடுபாடு பிரயாணங்களில் தடை தாமதங்கள், இடையூறுகள் சிலருக்கு ஏற்படும். கொடுக்கல் வாங்கல் விடயங்களிலும் சகோதர வழியிலும் அவதானமாக இருக்கவேண்டிய காலமாகும்.

**விஷ்ணுபகவானை வணங்கி வாருங்கள். நலன் பல பெறலாம்.**

### துலாம்

பிறக்கும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு சமசுக ஆண்டாக அமைய இருக்கின்றது. எடுக்கும் காரியங்களில் வெற்றியும் காரிய அனுகூலமும் ஏற்படும். அறிவுத்திறன் மிளிரும். ஆன்றோர்களினால் பாராட்டும் நன்மதிப்பு கிட்டும். குடும்ப மகிழ்ச்சியும் காணப்படுவதோடு வெப்ப நோய்த் தாக்கங்கள் சிலருக்கு இருக்கக்கூடும். உறவுகள், நட்புக்களால் உதவி வலுப்பெற்று பிரயாணங்கள், சுபகருமங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள். திட்டமிட்ட பயணங்களால் மகிழ்ச்சி நிலையும் உருவாகும்.

**சிவசண்முகப் பெருமானை வணங்கி வாருங்கள். சங்கடங்கள் விலகி நல்வாழ்வு கிட்டும்**

### விருச்சிகம்

பிறக்கும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு சமசுக ஆண்டாக அமைகின்றது. இதுவரை நீங்கள் அனுபவித்து வந்த துன்பங்கள் குறையத் தொடங்குகிறது. உங்களுக்கு இடையூறாக இருந்த சத்துருக்களை வென்று வருவீர்கள். புதிய பதவிகள், இடமாற்றங்கள் அனுகூலமாக அமையும். சிலருக்கு இனசன விரோதம், மனச்சோர்வுகள் அலைச்சல், உடல் பலவீனம், அவமானம் என்பன பிறரின் பொறாமையால் வந்து நீங்கும். அதிக செலவு இருந்தாலும் தன தானிய கஷ்டம் நிலை இருக்காது. கொடுக்கும் வாக்குறுதிகளை முன்யோசனையுடன் கொடுங்கள்.

**துர்க்கை அம்மனை வணங்கி வாருங்கள்.துன்பங்கள் பறந்தோடும்**

### தனுசு

பிறக்கும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு அவதானமாக இருக்க வேண்டிய ஆண்டாக அமைகிறது. உடல் நிலையில் அவ்வப்போது நோய்த் தாக்கங்கள் ஏற்படலாம். குடும்பங்களில் மன அமைதிக் குறைபாடுகள் தோன்றும். கடன்படும் நிலை உருவாகலாம். நண்பர்களிடையே கொடுக்கல் வாங்கல்களில் நாணயத்தைக் கடைப்பிடிப்பது நன்று. அதிக செலவுகளை செய்து கடன்படும் நிலைக்கு ஆளாகாதீர்கள். பிறநாட்டுப் பயணங்கள் தூரதேசப் பயணங்கள் இழுபறியின் மத்தியில் அமையும். ஆனால் அவற்றினால் அனுகூலமான நற்பலனை எதிர்பார்ப்பது கடினம்.

**தெட்சனாமூர்த்தியையும், குருவானவர்களையும் போற்றி வணங்குகள். சங்கடங்கள் தீரும்**

### மகரம்

பிறக்கும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு சிறப்பான நன்மைகளை வாரி வழங்கும் ஆண்டாக அமைகிறது. இனசன கொண்டாட்டங்கள், காரிய சித்திகளையும், வெகுமதிகளையும் வழங்கும். கோபத்தைக் குறைத்து ரோகத்தில் இருந்து நிவர்த்தியாக இறைவழிபாடு செய்யுங்கள். சிலருக்கு தனித்த நிலை, அவமதிப்பு, உறவினர் நண்பர்களுக்கிடையே மனஸ்தாபம், உடல்மெலிவு, மனக்கவலை தோன்றும். இவற்றால் உங்களின் செயற்பாடுகளினால் அதன் தாக்கம் அதிகமாகவோ, குறையவோ வாய்ப்புண்டு. வெளியிடப் பிரயாணங்கள் செய்தொழில்களில் நன்மைகள் உண்டாகும். ஆடை, ஆபரண புதிய பொருள் சேர்க்கை உண்டு.

**விநாயகரை வணங்கி வாருங்கள். விக்கினங்கள் தீர்ந்து நன்மையடைவீர்கள்**

### கும்பம்

பிறக்கும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு அமோக வெற்றிகளை கொடுக்கும் சிறந்த ஆண்டாக அமையப் போகின்றது. தொடங்கும் காரியங்களில் வெற்றியும் காரிய அனுகூலங்களும் ஆன்மீக யாத்திரைப் பயணங்கள் உண்டாம். தொட்டதெல்லாம் துலங்கும். உறவினர், நண்பர்களால் நன்மையும் பொருளாதார வளமும் சிறக்கும். சிலருக்கு உடல்மெலிவும் வாதநீர் ரோகங்களும் ஏற்படலாம். பரிசு பாராட்டுக்கள் கிடைக்கும். ஆன்றோரால் சிறப்பளிக்கப்படுவீர்கள். மங்களகரமான நிகழ்வுகளில் பங்கு கொள்ளுதல் அவற்றால் நன்மைகளும் அந்நிய தேசத்தால் நன்மைகளும் உண்டாம்.

**குருவளையும், திருவருளையும் பெற்று நல்வாழ்வு பெறுங்கள்**

### மீனம்

பிறக்கும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு சமசுக ஆண்டாக அமைய இருக்கின்றது. உறவினர், நண்பர் மூலம் நல்லாதரவும், பொருளாதார வளமும் சிறப்பாக அமையும். சிலருக்கு வெளியூர்களில் இருந்து நன்மைகள், திடீர் அதிர்ஷ்டம், தனதானிய நன்மைகள் ஏற்படும். புதிய தொழில் நன்மை, புதிய இடமாற்றங்கள் ஏற்படுமாம். ஆன்மீக தருமச் செயல்களில் நாட்டமும் அதனால் நன்மையும் உண்டாம்.

**குருவழிபாடு நன்மையை கொடுக்கும்.**

அதிர்ஷ்டத்திற்கான நல்ல சகுனம்.


அனைவருக்கும்
இனிய சித்திரைப் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்
BLC CAMPUS
WWW.BLCCAMPUS.COM
BLC
CAMPUS
BLC
CAMPUS
BRITISH LADER COLLEGE
Brown Road,
Jaffna.
E-mail: info@blccampus.com
Web: www.blccampus.com




## காணி விற்பனைக்குண்டு

சாவகச்சேரி, உணாவில்
A9 வீதியிலிருந்து 250 M தூரத்தில்
வீடு கட்டுவதற்கு ஏற்ற கிணறு.
மலசலகூட வசதியுடன் 2½ பரப்புக்
காணி விற்பனைக்குண்டு.

**075 281 9939** (CS/24632) (11.17)

## காணி விற்பனைக்கு

யாழ் இராச வீதியில்
(கோண்டாவில் இருபாலை வீதி
சந்திக்கண்மையில்) வடக்குப்
பக்கமாக வீடுகட்டுவதற்கு உகந்த
10½ பரப்பு தோட்டக் காணி
விற்பனைக்கு உண்டு. (CS 24680) (14.17)

**077 779 8051**

## காணிகள் விற்பனைக்குண்டு

வல்வெட்டித்துறையில் கொண்டல்
கட்டை ஒழுங்கையில் மூன்று
ஒவ்வொரு பரப்புக் காணிகள்
விற்பனைக்குண்டு.

**076 925 5611,**
**077 293 1343** (IN/12090) (11.17)

## காணி விற்பனைக்குண்டு

வல்வெட்டித்துறைச் சந்திக்கு அருகில்
உலகுடைய பிள்ளையார் வீதியில்
ஒரு பரப்பும் 6 குளிகளுமுடைய
ஒரு காணி விற்பனைக்குண்டு.

**077 293 1343** (CS/24652) (11.17)

## மானிப்பாய் இந்துக்கல்லூரி

**(தேசிய பாடசாலை)**

**க.பொ.த (உ/த) - 2021 மாணவர் அனுமதி**

எமது கல்லூரியில் பொறியியல் தொழில்நுட்பம். உயிர் முறைமை தொழில்நுட்பம். கணித விஞ்ஞான. வர்த்தகப் பிரிவுகளுக்கான அனுமதிகள் கோரப்பட்டுள்ளன.

தகுதியான மாணவர்கள் இன்று முதல் விண்ணப்ப படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் விண்ணப்ப முடிவுத்திகதி 30.04.2019

**குறிப்பு :**

- தொழில்நுட்ப பிரிவுக்கு மாணவிகளும் இணைத்து கொள்ளப்படுவர்.
- கல்வி, விளையாட்டு, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் விசேட திறமையினை வெளிப்படுத்துகின்ற மாணவர்களிற்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.
- வெளிமாவட்ட மாணவர்களிற்கு விடுதி வசதி செய்து தரப்படும்.

**அதிபர்.**






## மரண அறிவித்தல்கள்



### திருமதி சரஸ்வதி அற்புதராசா

வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் தற்போது புன்னாலைக்கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி அற்புதராசா 10.04.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பி.எஸ்.ஆறுமுகம்பிள்ளை ராசநாயகி தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தசாமி மனோன்மணி தம்பதிகளின் மருமகளும் அற்புதராசாவின் (செட்டி, சாவகச்சேரி) அன்பு மனைவியும், பவானி(கனடா), சதீஸ்குமார்(சுவிஸ்) ஆகியோரின் தாயாரும் நந்தகுமார்(கனடா), சரணியா(சுவிஸ்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**புன்னாலைக்கட்டுவன்,**
**பலாலிறோட், புன்னாலைக்கட்டுவன்.**

(CS 24692) (14,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**0775802211 - பொன்தவராசா**
**0776728352 - K.மகேந்திரன்**



தோற்றம் 13 . 01 . 1942

மறைவு 12 . 04 . 2019

### கனகேஸ்வரி தர்மரத்தினம்

**(வெள்ளையற்ற நல்லதம்பியின் பேர்த்தி)**

காரைநகர் சம்பந்தர் கண்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகேஸ்வரி தர்மரத்தினம் கடந்த 12.04.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெள்ளையற்ற நல்லதம்பியின் பேர்த்தியும் காலஞ் சென்றவர்களான கனகநாயகம் (அரச உணவு களஞ்சியப் பொறுப்பாளர்), சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், மலாயன் பென்சனியர் அருணாசலம் வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் கலாநிதி வேலுப்பிள்ளை தர்மரத்தினத்தின் (வாழ்நாள் பேராசிரியர் - யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிறாப்பர் திருச்சிற்றம்பலம் - நாகம்மா தம்பதிகளின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2019) திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சம்பந்தர் கண்டி.**
**காரைநகர்.**

தகவல்:
**கலாநிதி வே.தர்மரத்தினம் (கணவர்)**
**0777589937**

## மரண அறிவித்தல்கள்

### தம்பு ஜெயசந்திரன்

**(இளைப்பாறிய வைத்திய ஆய்வுகூட உதவியாளர்)**



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு ஜெயசந்திரன் 12.04.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2019) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பொரளை ஜெயரட்ண மண்டபத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/24702)(11,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**0777625794**

### கனகசபை நல்லையா

*(ஓய்வு பெற்ற காவற்துறை உத்தியோகத்தர்)*



**இறப்பு 09.04.2019**

யாழ். தோப்பு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை நல்லையா 09.04.2019 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும் பாஸ்கரன் (லண்டன்), மாலினி (லண்டன்), பவானி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான பொன்னையா தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜானகி (அவுஸ்திரேலியா), ஏகாம்பரம் (லண்டன்), பிரதாபன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பாலசுப்பிரமணியம் (இலங்கை), காலஞ்சென்ற கணேசமூர்த்தி, சிவஞானம் (லண்டன்), வள்ளிநாயகி (லண்டன்), சுந்தரமூர்த்தி (லண்டன்), அருளானந்தம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காருண்யா, ஸ்ரீநிதி, சாம்பவி, அஞ்ஞனா, மேதா, மதுரா, கணாதிபன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2019) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தோப்பு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அச்சுவேலி, தோப்பு.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

### ஸ்ரீமதி சிவகாமி அம்மா சந்திரசேகரஐயர்



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி சிவகாமிஅம்மா சந்திரசேகரஐயர் 12.04.2019 வெள்ளிக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகர ஐயரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையர் சுவர்ணம்பாள் தம்பதிகளின் புத்திரியும் காலஞ்சென்றவர்களான வைத்தீஸ்வரக்குருக்கள் இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கங்கா மற்றும் ஞானசேகரக்குருக்கள், பவானிஅம்மா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சகஸ்ரநாமம், கமலாம்பாள், கணபதிச்சாமிக்குருக்கள், கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் வைத்தியநாதசர்மா, காலஞ்சென்றவர்களான இரகுநாதசர்மா, சண்முகநாதசர்மா மற்றும் இரவீந்திரநாதசர்மா (ஜேர்மனி), சந்திரவதனி, மங்களேஸ்வரி, ஜெகநாதசர்மா (JP) ஆகியோரின் அன்புத் தாயாரும் அமுதாம்பிகை, ஜெயஸ்ரீ, இராஜேந்திரசர்மா, சந்திரமோகன், ஜானகி, சுசீந்திரகுமாரகுருக்கள் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**17/35, கலட்டி முந்தல் ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

தகவல்: **பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

**0212220069**

## தவறிவிட்டது

தாவளை இயற்றாளை வரணியை சேர்ந்த தம்பையா சிவசரணம் என்பவரின் சாரதி அனுமதிப் பத்திரம் 01.04.2019 அன்று கொடிகாமத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கு மிடையில் தவறவிடப்பட்டுள்ளது. எனவே இதனை கண்டெடுத்தவர்கள் கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**T.P: 077 087 3674, 077 7117985**

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவரான மருத்துவபீடத்தின் உடற்கூற்றியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான

**Dr. (திருமதி) சிவநந்தினி உதயகுமார்**

அவர்களின் அன்புத்தாயாரான ஓய்வுபெற்ற பதிவுபெற்ற வைத்தியர்

**திருமதி**
**பார்வதிதேவி சிவானந்தம் (சிந்தா)**

அவர்கள் கடந்த 08.04.2019 அன்று இறைபதம் எய்தினார். அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதிபெற பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்**

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.கோயில் வீதியிலுள்ள வீடு உடன் வாடகைக்கு உண்டு. 4 பரப்புக் காணியில் நாற்பக்கச் சுவரும். 4 அறைகளும். 3 குளியலறைகளும். 4 மலசல கூடமும். வாகனத்தரிப்பிடம். 2 சமையல் அறைகள். 3 AC. 12 காற்றாடிகளுடன் நவீனவசதி கொண்ட வீடு St John Bosco பாடசாலைக் கும் புகையிரத நிலையம் மற்றும் கச்சேரிக் கும் அண்மையில் வாடகைக்குண்டு.

**071 856 5375,**
**0061 41288 2645**

(CS/24694)
(11,17)

# மரண அறிவித்தல்



மலர்வு 17.06.1932
உதிர்வு 11.04.2019

## துரைசாமி மகேந்திரம்

(முன்னாள் பணிப்பாளர் நிதி திணைக்களம் வடக்கு கிழக்கு மாகாண சபை)

மலேசியாவில் சிரம்பான் என்னும் இடத்தை பிறப்பிடமாகக் கொண்டும் தென் புலோலியில் உபய கதிர்காமம், கொழும்பு கொள்ளுபிட்டி ஆகியவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட துரைசாமி மகேந்திரன் கொழும்பில் 11.04.2019 வியாழக்கிழமை பகல் 01.00 மணியளவில் இறையடியெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற துரைசாமி, சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பு வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், திருமதி.தலைட்சுமி யின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற கனகாம்பிகை, சரஸ்வதி மற்றும் நவரட்ண ராஜா (கனடா) அவர்களின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற நடராஜா, தம்பு மற்றும் காந்திமதி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் மனோகரன், மனோராசன், மனோரஞ்சன், விஜயா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கல்யாணி, கிரிஜா, கீதா மற்றும் பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரசன்னா, அஞ்ஜனா, அபிநயா, அனோஜன், நிருத்திகா, தர்ஷா, சாலினி, அத்மிகா ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 139, முகாந்திரம் வீதி (கொழும்பு 03) இல்லத்தில் வைக்கப்பட்டு 15.04.2019 திங்கட்கிழமை 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று காலை 12.30 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
மனோரஞ்சன் - 071 6005035
பாஸ்கரன் - 077 7704303

தகவல்
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



சூறாவத்தை முத்துமாரி அம்மன் கோவில் பரம்பரை அங்கத்தவர் அமரர் **மகேஸ்வரலிங்கத்தின்** மனைவியும் தற்போதைய நிர்வாக சபை தலைவர் **சுயம்புலிங்கத்தின்** தாயாருமாகிய

**மகேஸ்வரலிங்கம் கௌரியம்மா**வின்

மறைவிற்கு அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

சூராவத்தை
சுன்னாகம்

**ஆலய பிரதான குருவும் பரிபாலன சபையினரும்**

# அறிவித்தல்

எமது ஸ்ரார் ரெஸ்ட் ( **Star Rest** ) வியாபார ஸ்தாபனத்தினால் சின்னப்புதுக்குளம், வவுனியாவில் அமைந்துள்ள **Thampa Jourist Hotel Pvt Ltd** பெயர் கொண்ட **Hotel** ஐ இதுவரை காலமும் நடத்தி வந்தோம். கடந்த 5ஆம் திகதியிலிருந்து **(April 5)** அந்த வியாபார குத்தகை உடன்படிக்கையிலிருந்து சட்ட ரீதியாக முடிவுறுத்தியுள்ளோம். ஆகையால் ஏப்ரல் 5 இல் இருந்து மேற்படி **Hotel** முகாமைத்துவத்தை முடிவுறுத்திய காரணத்தினால் அதற்குப் பின் நடைபெறும் எந்த ஒரு நடவடிக்கைக்கும் **Star Rest** பொறுப்பாகாது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தகவல் ஏதேனும் தேவைப்படின் கீழ் உள்ள தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

**077 766 0396**
**Hotel Star Rest**
**A9 வீதி, பரந்தன்**

(AKN/694)(11,17)

ES Printers

மக் பிரிண்ட் (MUG) 450/=




021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி கௌரியம்மா மகேஸ்வரலிங்கம்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கௌரியம்மா மகேஸ்வரலிங்கம் நேற்று (13.04.2019) சனிக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) - அன்னலட்சுமி தம்பதிகளின் புதல்வியும் ஏழாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - வள்ளியம்மை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற மகேஸ்வரலிங்கத்தின் அன்பு மனைவியும் சுயம்புலிங்கம் ஐயா (இணுவில் சிவன்கோவில் தர்மகர்த்தா). கோகிலவர்ஷினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவபூசணி (ஆசிரியர் வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்) அன்பு மாமியாரும் காலஞ்சென்ற பரமேஸ்வரன், கெங்கா தரன், சிவஞானதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சந்திரலிங்கம் மற்றும் சிவகாமி ஞானாம்பிகை, செந்திருசெல்வி, காலஞ்சென்ற ரத்தினசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.04.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 24709/15/18)

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணி பாலச்சந்திரன்

(முன்னாள் நூலக உதவியாளர், கரைச்சிப்பிரதேச சபை, கிளிநொச்சி)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் திருவையாறு கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் தற்போது பொற்பதி வீதி, கொக்குவிலில் வசித்து வந்தவருமான திருமதி தவமணி பாலச்சந்திரன் 11.04.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலச்சந்திரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அம்பலம் - தெய்வானை தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினராசா - சிவகாமி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இராசேந்திரத்தின் (ஓவசியர்) அன்புப் பேர்த்தியும், வினோயா (யாழ்ப்பாணம்), பிரசாத் (கனடா), பிரசன்னா (பெல்ஜியம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகுமார் (குரு ஹாட்வெயார், கிளிநொச்சி), நிருசா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், வேணுஜன், ஹம்சிஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இந்திராதேவி (கிளிநொச்சி), விசுவலிங்கம் (கிளிநொச்சி), காலஞ்சென்ற இந்திரதாஸ், கௌரி (கிளிநொச்சி), பால சரஸ்வதி (வவுனியா), காலஞ்சென்றவர்களான யோக ராணி, சஜீகா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயகௌரி (யாழ்ப்பாணம்), சந்திரவதனி (லண்டன்), காலஞ்சென்ற பாஸ்கரன், கமலாசனி (லண்டன்), கோசலாதேவி (கனடா), பாலராஜ் (கனடா), காலஞ்சென்ற சுரேஸ் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், யசோதரனின் (உளவளத் துணையாளர், கிளிநொச்சி) சிறிய தாயாரும் பிரபாகரன் (கனடா), பார்த்தீபன் (லண்டன்), மிருணாளினி (கனடா), விசாலி (கனடா), மாதங்கி (கனடா), விதுர்சி (கனடா) ஆகியோரின் பெரியம்மாவும், முரளிதரன் (நோர்வே), சுவர்ணா(லண்டன்), சசிதரன் (யாழ்ப்பாணம்), சஞ்யுதா (யாழ்ப்பாணம்), ஆதவன் (கனடா), ஆர்த்தி (கனடா), கருணாகரன் (கிளிநொச்சி), யாழினி (கிளிநொச்சி), காலஞ்சென்ற பவானி, ரஜீவன் (கிளிநொச்சி), றஜிந்தன் (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2019) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரது கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிளிநொச்சி, இரணைமடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**59/7, பொற்பதி வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 222 0308, 077 869 1045**

(CS 24704)(11,17)

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 26 . 03 . 1944

இறப்பு 11 . 04 . 2019

### தம்பித்துரை சின்னப்பிள்ளை

கொடிகாமம் நாவலடியைப் பிறப்பிடமாகவும் விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை சின்னப்பிள்ளை 11.04.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் பொன்னி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான மாதன் மாணிக்கம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற தம்பித்துரையின் அன்பு மனைவியும் சந்திரகுமார், சறோசா, சந்திரராசா (ஜேர்மனி), சாந்தினி (சரஸ்வதி முன்பள்ளி கட்டைப்பிராய்), ஜெயசீலன் (சமுர்த்தி உத்தியோகத்தர், தென்மராட்சி பிரதேச செயலகம்), சசிகலா (யாழ் பொதுசன நூலகம்), சந்திரகலா, கேதீஸ்வரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சத்தியதவம் (ஆசிரியை யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி) காலஞ்சென்ற யோகரத்தினம் மற்றும் சுஜீவா (ஜேர்மனி) காலஞ்சென்ற பரமேஸ்வரன் (ஆசிரியர்) மற்றும் ஸ்ரீவிஜயகௌரி (தாதிய உத்தியோகத்தர் - யாழ் போதனா வைத்தியசாலை), ஸ்ரீகுகன் (யா/புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயம்), விஜயகுமார், திருமாலினி(தாதிய உத்தியோகத்தர் - சங்கானை ஆதார வைத்தியசாலை - ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும் மிகிந்தன், சுதர்சன்(ஜேர்மனி),மயூரன், தனுசன்(சதோசா, பருத்தித்துறை), சஜீவன், தர்சன், பிருந்திகா, பிரியந்தன், பிரவீணன் ,சங்கவி, சலோமி, துசாரன் (ஜேர்மனி), தாரிகன் (ஜேர்மனி), ஓவியா(ஜேர்மனி), தருணன், தய்மதுரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2019) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விளையாட்டரங்க வீதி,**
**கோப்பாய் தெற்கு, கட்டப்பிராய்.**

(CS 24679)
(14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



மண்ணில் 10 . 08 . 1953

பரலோகத்தில் 11 . 04 . 2019

### திருமதி நவமணி கந்தசாமி

யாழ். சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் சங்கானை காளி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவமணி கந்தசாமி கடந்த (11.04.2019) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி - கோகிலாதேவி (கனகம்மா) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் கந்தசாமியின் (ராசா) ஆருயிர் மனைவியும் பகீரதன், வினோதன், பிருந்தா, ரஜிதா, பார்த்தீபன், ஜோசிதா, கீர்த்தா ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிரியா, பிரியதர்சினி, உதயசங்கர், மனோகரன், சமந்தி, தேவராஜ் ஆகியோரின் அன்பு மாமியாரும் திலகவதி, விக்னேஸ்வரி, பாலமுரளி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகராசா, தேவதாஸ், செல்வராஜா, விஜயகுமார், உமாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரியங்கன், அபிஷா, பிரியங்கா, ராகவி, சந்தோஷ், அபிஷேக், சகானா, ஷாம், போல் ஜொபின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் குமுதினி, பிரபாகரன், கருணாகரன், கபில்ராஜ், ஸ்ரீஸ்கந்தராஜன், கல்பனா ஆகியோரின் அன்புச் சித்தியும் சயந்தன், விஜிந்தன், பிரசாந்த் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (15.04.2019) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் சங்கானை கரைச்சி மயானத்தில் திருவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**காளி கோவிலடி,**
**சங்கானை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 23136/15/17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஸ்ரீ றஞ்சன் நந்தினி



வளாக வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் தற்போது பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீ றஞ்சன் நந்தினி 11.04.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம் - தனலட்சுமி தம்பதிகளின் மகளும், மனோகரி, சுபாசினி, சுபாஸ்கரன் ஆகியோரின் சகோதரியும், அகிலன், கபிலன், சஞ்ஜீவ், கீர்த்திகா (பிரான்ஸ்), கோபிறாஜ் ஆகியோரின் சிறிய தாயாரும், பிரபாகரன் (பிரான்ஸ்), சரணியா ஆகியோரின் மாமியாரும், றேமிகா, கோபிகா (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.20, பூதவராயர் வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு,**
**யாழ்ப்பாணம்.**

(CS/22393)(11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 635 4224, 077 610 3291**

### தர்மராஜா ஜெகதீசன் (செட்டியார்)

*(பிரபல தொழிலதிபர்)*



K.K.S வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் ஓடை ஒழுங்கை, சவனாய் புலோலி வடக்கு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மராசா ஜெகதீசன்(செட்டியார்) 13.04.2019 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மராஜா கௌரியம்மாள் தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற பூபாலநாயகி, ரத்தினநாயகி மற்றும் ருத்ராபதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் ஜெகச்செல்வன், ஜெகன்மோகன், ஜெகப்பிருந்தா, ஜெயப்பிரகாஷ், ஆகியோரின் பாசமிகு தந்தையும் வருணி, சியாமளா, ஜெயப்பிரகாஷ், நவகார்த்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெகப்பிரவீன், மகாவைஷ்ணவி, கௌசல்யா, ஜெய்ஷன், ஜெய்ரிஷான், ஜெகப்பிரியன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2019) திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோரியடி இந்துமயானத்துக்கு காலை 9.00 மணிக்கு அன்னாரின் பூதவுடல் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:குடும்பத்தினர்.**

### திருமதி மேரிஹெலன் அமிர்தநாதர்



**தோற்றம் 25.03.1931 மறைவு 11.04.2019**

மிருசுவில் பழைய வாய்க்காலைப் பிறப்பிடமாகவும் உசன் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி ஹெலன் அமிர்தநாதர் 11.04.2019 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை பிரான்சிஸ்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை மேரிமுத்து தம்பதிகளின் மருமகளும் சூசைமரியதாசனின் சகோதரியும் அன்னமேரி மாக்கிறேட் பூபதியின் மைத்துனியும் காலஞ்சென்ற அமிர்தநாதரின் பாசமிகு மனைவியும் அமல்நாதன், ஜெகநாதன், இன்பநாதன், புஸ்பநாதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பேபி, சுகுணா, சுகந்தி, ஜெயந்தி ஆகியோரின் மாமியாரும் லாவண்யா நிசாந்தன், டிலான், அனோஜ், அனிஸ்ரன், தர்சிகா, ஷாம் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் நிவிஷாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (15.04.2019) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலியின் பின்பு புனித நீக்கிலார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கண்டி வீதி,**
**மிருசுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 525 0882**

# கண்ணீர் அஞ்சலி



வையத்துள் 16 . 06 . 1981

வானகத்துள் 12 . 04 . 2019

## மரியதோமஸ் அன்ரன் கொன்சலஸ்

நீ மறைந்த செய்திகேட்டு
இடிந்து போனது மனமும் ஒருகணம்
தாங்கமுடியவில்லையடா
தவிக்கின்றோம் போய்வாடா நண்பா.

நண்பர்களாக பல்கலைக்கழகத்தில் இணைந்தோம்
பல்கலையில் ஒன்றாக கற்றோம்
நண்பர்களாக சுற்றித்திரிதோம்
பல்கலைக்கழகம் சிறியதாய் தெரிந்தது
நம் நட்புறவால்

மகிழ்ச்சியால் நாழிகை பல கடந்தன
உன் சிரிப்பூட்டலில் மட்டுமே நண்பா!
உன் நினைவுகளை வாழ்வில் மறந்திட
எம்மால் இயலாதடா நண்பா!

நினைத்துப்பார்த்தால் துயரம் மட்டுமே!
பெரும் மலைபோல
இன்று நீமட்டும் தனியாக
எம்மை விட்டுப்போக
நினைத்தது ஏனடா நண்பா!
விடைதெரியாமல் அழுகின்றோம்.
விம்மி விம்மி நீ இன்றி.

எமது உயிர்த்தோழனின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர், அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.**

அழுத விழிகளுடன்

**நண்பர்கள்: மொறட்டுவ பல்கலைக்கழக**
**பொறியியல் பீடம் (2002/2003 வருடம்)**




## மகோற்சவ குருவின் அருளாசியுரை



சிவபூமி என விளங்கும் இலங்கை மணித் திருநாட்டின் வடபால் அமைந்த பான் வெள்ளைப்புற்றடி என்னும் பதியில் எழுந்தருளி அடியவர்களின் இடர்களைக் களைந்து அருள் பாலித்துக் கொண்டு இருக்கும் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் திவ்வியமான மகோற்சவ விழாவில் சர்வமங்கலம் பொருந்திய விகாரி வருடப்பிறப்பான இன்று விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப் பெருமான் அழகிய தேரில் ஆரோகணித்து மஹா ராஜவீதியில் வலம் வந்து அருள் பாலிக்கின்ற சுப வேளையில் ஆகமங்கள் கூறுகின்ற வகையில் அடியவர்களின் அனைத்துவித விருப்பங்களும் நிறைவேறவும் நீண்ட ஆயுள் பெறவும் லக்ஷ்மி கடாட்க்ஷம் கிடைக்கவும் பக்திநெறி வளரவும் விநாயகப் பெருமானின் பாதம் பணிந்து அருளாசி கூறுகின்றேன்.

**நா.குகணேசக் குருக்கள்**

## அருளாசிச் செய்தி



இன்று புது வருடப் பிறப்பு நன்னாள் இந்த நல்ல நாளிலே மண்கும்பான் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேரேறி வந்து அருள்பாலிக்கும் ஆனந்த கோலாகல நிகழ்வு சிறப்பம்சமாகும். அழகான தேரிலே ஆரோகணித்து அடியார்களுக்கு கிருபா கடாட்சத்தை அள்ளி வழங்கும் ஆனைமுகப் பெருமானின் அற்புத நிகழ்வு கண்கொள்ளாக் காட்சியாகும்.

இன்று விகாரி வருடம் பிறந்திருக்கின்றது. இந்த வருடமாவது தமிழர் தம் வாழ்வில் நன்மைகளைத் தந்து ஆக்க பூர்வமான நல்லனவற்றை நடைமுறைப்படுத்தி எல்லோரும் சுகமாகவும் சுபீட்சமாகவும் மங்களகரமாகவும் மாண்புகள் மிக்க சிறப்பான வாழ்க்கையில் தூய்மையைப் பெற்றுக் குதூகலிக்க அருளாசிகள் நல்கி மகிழ்சியுடன் வாழ்த்துகின்றோம்.

மண்கும்பான் வீரகத்தி விநாயகரின் திருவருள் துணைகொண்டு அவரது அடியார் பெருமக்கள் அனைவரும் ஆனந்தமான சிறப்பான வாழ்வில் திளைத்திருக்க வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து ஆசி வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

" என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஆதீன குரு முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் - இரண்டாவது குருமஹா சந்நிதானம்**

## பொருளாளரின் வாழ்த்து



எல்லோரதும் வணக்கத்துக்கும் வழிபாட்டுக்கும் உரிய ஆலயமாக சப்த தீவின் வாசலில் அமர்ந்திருக்கும் சிறீ வீரகத்தி விநாயகப் பெருமான் இன்று சித்திரத்தேர் ஏறி கண்கொள்ளாக் காட்சி தருகின்றார். அதீத வளர்ச்சி கண்டுவரும் எம்பெருமானின் ஆலயம் இராஜகோபுரம், சித்திரத்தேர் என விரிவடைந்து ஆலய கூரைகள் சிதிலமடைந்திருந்த நிலைமாறி இன்று வில் மண்டபமாக மூடு சாந்து இடப்பட்டு முழுப் பொலிவுடன் அழகுக் காட்சியாக மிளிர்கின்றது.

கடினமாக வாழ்க்கைப் பயணத்தில் தம் கஸ்டங்களைப் போக்கவல்ல ஒரு தெய்வமாக இன்று அடியவர்க்கு இருந்து அருள்பாலிக்கும் வீரகத்தி விநாயகனின் ஆலயத்தை மிடுக்குடன் திகழ வைக்க வேண்டும் என்கின்ற எம் அடியார்களின் வேணவா இன்று நிவர்த்தியாகி வருகின்றது.

சிறுகச் சிறுக அடியார்கள் செய்துவரும் உதவிகள் பல்கிப் பெருகி ஆலயம் யாருமே நினைக்க முடியாத அளவுக்கு எழில்வடிவம் பெற்றுள்ளது என்றால் ஊர் அடியவர்களினதும் புலம்பெயர் தேசத்தில் வாழும் எம் பெருமானின் பக்தர்களின் தாராள உதவிகளும் தான் மூலகாரணம்.பொருளாகவும் பணமாகவும் வாரி வழங்கி திருப்பணி வேலைகளைத் திருப்தியுடன் செய்வதற்கு ஆதரவாக இருந்து வரும் பக்தருக்கெல்லாம் எம் விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களின் சித்தம் கைகூடும் என்பது திண்ணம்.எம் ஆலயம் சப்த தீவிலேயே கம்பீரமாகத் திகழ வேண்டும் என்கின்ற எண்ணம் மண்கும்பான் மெய்யடியார்களுக்கு ஆழ்மனதில் நிறைந்திருப்பதால் அவர்கள் இன்னும் இன்னும் தம் உழைப்பை உதவி ஒத்தாசைகளை வழங்கி வெகு வேகமாக எம் பெருமானின் சகல திருப்பணிகளும் பூர்த்தி காண வைப்பார்கள் என்பது எம் நம்பிக்கை.

**பொருளாளர் - ந.ஆனந்தன்**

## ஆலய வரலாறு

மண்கும்பான் வெள்ளைப் புற்றடியில் வீற்றிருந்து அடியார்களுக்கு அரு
விகாரி வருடப் பிறப்புச் சித்திரை முதலாம் திகதி இன்று (14.04.2019) எ
வருகிறார். அந்தத் தேர்த் திருவிழாவை முன்னிட்டு வெளிவரும் இம்
வரலாற்றைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடை கின்றேன். பண்டைக் கா
ஊர்காவற்றுறை. அத்துறை வழி யாக வைத்திலிங்கச் செட்டியார்
யாழ்ப்பாணத்தில் கோயில் அமைக்க எடுத்து வந்தார். வரும் வழியி
எடுப்பதற்காகக் குறித்த இவ் வெள்ளைப் புற்றடியில் வைத்துள்ளா
விக்கிரகங்களை எடுத்த போது எம் பிள்ளையாரைத் தூக்க முடியவில்லை
விட்டு காவோலையால் நிழல் அமைத்து உள்ளவர்களைப் பராமரிக்குமா
பின்னர் ஊரவர்களாகிய எமது மூதாதையர் குடில் அமைத்து ஆலயமா
தொன்மையை கோயில் பதிவேடு எடுத்துக் காட்டுகின்றது. யாழ்ப்
1769,1832 ஆம் ஆண்டு பதிவேடுகளில் பதியப்பட்டுள்ளமை ஆல
சாற்றுகின்றன. ஆலயம் அமைந்துள்ள காணி உறுதி விநாயகர்
சான்றாகும். இவ்வாலயம் அமைந்துள்ள சூழல் அன்று வெள்ளை மணல்
காணப்பட்டன. அம்மணல் கும்பிகளில் எலிகளாலே புற்றுக்கள் எடுக்க
வெள்ளை மணல் புற்றுக்களாக இருந்ததனால் அச்சூலில் அமைந்த
பிள்ளையார் என அடியார்கள் பெயரிட்டு அழைத்திருக்கலாம் எனக் கொள்
இருந்த ஆலயம் கற்களால் அமைத்து கிணறுகளும் கட்டி உள் வீதியைச்
அகலம் கொண்ட சுண்ணாம்பால் கட்டப்பட்ட மதில்களும் அமைந்திருந்
சுப்பிரமணியம் வினாசித்தம்பி அவர்கள் சிறப்பு இடம்பெறுவார். மூலஸ்
அர்த்த மண்டபத்தினையும் வெள்ளை வைரக்கல்லால் அமைத்து
1951ஆம் ஆண்டு கும்பாபிஷேக நிகழ்வு அனைவராலும் சிறப்பாகப் பே
குறிப்பிடத்தக்க வளர்ச்சி வந்ததனை வழிபடுவோர் சபையால் ஆலய
பொறுப்பேற்கப்பட்டபின்னராகும். தொடர்ந்து பல கும்பாபிஷேகங்கள் சிற
இருந்து 1990ஆம் ஆண்டு காலப்பகுதியை ஆலயவளர்ச்சியின் பொற்கா
.மண்டபம் அமைக்கப்பட்டு தேர்த்திருவிழா ஆரம்பிக்கப்பட்டது. இக்
சுற்றுமதில் அமைக்கப்பட்டன . ஆலய வளர்ச்சியின் அடுத்தகாலகட்
குடியேறிய 2000 ஆம் ஆண்டுக்குப்பின்னார்ராகும். இக்காலப்பகுதியி
செய்யப்பட்டு 2005 ஆம் ஆண்டு ஆவணி 21 இல் கும்பாபிஷே
நிலத்துக்கு றொராசோ போடப்பட்டது. வசந்த மண் டபமும் தேர் முடி
மடண்டபம் புதுப்பிக்கப்பட்டு.கலியாண மண்டபமும் அமைக்கப்பட்டு
புற்று விளங்குகின்றது. ஏவிளம்பி வருடப்பிறப்பில் நடைபெறும் தேர்த்திரு
பத்திரிகையில் வெளிவரும் அம் மலரில் எனக்குத் தெரிந்த சில தக
அடைகின்றேன். நடராசா தனபாலசிங்கம் தலைவர்.மண்கும்பான்
விநாயகர் தேவஸ்தானம்.

## விழா சிறப்புற வா

நடராசா கஜந்தன்
**நியூ மைதிலி ஜுவல்லர்ஸ்**
38. 40. கல்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்
E-mail newmaithily40@gmail.com
T.P: 021 221 7878/ 021 221 7877

**லலிதா ஜுவல்லறி**
தங்கப்பவுண் வியாபாரம்
இல. L.75, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்
021 222 2863
077 6183 302

**கந்தவேலன் றேடர்ஸ்**
110, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.
021 222 2822
Fax: 021 222 4496

**ஐங்கரன் மோட்டோர்ஸ்**
137, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**பாலவிநா**
**மோட்டோ**
No.8, ஸ்ரான்லி
யாழ்ப்பாணம்

**YK PLAZA**
Electronics & Furniture Showroom
No. 39, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.
021 222 3530/070 304 3636
ykplazajaffna@gmail.com

**நியூ நகுலா ஜுவல்லறி**
இல. 45, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
021 222 4101
**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
No. 30, 32. Kasthuriar Road,Jaffna.
021 222 5511
**நியூ நகுலா ஜுவல்லறி**
இல. 109, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9119

**சிறி கஜமுகன் ஜுவல்லர்ஸ்**
இல.B.111,
மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.
தொ.இல:- 021 222 4134

**சுபலக்ஷ்மி ஜுவல்லறி**
93. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
021 221 7529

**அம்பிகை ஜுவல்**
தங்கப்பவுண் நகை விய
34A, கஸ்தூரியார்
யாழ்ப்பாணம்.
021 222 253

## மேளக்கச்சேரி குழுவினர்

மானிப்பாய் - நந்தன் குழுவினர்
சாவகச்சேரி - சித்தார்தன் குழுவினர்
நாச்சிமார் கோயிலடி - சுப்பிரமணியம் குழுவினர்
உடுப்பிட்டியூர் - துளசி குழுவினர்
உடுப்பிட்டியூர் - குட்டி குழுவினர்
இணுவில் - பஞ்சமூர்த்தி குழுவினர்
கோண்டாவில் - வசந்தன், குண
**இவர்களுடன் நாச்சிமார் கோ**
**சேர்ந்து வாசிப்**

ஞாயிறு சிறப்பம்சம்
சூரியகாந்தி
உதயன்
14.04.2019

சூரியகாந்தி வாசகர்களுக்கு!
இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்



# கூட்டமைப்புக்கு நல்ல காலம் பிறக்கட்டும்!

சந்திரசேகர ஆசாத்



வரவு- செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு மீதான விவாதங்கள் அண்மையில் இடம் பெற்றன. அப்போது வழமைக்கு மாறாகத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினரின் நாடாளுமன்ற உரைகள் மிகவும் காரசாரமாக அமைந்தன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அரசு ஏற்றுக் கொண்ட பல விடயங்களை நிறைவேற்றி வருகிறதெனவும் ஆனால் அவை மந்த கதியிலேயே இடம் பெற்று வருகின்றன என்றும் தனது உரைகளில் தெரிவித்து வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன். இந்த விவாதத்தின்போது மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராகத் தனது கருத்துக்களை முன் வைத்தார்.

இனப்பிரச்சினை தொடர்பில் புதிய அரசமைப்பு மூலம் தீர்வு எட்டப்படாவிட்டால் தமிழர்கள் தொடர்ந்தும் இரண்டாம் தரக் குடிமக்களாக வாழ முடியாது எனவும், அதை மாற்றும் நடவடிக்கைகளில் இறங்க வேண்டி வரும் எனவும், அதன் விளைவு பாரதூரமாக அமையும் எனவும் பொங்கியெழுந்தார். இடையில் அவரைச் சுமந்திரன் ஆசுவாசுப்படுத்த முயன்ற போதும் அவர் அதையும் மீறி ஆவேசமாகத் தனது உரையை ஆற்றி முடித்தார் சம்பந்தன். சுமந்திரனும் கூடக் கலப்பு நீதிமன்றம் மூலம் பொறுப்புக்கூறல் மேற்கொள்ளப்படாவிட்டால் பன்னாட்டுப் பொறிமுறையூடான விசாரணைக்குச் செல்ல வேண்டி வரும் என எச்சரித்திருந்தார். ஆனால் பின்னர் சில நாள்களிலேயே ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியில் இலங்கை அரசைப் பன்னாட்டு நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல முடியாதெனக் கூறிவிட்டார். தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவோ இனப் பிரச்சினைத் தீர்வு, பொறுப்புக்கூறல் என்பன நியாயமான முறையில் முன்வைக்கப்படாவிட்டால் மகிந்த ராஜபக்சவுக்கு ஏற்பட்ட கதியே ரணில் விக்கிரமசிங்கவும் ஏற்படும் எனச் சவால் விடுத்தார். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் காரசாரமாக உரையாற்றியபோதும் தலைமை அமைச்சர் ரணில் ஒரு மெல்லிய புன்னகையுடன் மிகவும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அதுமட்டுமன்றிக் கூட்டமைப்பினரின் உரைகள் தொடர்பாக அவர் எவ்வித பதிலையும் வழங்கவில்லை.



கட்டுரை

### அரசுக்கு ஆதரவு வழங்குவதில் மாற்றமில்லை

செல்வம் அடைக்கலநாதனையும் சிவ சக்தி ஆனந்தனையும் தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்தனர். அது 45 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறுவதற்குத் தங்கள் பங்களிப்பை வழங்கினர். இது தொடர்பாகப் பின்பு நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் கருத்து வெளியிடும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பாகப் பலரும் குறை கூறி வருகின்றனர் எனவும், அதைப் பிழை யென்று சொல்ல முடியாது எனவும் தெரிவித்தார். அத்தோடு தாங்கள் அரசை ஆதரிக்காவிடில் இப்போதிருப்பதை விட மோசமான நிலை ஏற்பட்டு விடும் எனவும் தெரிவித்திருந்தார். அந்த மோசமான நிலை எப்படிப்பட்டது என்பது தொடர்பாக அவர் விளக்கமெதையும் அளிக்கவில்லை. ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு எப்படிப்பட்ட விரோதமான நடவடிக்கையை மேற்கொண்டாலும் தாங்கள் அரசுக்கு ஆதரவு வழங்குவதில் மாற்ற மிருக்காது என்பதைச் சொல்கிறார் என்றே இதைக் கருத வேண்டியுள்ளது.



### அரசுக்கு ஆதரவு வழங்கிய தமிழ் அரசு கட்சிக்கு அன்று தோல்வியே எஞ்சியது

சித்தார்த்தன் வெளிப்படுத்திய மேற்கூறிய வார்த்தைகள் 1965-1989ஆம் ஆண்டுக் காலப்பகுதியை நினை வூட்டுகின்றன. அதாவது 1965ஆம் ஆண்டில் தமிழ் அரசுக் கட்சி டட்லி- செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் அப்போதைய அரசின் பங்காளிக் கட்சியாக இணைந்து கொண்டது. 1968ஆம் ஆண்டில் தான் வாக்களித்தபடி டட்லி - செல்வா ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியவில்லை எனவும் அதனால் தான் தலைமைப் பதவியை விட்டு விலகப் போவதாகவும் தந்தை செல்வாவிடம் தெரிவித்தார் டட்லி சேனநாயக்கா. அப்போது தந்தை செல்வா, டட்லியைப் பதவி விலக வேண்டாம் எனவும் அப்படி விலகினால் அவரைவிட மோசமானவர்கள் ஆட்சிக்கு வந்து விடுவார்கள் எனவும், ஒப்பந்தம் நிறைவேற்றப்படா விட்டாலும் பரவாயில்லை அரசுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்குவதாகவும் தெரிவித்தார்.

இதன் பயன் தமிழரின் தனிப்பெருங் கட்சியாக விளங்கிய தமிழ் அரசுக் கட்சி 1970ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் வட்டுக்கோட்டை, நல்லூர், உடுப்பிட்டி, கிளிநொச்சி ஆகிய தொகுதிகளில் தோல்வியடைந்தது. யாழ்ப்பாணத் தொகுதியில் நூறுக்கும் குறைந்த வாக்குகளால் வெற்றி பெறவேண்டிய நிலை ஏற்பட்டது.

### அனுபவம் திரும்பக் கிடைக்கலாம்!

மோசமானவர்கள் ஆட்சிக்கு வந்து விடுவார்கள் என்ற தமிழ் அரசுக் கட்சியின் பாரம்பரியச் சுலோகத்தைப் பயன்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சிக்கு முண்டு கொடுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திட்டத்தால், 1970ஆம் ஆண்டில் தமிழ் அரசுக் கட்சிக்குக் கிடைத்த அனுபவத்தை இனி அது எதிர் கொள்ளப்போகின்ற தேர்தல்களில் சிந்திக்காது என்று சொல்லிவிட முடியாது. ஐக்கிய தேசியக் கட்சி என்றாலும் சரி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பென்றாலும் சரி , பொது மக்கள் பெரமுன என்றாலும் சரி நியாயத்தின் அடிப்படையிலேயோ, மனிதாபிமான அடிப்படையிலோ சிறுபான்மையினருக்கான உரிமைகளை வழங்கிவிடப் போவதில்லை. ஏனெனில் ஊழல், மோசடி, தனவந்தர்களின் நலன்களைப் பேணுதல், மக்களை வறுமையில் தள்ளுதல் எனத் தாங்கள் ஈடுபடும் மக்கள் விரோத நடவடிக்கைகளை மறைக்கும் கவசமாக அவை இனவாதத்தையே கையெடுக்கின்றன. தமிழ் மக்களின் நியாய பூர்வமான உரிமைக் கோரிக்கைகளைச் சிங்கள மக்கள் மத்தியில் விரோதமானவை எனக் காட்டித் தங்கள் ஒடுக்குமுறைகளை அதிகரிக்கச் செய்கின்றனர். அதன் மூலம் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதையும், அரசைக் கைப்பற்றி ஆட்சி செய்வதையுமே சுலபமான அரசியல் வழிமுறையாக மேற்கொண்டுவருகின்றனர். எனவே தமிழர் தரப்பு இனியாவது அதைச் சரியான முறையில் புரிந்து கொண்டு தமது கொள்கைகளையும் நடைமுறைகளையும் வகுக்க வேண்டும். எமது இலட்சியத்தின் அடிப்படையில் இந்தப் புதிய வருடத்தில் தெளிவான கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும். அவை என்றும் பிறழ்ச்சியடையாதவை யாகவும், விலைபோகாதவையாகவும், தெளிவானவையாகவும், எந்தவித குழப்பமில்லாதவையாகவும் இருக்க வேண்டும்.

### தீர்க்கமான கொள்ளை வகுக்கப்பட வேண்டும்

சரியாக வகுக்கப்பட்ட கொள்கையைச் சரியான நடைமுறையின் மூலம் முன்வைக்கும்போதே அதற்கென ஒரு சக்தி உருவாக்கம் பெறுகிறது. முதலில் உறுதி யான தலைமை வேண்டும். அந்தத் தலைமையைச் சுற்றி ஒரு கட்சியோ அல்லது ஒரு அமைப்போ இருக்க வேண்டும். கட்சியினதோ, அமைப்பினதோ உறுப்பினர்கள் இலட்சியப் பற்றுள்ளவர்களாகவும் தெளிவான கொள்கை விளக்கம் கொண்டவர்களாகவும், கொள்கைகளைத் தமது சொந்த நலன்களைப் புறந்தள்ளி ஏற்றுக் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். இதுவே எமது இலட்சியத்தின் மையப்புள்ளி. ஒடுக்கப்படும் இனமோ, குழுவினரோ தமது உரிமைப் போராட்டத்தை முன்னெடுப்ப தாயின் தமது தரப்பிலுள்ள அனைவருடனும் ஒற்றுமைப்பட வேண்டும்.

### மக்களில் இருந்து தொலைவாகிவிட்ட கூட்டமைப்பு

ஒரு பொதுக் கொள்கையின் அடிப்படையில் இணைந்து எமது இலட்சியத்தை நிறை வேற்றும் வகையில் பயணிப்பது முக்கியமான விடயமாகும். ஒற்றுமைப்பட்டு உரிமையை வென்றெடுக்கின்ற மக்கள் அமைப்பு ஒன்றுக்கு இருக்கக்கூடிய பொது விதிகளில் ஏதாவது ஒன்றையாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பின் பற்றுகிறதா? என்றால் இது நீளும் கேள்விதான்.

இப்படிப் பார்க்கும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது கோட்பாடுகளிலிருந்து வெகுதொலைவில் உள்ளதாவே தெரிகிறது.

எனவே பிறந்திருக்கின்ற புது வருடத்திலாவது கூட்டமைப்பின் செயற்பாடுகள் தீர்க்க மான வையா அமைவது தவிர்க்கப்பட முடியாதது.

2001ஆம் ஆண்டு தொட்டு 2015ஆண்டு வரையான தேர்தல் மேடைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு "ஒன்றுபட்ட வடக்குக் கிழக்கில் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பகிர்வு" என்ற கொள்கையை அறிவித்து வந்தது. ஆனால் புதிய அரசமைப்பின் போது வடக்குக் கிழக்கு இணைப்பு என்பது கைவிடப்பட்டு ஒன்றிணைந்த, பிரிக்கப்பட முடியாத, பிரிக்கப்படாத நாட்டுக்குள்ளான அதிகாரப் பகிர்வு என்று மாற்றத்தை உச்சரித்தது.

1972ஆம், 1978ஆம் ஆண்டு களில் நிறைவேறிய அரசமைப்புக்களைத் தமிழ் மக்கள் நிராகரித்தமைக்குப் பௌத்தத்துக்கு முதலிடம் என்பதும் ஒரு காரணமாகும். தற்சமயம் கூட்டமைப்பு அதையும் ஏற்றுக் கொண்டுவிட்டது.

இவ்வாறு கொள்கையளவில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தன்னுடன் ஓரளவாவது சாமாந்தரமான கொள்கைகள் கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்குப் பதிலாக எதிரான கொள்கைகளையும் கடந்த கால கசப்பான வரலாறுகளையும் ஏற்படுத்திய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினருடன் இணைந்து உள்ளூராட்சி சபை அதிகாரங்களைக் கைப்பற்றியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடனடியாகச் சரியான பாதைக்குத் திரும்பி வரத் தவறினால் அது தன்னைத் தானே அழித்துக் கொள்வதுடன் தமிழ் மக்களின் ஒற்றுமையையும் சிதறடித்து, உன்னதம் மிக்கதான உரிமைப் போராட்டம் உருவாக்கிச் சென்ற அரசியல் கட்சி என்ற பெயருக்கும் களங்கம் விளைவித்துவிடும் என்பது உறுதி.

"சரியாக வகுக்கப்பட்ட கொள்கையைச் சரியான நடைமுறையின் மூலம் முன்வைக்கும் போதே அதற்கென ஒரு சக்தி உருவாக்கம் பெறுகிறது. முதலில் உறுதியான தலைமை வேண்டும். அந்தத் தலைமையைச் சுற்றி ஒரு கட்சியோ அல்லது ஒரு அமைப்போ இருக்க வேண்டும். கட்சியினதோ, அமைப்பினதோ உறுப்பினர்கள் இலட்சியப் பற்றுள்ளவர்களாகவும் தெளிவான கொள்கை விளக்கம் கொண்டவர்களாகவும், கொள்கைகளைத் தமது சொந்த நலன்களைப் புறந்தள்ளி ஏற்றுக் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். இதுவே எமது இலட்சியத்தின் மையப் புள்ளி. ஒடுக்கப்படும் இனமோ, குழுவினரோ தமது உரிமைப் போராட்டத்தை முன்னெடுப்பதாயின் தமது தரப்பிலுள்ள அனைவருடனும் ஒற்றுமைப்பட வேண்டும்.

# ஊடகங்கள் மக்கள் மயப்பட்டு இயங்க வேண்டிய அவசியத்தை இடித்துரைத்த இதழியல் மாநாடு






ப்ரியமதா பயஸ்

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்

*(அதிகாரம் சொல்வன்மை குறள் இலக்கம் 648)*

கருத்துக்களை ஒழுங்காகக் கோத்து இனிமையாகச் சொல்ல வல்லவரைப் பெற்றால், உலகம் விரைந்து அவருடைய ஏவலைக் கேட்டு நடக்கும் என்பது இந்தக் குறள் கூறும் பொருள். இந்தக் குறள் ஊடாக வள்ளுவர் கூற வருவது அரசவை அமைச்சர்களுக்காக இருந்தாலும் இந்தக் காலத்தில் ஊடகங்களுக்கும் இது சாலப் பொருந்துவதை மறுத்துரைக்க முடியாது. ஊடகங்கள் பயணப்படுதல் என்பதும், நிலைத்தல் என்பதும், அவை எத்தனை தடைகளைக் கடக்கின்றன என்பதிலே தங்கியுள்ளது என்றே பலர் புரிந்து வைத்துள்ளனர். ஊடகங்கள் மக்களாட்சியின், ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்பது அவை பயணப்படும் பாதையைப் பொறுத்தே அமையும் என்பதைத் தெளிவுபடுத்தியது யாழ்ப்பாணத்தில் நடந்தேறிய 4ஆவது பன்னாட்டு இதழியல் மாநாடு.

**ஊடகம் மக்களுக்கானது**

கடந்த 5ஆம் மற்றும் 6 ஆம் திகதிகளில் ஆசியாவின் மிகப்பெரும் நூலகமான யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடந்த இதழியல் மாநாடு பத்திரிகையாளர்களை மேலும் புடம் போட்டது. நிரைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளைக் கடந்து இந்த மாநாடு நிலைநிறுத்திய செய்தி 'ஊடகம் மக்களுக்கானது' என்பது. ஊடகம் பற்றியும் ஊடகவியலாளர்கள் பற்றியும் எம்மிடமிருக்கும் செல்நெறி வழக்குகளைத் தள்ளிவைத்துவிட்டு, மாநாட்டு மண்டபம் தந்த உத்வேகப் பாதைக்குள் நுழைவோமானால், வடக்கின் பல ஊடக நிறுவனங்கள் மற்றும் தன்சார், ஊடகம் சார் ஊடகவியலாளர்களும் தமக்கான அங்கீகாரத்தையும், முக்கிய வளவாளர்களின் அறிவுரைகளையும் தவறவிட்ட முக்கிய நிகழ்வு என்று இதைச் சொல்லலாம். ஊடகவியலாளர்கள், ஊடகம் மீதான தமது கருத்து நிலை நிறுத்தலை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பதையும் ஊடகம்சார் செயற்பாடு, அரசியல், பொருளாதார, வாழ்வியலில் செலுத்தும் தாக்கம், ஒரு நாட்டின் இடைநிலை தாண்டிய மக்களிடம் எவ்வாறான செயல் வடிவத்தைக் காட்டுகின்றது என்கிற பலதையும் ஒவ்வோர் ஊடக நிறுவனங்களும் உணர்ந்து செயற்படவேண்டியவையாக இருக்கின்றன. தெற்காசியாவில் இவற்றின் நிலை தொடர்பாக இந்த மாநாட்டில் ஆராயப்பட்டமை சிறப்பு.

**தெற்காசிய ஊடகங்களில் குறைகள்**

தெற்காசிய நாடுகளில் பிரபல ஊடகங்கள் செயற்படும் விதம், மக்கள் நலனில் அக்கறையற்ற, முறையற்ற செய்தி வடிவங்கள் என்பவற்றை நிகழ்வில் இலங்கை, இந்திய ஆய்வாளர்களும், பேராசிரியர்களும் தெளிவுபடுத்தினர். ஆய்வுக் கட்டுரைகள் ஒவ்வொன்றும் செய்தியைத் தாண்டிய மையக் கருவைக் ஊடறுத்துப் பார்த்தன. கலை, கலாசார, பண்பாட்டு, வாழ்வியல் விடயங்களை ஊடகப் பார்வையூடாக ஆய்வுக்குட்படுத்தியிருந்த ஆய்வாளர்கள் மக்களையும், வாழ்வியல் மாற்றங்களையும் ஊடகங்களே தீர்மானிக்கின்றன என்ற சீரிய கருத்தியலை நிலைநிறுத்தினர். பொழுது போக்கையும் மேலதிக ஆர்வத்தையும் வெளிப்படுத்தும் இந்திய ஊடகங்கள் மீதான பார்வை இலங்கை ஊடகவியலாளர்களுக்குச் சாட்டையடியாக இருந்தது.

கதிரை நுனியில் நிமிர்ந்து அமர்ந்திருக்க வைத்தன இந்தியாவின் புதுடில்லியைச் சேர்ந்த பேராசிரியர் விஸ்வஜித்தாஸின் ஊடகம் சார் உரைகள். மக்களுக்கும் ஊடகங்களுக்கும், அரசுக்கும் ஊடகங்களுக்கும் இடையேயான உறவு தெற்காசியாவில் எவ்வாறு இருக்கின்றது என்ற விஸ்வஜித்தாஸின் பரந்துபட்ட பார்வை, தெற்காசிய ஊடகங்கள் மீதான பரந்துபட்ட விமர்சனமாக இருந்தது. ஒவ்வோர் ஊடகங்களும் எவற்றை, ஏன், செய்தி ஆக்குகின்றன? என்ற கேள்வி அவரின் ஒவ்வொரு விடயப் பரப்பிலும் பரந்து இருந்தமை சிறந்த பதிவு.

**வருமானத்துக்காக எழுதிக் குவிக்கும் ஊடகங்கள்**

நிகழ்காலத்தில் வருமான நோக்கத்துக்காக எதிழுக் குவிக்கும் ஊடகங்கள் எதிர்காலச் சந்ததியின் வாழ்வியல், சமூகப் பொருளாதார விழுமியங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை விஸ்வஜித்தாஸின் பார்வை தெளிவுபடுத்தியது. அதே விடயத்தையே ஏனைய ஆய்வாளர்களும் பலதரப்பட்ட இடங்களில் வலியுறுத்தினர். இந்த மாநாட்டினூடாகப் பெரும் கேள்வி ஒன்று முன்வைக்கப்பட்டதை உணர முடிந்தது. ஜனநாயகத்துக்கும் மக்களுக்கும் இடையேயான விடயங்கள் தற்போதைய செய்தித் தளங்களில் பேணப்படுகின்றனவா? என்ற கேள்வியே அது. இதற்கு 'இல்லை' என்றோ அல்லது 'ஆம்' என்றோ பதில் சொல்லிவிட முடியாத நிலையே தற்போது காணப்படுகிறது. 'ஆம்' எனப் பதில் சொன்னால் எங்கே? யாரால்? எப்போது? என்ற கேள்விகள் ஒன்றன்பின் ஒன்றாக எழுவதுபோல் 'இல்லை' என்று பதில் சொன்னாலும் அதே கேள்விகள் எழுகின்றன.

**இருதலைக் கொள்ளி எறும்பாக ஊடகங்கள்**

உண்மையைக் கூறினால் குறி வைக்கப்படுவோம் எனவே இப்படிக் கூறுவோம் எனத் தமது நிலைப்பாட்டை மாற்றி எழுதிய ஊடகங்களும், அப்படியே எழுதுவோம் உண்மை உறைக்கட்டும் என எழுதிய ஊடகங்க்ளும், ஊடகவியலாளர்களும் குறிவைக்கப்பட்டுச் சுட்டுத் தள்ளப்பட்ட வரலாற்றுத் தடங்கள் பதிவாகியிருக்கிற நிலையில், இருதலைக் கொள்ளி எறும்பான ஊடங்களின் எண்ண ஓட்டங்களை விமர்சிக்க வேண்டிய தேவையும் மாநாட்டில் இருந்தமையை உணர முடிந்தது. நிகழ்காலத்துக்கான ஊடகப் பரப்பை ஆய்வுக்குட்படுத்திய இளம் ஆய்வாளர்கள் முக்கிய விடயப் பரப்புக்களைக் கண்டு கொள்ளாமை அவர்களின் ஆய்வுகளில் தொய்வை ஏற்படுத்தியிருந்தது. உதாரணமாக மக்கள் வாழ்வியலில் ஊடகம் சார்ந்த வலுவான நிலமைகள் இன்னமும் சிறப்பாக ஆராயப்பட்டிருக்கலாம். தேவை எதுவாகவோ இருக்க தேவையற்ற எதையோ ஊடகங்கள் சொல்கின்றன என்ற ஒரு முகப்பட்ட பார்வை ஊடகப் போக்கில் சில விழுமியங்களையாவது கடைப்பிடிக்கும் ஊடகங்களுக்குப் பொருந்தாமல் போனாலும், பல ஊடகங்களுக்கு அவை சாலப் பொருந்தின.

**மாநாட்டின் பெரும் குறை**

தெற்காசிய ஊடகங்கள் ஜனநாயகத்தின் குறியீடுகளாக இருக்கின்றனவா? இல்லையா? என்ற கேள்வியை முன்வைத்தவர்கள் அதற்கான முடிவை ஊடகப் பரப்பின் பரந்துபட்ட பார்வையூடாகப் பெற்றுத் தரவில்லை என்பது மாநாட்டின் பெரும் குறையாக இருந்தது. தெற்காசிய மக்களுக்கும் ஊடகங்களுக்கும் இடையேயான ஊடாட்டங்கள் முக்கியமானவை என மாநாட்டில் கூறப்பட்டது. அவை இடம்பெறுகின்றனவா? இல்லை எனில் ஏன்? என்ற ஆய்வு அங்கே இருக்க வேண்டியதாக இருந்தது. ஆனால் அது இருக்கவில்லை.

இந்தக் கேள்விக்கு 'இல்லை 'என்று பதில் வந்தால் ஊடகங்கள் அரசுடன் இணைந்து செயற்படுகின்றனவா? என்ற கேள்வி எழுவது தவிர்க்கமுடியாதது. மாநாட்டில் ஆராயப்பட்ட விடயங்கள், ஆய்வாளர்களால் மேம்போக்கான பார்வையூடாகப் பார்க்கப்பட்டமையால் சில உதாரண முடிவுகளை மட்டுமே வெளிக்காட்டின. ஆனால் புதுடில்லியைச் சேர்ந்த பேராசிரியர் விஸ்வஜித்தாஸ், சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கோபாலன் ரவீந்திரன், மதுரை காமராஜர் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியை மீனாட்சி பாரதி, முனைவர் வே.நல்லதம்பி, முனைவர் மெ. பால சுப்பிரமணியன், முனைவர் ம.கலாவதி, ஊரெழு அ.கனகசூரியர், முனைவர் த.ஜெய்சக்திவேல், பெரியசாமி, ஆகியோர் கனதியுடன் வெளிப்படுத்தினர்.

ஈழத்து எழுத்தாளர் கார்த்திகேசு சிவத்தம்பி இலங்கையில் இருந்து கொண்டு இந்தியாவின் தமிழ்நாட்டு அரசியலைத் துல்லியமாக ஆய்வு செய்து தனது சிறப்பான கருத்தை முன்வைத்தி ருந்தமையை மாநாட்டின் தலைவர் சுட்டிக்காட்டினார். அறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பின்னர் திராவிட இயக்கம் நீர்ந்துப் போகிறது என்று பேராசிரியர் சிவத்தம்பி அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருக்கிறார் என்பதைப் பேராசிரியர் கோ.ரவீந்திரன் தெளிவுபடுத்தினார். உண்மையில் அப்படியான ஒரு நிலமையே இந்திய அரசியலில் இருந்தது, இருக்கின்றது. விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான காலத்தில் இலங்கைத் தமிழர்களின் அரசியலும் அவ்வாறான நிலையில் இருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

அறம்சார், நிகழ்வுசார், பின்புலம் சார் என பார்வைகள் மாறுபடுவதை வைத்துச் செயற்பாடுகளை வரையறை செய்யும் நிலையில் இருக்கும் தற்போதைய ஊடகங்கள் மக்கள், ஜனநாயகம் என்ற இரண்டு நிலைகளை நோக்கித் தமது பார்வையைத் திருப்ப வேண்டும் என்றே எல்லோரும் விரும்புகின்றனர். கட்சிசார் போக்கும் கருத்தியல்சார் வாதப் போக்கும் ஒத்தூதும் நிலையையே தோற்றுவிக்கும். இது ஊடக அறத்தையும், நிலைப்பாட்டு தன்மையையும் தகர்க்கும். அவை மக்களிடத்தே வாழ்வியல் தளம்பலை உண்டு பண்ணும். அரசியல், சமூகப் போர் உருவாகுவதற்கும் வழிவகுக்கலாம். ஊடகங்களால் முன்வைக்கப்படும் அரசியல், சமூகப் பார்வைகளை மட்டுமே ஓர் இனத்தின், தேசியத்தின் அடிப்படை வாதமாகப் பார்க்கவும், உணரவும் முடிகிறது. அந்தப் பார்வை மக்கள் மயப்படும்போதும் ஜனநாயக மயப்படும்போதும்தான் அவை முன்னேற்றகரமானவையாக அமையும்.

யாழ்ப்பாணத்தில் நடந்த 4ஆவது பன்னாட்டு தமிழ் இதழியல் மாநாடு இத்தகைய விடயங்கள் பற்றிச் சிந்திக்க வைத்திருக்கிறது. அந்த வகையில் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்த மக்களுக்கான இதழியல் இயக்கத்தின் தலைவரான சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கோ.ரவீந்திரன், இணைத் தலைவர் தே.தேவானந்த் மற்றும் அனுசரணையாளர்களின் சிறந்த செயற்பாடு பாராட்டத்தக்கது.



வண்ணை

கட்டுரை



# ஆட்சியாளர்கள் மீதான அதிருப்தி தேர்தலில் பிரதிபலிக்குமா?



இந்திய நாடாளுமன்றத் தேர்தலையொட்டிய கட்டுரை

ஆட்சியில் இருப்பவர்கள் தேர்தலுக்குப் பிறகு ஆட்சியிலிருந்து விலக வேண்டியிருக்கலாம், எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் ஆட்சியைப் பிடிக்கவும் நேரலாம் என்பதுதான் தேர்தல் ஜனநாயகத்தின் சிறப்பு. தேர்தல் வெற்றியைத் தீர்மானிப்பதில் அரசியலோடு பொருளாதாரக் காரணிகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்தக் காரணி களைப் பற்றி ஆராய்வதில் நவீன அரசியல், பொருளாதார ஆய்வாளர்கள் ஆர்வம்காட்டிவருகிறார்கள்.

ஆட்சியாளர்களுக்குத் தேர்தல் வெற்றி சாதகமாக இருக்கிறதா? ஆட்சியாளர்கள் மீதான அதிருப்தி அவர்களுக்கு எதிரான வாக்குகளாக மாறுகின்றனவா? என்பது குறித்து துபாய் மிடில்செக்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் அஜீத் கர்ணிக் உள்ளிட்ட ஆய்வாளர்கள் 'எகனாமிக் அண்ட் பொலிடிக்கல் வீக்லி' (மார்ச் 30, 2019) இதழில் ஓர் ஆய்வுக்கட்டுரையை எழுதியிருக்கின்றனர்.

இந்தியாவில் 1980ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான பத்து மக்களவைத் தேர்தல் விவரங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது. நடந்துகொண்டிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, வாக்காளர்களின் கருத்துகளை முன்னமே கணிப்பதற்குக் கடும் முயற்சிகள் நடந்துகொண்டிருக்கும் இந்த நர்ளகளில் அஜீத் கர்ணிக் எழுதியிருக்கும் கட்டுரை சில முக்கியமான விடயங்களைக் கவனப்படுத்தியிருக்கிறது.



தேர்தல் வெற்றியைத் தீர்மானிப்பதில் அரசியலோடு பொருளாதாரக் காரணிகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்தக் காரணிகளைப் பற்றி ஆராய்வதில் நவீன அரசியல், பொருளாதார ஆய்வாளர்கள் ஆர்வம் காட்டிவருகிறார்கள்.

### அமெரிக்காவுக்கு நேரெதிர் இந்தியா

அமெரிக்கத் தேர்தல் முடிவுகளைப் பற்றிய ஆய்வுகளில், ஆட்சிப்பொறுப்பில் இருப்பவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வாய்ப்புகளே அங்கு அதிகம் இருக்கின்றன. ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை அதற்கு நேரெதிராக இருக்கிறது. 1980ஆம் ஆண்டு தொடங்கி 1999ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் ஆட்சியில் இருந்தவர்கள் மீதான அதிருப்தி அவர்கள் மீண்டும் வெற்றிபெற முடியாத சூழலை உருவாக்கியது.

குறிப்பாக, தனிப்பெரும் கட்சியாக இருந்த காங்கிரஸ், இதனாலேயே தோல்விகளைச் சந்திக்க நேர்ந்தது. 1975ஆம் ஆண்டு தொடங்கி 2003 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மாநிலத் தேர்தல்களைப் பொறுத்தவரை ஆட்சியாளர்கள் மீதான அதிருப்தி அவர்களின் தோல்விக்கு மிக முக்கியமான காரணமாக அமைந்திருந்தது.

அதிருப்திக்கு இதுதான் காரணம் என்று எதையும் இதுவரை எந்த ஆய்வுகளும் உறுதிப்படுத்தாவிட்டாலும், ஆளுங்கட்சியின் ஊழல்கள் மக்களின் அதிருப்திக்கு முக்கியமான காரணங்களில் ஒன்றாக இருக்கின்றன.

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கடந்த பத்து மக்களவைத் தேர்தல்களில் திருப்புமுனையாக அமைந்தது 1998ஆம் ஆண்டுத் தேர்தல்தான். அந்தத் தேர்தலில்தான் காங்கிரஸுக்கு இணையாக பா.ஜ.காவும் தன்னை ஒரு தேசியக் கட்சியாக நிறுவிக்கொண்டது. அதற்குப் பிறகுதான், ஆட்சியாளர் மீதான அதிருப்தி என்பது வெற்றியைத் தீர்மானிக்கும் ஒரு காரணியாகவும் அமைந்தது. குறைவான வாக்கு வித்தியா சத்தில் வெற்றிபெறுபவர்கள் மீது அதிருப்தி ஏற்பட்டால், அவர்கள் அடுத்துவரும் தேர்தலில் வெற்றிபெறுவதற்கான வாய்ப்பு குறைவு என்பது 1998ஆம் ஆண்டுக்குப் பிறகு உறுதியாகிவிட்டது.

### வடக்கும் தெற்கும்

தென்னிந்திய மாநிலங்களில் ஆட்சியில் இருப்பவர்கள் அடுத்த தேர்தலில் வெற்றிபெறும் வாய்ப்பு 47சதவீதமாக ஆக இருந்தது. வட மாநிலங்களில் இது 32சத வீதம் மட்டுமே.

காங்கிரஸா அல்லது பா.ஜ. காவா என்ற கட்சி சார்பு தென்னிந்தியாவைப் பொறுத்தவரை ஒரு பொருட்டாகவே இல்லை.

கடற்கரையோர மாநிலங்களைப் பொறுத்தவரை, ஆட்சியில் இருப்பவர்கள் மீண்டும் வெற்றிபெறுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே இருந்தது. கடற்கரையோரத்தில் அல்லாத மற்ற மாநிலங்களில் வெற்றிபெறும் வாய்ப்பு 50சத வீதமாக இருந்தது. வேட்பாளர் ஒருவர் காங்கிரஸ் கட்சி உறுப்பினராக இருப்பதோ, இல்லாமல் இருப்பதோ அவர் மீண்டும் வெற்றிபெறுவதில் எந்த விளைவையும் உண்டாக்கவில்லை.

ஆனால், பாஜகவின் உறுப்பினர்களுக்கு அது சாதகமாக அமைந்திருந்தது. ஹிந்தி பேசும் மாநிலங்களைப் பொறுத்தவரை ஆட்சியின் மீதான வெறுப்பு 50சத வீதம் வெற்றிவாய்ப்பைப் பாதித்திருக்கிறது. இந்தி பேசாத மாநிலங்களில் ஆட்சியின் மீதான அதிருப்தி என்பது ஒப்பீட்டளவில் குறைவு.

### பொருளாதாரக் காரணிகள்

தேர்தல் நடக்கும் ஆண்டில் தனிநபர் சராசரி வருமானத்தைக் காட்டிலும் சராசரி வருமான மதிப்புக் குறைவாக இருக்கும்பட்சத்தில் அது கண்டிப்பாகத் தேர்தலில் பிரதிபலிக்கவே செய்யும். ஆளுங்கட்சியினர் மீண்டும் வெற்றிபெறும் வாய்ப்பை 22சத வீதம் அது பாதிக்கக்கூடும்.

நகர்ப்புற வாக்காளர்கள் அதிகமிருக்கும் தொகுதிகளில் ஆட்சியில் இருக்கிறார்களா, இல்லையா என்பது வெற்றியைத் தீர்மானிக்கும் விடயமாக இல்லை.

அதிகளவில் கிராமப்புறங்களை உள்ளடக்கியத் தொகுதிகளைப் பொறுத்தவரை ஆட்சியில் இருப்பவர்கள் மீண்டும் வெற்றிபெறுவதற்கான வாய்ப்பு 38சதவீதம் குறைவு. கல்வியறிவு பெற்றவர்கள் அதிகமிருக்கும் தொகுதிகளில் ஆட்சியில் இருப்பவர்கள் மீண்டும் வெற்றிபெறுவதற்கான வாய்ப்பு 41சதவீதம். கல்வியறிவு பெறாதவர்கள் அதிகமிருக்கும் தொகுதிகளில் ஆட்சியாளர்கள் மீண்டும் வெற்றிபெறும் வாய்ப்பு 43சத வீதம் குறைவு.

ஆக மொத்தத்தில், ஏழைகளும், கிராமப்புறங்களில் வசிப்பவர்களும் கல்வியறிவு பெறாதவர்களும்தான் ஆட்சியில் இருப்பவர்கள் மீண்டும் தொடரலாமா? என்பதைத் தீர்மானிக்கிறார்கள்.

அஜீத் கர்ணிக்கின் கட்டுரை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கும் காலகட்டம், 2014ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வரைக்குமானது. அப்போது, ஆட்சியின் மீதான அதிருப்தி என்பது ஆளுங்கட்சியின் வெற்றிவாய்ப்பை நிச்சயம் பாதித்திருக்கிறது. இப்போது ஐந்தாண்டுகள் முடிந்துவிட்டன. அடுத்த தேர்தல் நடந்துகொண்டி ருக்கிறது. ஆட்சியாளர்கள் மீதான அதிருப்தி என்பது அவர்களது வெற்றிவாய்ப்பைப் பாதிக்கவும் செய்யலாம். குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றவர்களுக்கு இந்தத் தேர்தல் கடும் போட்டியாகவே அமையும்.

*நன்றி: தி ஹிந்து*



சினிமா

# சலிப்பு





**கதை**

இந்தியாவின் சென்னையில் உள்ள ஒரு குடிசைப் பகுதி மக்களின் அத்தியாவசியப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதால் அந்தக் குப்பத்துக்கே ராஜாவாகத் திரிகிறார் பார்த்தீபன். அதே பகுதியில் நண்பன் யோகிபாபுவுடன் சேர்ந்து ரவுடித்தனம், ஊர்வம்பு எனச் சுற்றித் திரிகிறார் ஜி.வி.பிரகாஷ். குப்பத்தில் வசிக்கும் மக்கள், தனது பேச்சுக்கு மட்டுமே கட்டுப்பட வேண்டும் என நினைக்கும் பார்த்தீபனின் செல்வாக்கை அடியோடு சாய்க்க வேண்டும் என ஜி.வி.பிரகாஷ் திட்டமிட்டு வருகிறார். அவ்வப்போது எதிரும் புதிருமாக முறுகிக் கொள்கின்றனர் நாயகனும், பார்த்தீபனும். இந்த நிலையில் ஜி.வி.பிரகா ஷின் தந்தையான எம்.எஸ்.பாஸ்கர் மர்மமான முறையில் கொலை செய்யப்படுகிறார். குடிசை வாழ் பகுதி மன்றத் தலைவர், கதாநாயகி பாலக் லால்வானியின் அம்மா, குப்பத்து ராஜாவாக வரும் பார்த்தீபன் ஆகிய மூன்று பேரில் ஒருவர் தான் எம்.எஸ். பாஸ்கரின் சாவுக்குக் காரணம் என்கிற கோணத்தில் கதை விரிகிறது. தனது தந்தையைக் கொன்றவர் யார் என்பதை ஜி.வி.பிரகாஷ் கண்டுபிடித்தாரா? என்ன நோக்கத்துக்காக எம்.எஸ்.பாஸ்கர் கொலை செய்யப்பட்டார் என்பது தான் படத்தின் மீதிக் கதை.

**பாத்திரப் படைப்பு**

எம்.ஜி.ராஜேந்திரன் என்ற பெயரில் எம்.ஜி.ஆர் ரசிகனாக வருகிறார் பார்த்தீபன். அவரது பாத்திரப் படைப்புச் சற்று ஆறுதலாக இருந்தாலும் தேவையில்லாத இடைச் செருகலாக வரும் பூனம் பஜ்வா, நாயகி பாலக் லால்வானி ஆகியோரின் கதாபாத்திரங்கள் வெறுப்பை ஏற்படுத்துகின்றன. ஜி.வி.பிரகாஷின் நடிப்பில் முன்னேற்றம் இருந்தாலும் அவரது பாத்திரத்தின் தன்மையை இயக்குநர் இன்னும் முழுமையாகப் பயன்படுத்தியிருக்கலாம். காதல் காட்சிகள், பட்டம் விடுவது, நண்பர்களுடன் சேர்ந்து பார்த்தீபனைக் கவிழ்ப்பதற்குத் திட்டம் வகுப்பது உள்ளிட்ட அவரது செயற்பாடுகளில் பெரிதாகச் சுவாரஸ்யம் இல்லை.

எம்.எஸ்.பாஸ்கர் கதாபாத்திரம்தான் கதையோட்டத்தின் மைய இழை. தனது பங்களிப்பை மிக நேர்த்தியாக வெளிப்படுத்தி இருக்கிறார். அந்தப் பிரதேசத்து மன்றத் தலைவராக வரும் டி.ஆர். கே.கிரண், குப்பத்துப் பகுதியில் வட்டிக்கு விடும் வட்டிக்காரர் உள்ளிட்ட சில கதாபாத்திரங்கள் தற்போதைய குப்பத்து வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் விதமாக அமைந்திருக்கின்றன. ஜி.வி.பிரகாஷின் இசையில் பாடல்கள் மற்றும் பின்னணி இசை பரவாயில்லை.

**பலம் - பலவீனம்**

நடன இயக்குநரான பாபா பாஸ்கர் இயக்கியுள்ள முதல் திரைப்படம் இது. சென்னை போன்ற பரபரப்பான நகரச் சூழலில் அப்பாவித்தனமாக வாழும் குடிசை வாழ் மனிதர்களின் இயல்பான வாழ்க்கையைப் பதிவு செய்ய முயற்சித்திருக்கிறார் இயக்குநர். குடிசைவாழ் பகுதிக்காகப் பல கோடி செலவில் பிரமாண்ட அரங்கம் அமைக்கப்பட்டு படமாக் கப்பட்டுள்ளது.

குப்பத்து மக்களின் பெயர், அவர்களின் பேச்சுமொழி உள்ளிட்டவற்றில் செலுத்திய கவனத்தை, திரைக்கதைக் கோர்வையில் செலுத்தவில்லை. இந்தக் கவனமின்மையானது குப்பத்து இயல்பான வாழ்க்கையைப் பதிவு செய்வதில் இருந்து தடம்மாறி முற்றிலும் செயற்கையான திரைக்கதை நகர்வுக்குக் காரணமாக அமைகிறது. அருவருப்பான இரட்டை அர்த்த வசனங்களும் படத்தின் தரத்தைத் தாழ்த்துகின்றன.

குழந்தைகள் சாப்பிடும் இனிப்பில் போதைப் பொருள் கலந்து சீரழிவை உண்டாக்கும் கும்பலின் பின்னணியில் யார் இருக்கிறார்கள்? அவர்களைக் கண்டுபிடிப்பதற்கு நடக்கும் வியூகம், குப்பத்தில் அடுத்தடுத்து மர்மமான முறையில் நடக்கும் சாவுகள் என இரண்டாம் பாதி கதையில் விறுவிறுப்பான காட்சிகள் ஆங்காங்கே இருந்தாலும் அதைத் தாங்கிச் சுமக்கும் முதல் பாதியில் நிறையக் குறைகள்.

அவை படத்தைப் பலவீனமடையச் செய்கின்றன. காலம் காலமாகப் பார்த்துச் சலித்துப்போன வழக்கமான தமிழ் சினிமாவுக்குள்தான் இந்தக் குப்பத்து ராஜாவும் புதிதாக இணைந்துள்ளது.



## சித்திரைப் பெண்ணே...!

வேலணையூர் மயிலைக்கிளி.

வஞ்சம், பொய், சூதெல்லாம் நெஞ்சிலே நிறைந்து
வாய் மட்டும் தேன் மொழியால் நிரம்பி வழிய
நஞ்சுமிழும் கொடுநாகம் நம்மிடையே ஊர்ந்து
நாசம் செய்துமே நலம் கேட்கும் விந்தை

துஞ்சாமல் துளைத்தெடுக்கும் துடிப்பினோடு தினம்
தீமைகள் விலக்கியே விடியலைத் தேடி
அஞ்சாமல் அவனியில் அறங்காத்து அருங்கலை பேணி
அறியாமை போக்கியே அன்பு நெறி சென்று

பஞ்சத்தில் பட்டினியில் பரிதவித்துக் கஞ்சிக்காய்
பல்லிளித்து நெக்குண்டு பாதியிலே உதைபட்டு
விஞ்சு புகழொடு வேண்டிடும் அமைதி பெற்று
வீணர்களின் வலையிலே வசமாகிச் சிக்காமல்

மிஞ்சு துயர் மேவியே மிடியைப் போக்கிட
மேன்மை கொள் உழவும் செழித்தோங்க
தஞ்சமென்று வந்தோரைத் தக்க வழி காட்டியே
தரணியிலே தலைநிமிர வைத்திடம்மா சித்திரையே.



சினிமா



## ஈர்ப்பில்லை

# வாட்ச்மேன்

**கதை**

படத்தின் ஆரம்பத்திலிருந்து மிகவும் பரபரப்பாக இருக்கிறார் ஜி.வி.பிரகாஷ். 30 ஆயிரம் ரூபாய் கடன் கிடைக்குமா? என்றபடி அலைகிறார். ஆனால், அவருக்கு எந்த வழியும் பலன் தரவில்லை. இதனால் திருடியாவது பணத்தை எடுப்போம் என்று முடிவெடுத்து ஒரு வீட்டுக்குள் நுழைகிறார். அந்த வீட்டில் ஏற்கெனவே சில ஆபத்துகள் இருக்கின்றன. அவருக்கான பணச் சிக்கல் ஏன் வந்தது, அந்த வீட்டில் உள்ள ஆபத்து என்ன, முடிவில் ஜி.வி.பிரகாஷ் என்ன ஆகிறார்? ஆகிய கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது திரைக்கதை.

**பாத்திரங்கள்**

நாயகத்தனம் செய்யவோ, நாயகன் என்பதை நிறுவவோ சாத்தியமில்லாத ஒரு கதாபாத்திரத்தில் ஜி.வி.பிரகாஷ் நடித்திருப்பது ஆச்சரியம் தான். இயக்குநர் விஜய் உடனான நட்புக்காக நடித்திருக்கிறாரோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது. பெரும்பாலான நேரங்களில் பதற்றமாகவும், பயந்த மாதிரியும் இருப்பதே ஜி.வி.பிரகாஷுக்குக் கொடுக்கப்பட்ட வேலை. அதை மட்டும் கச்சிதமாகச் செய்திருக்கிறார். வில்லன் ராஜ் அர்ஜுன் பார்ப்பதற்கு முரட்டுத்தனமாக இருக்கிறார். வில்லன் குழுமத்தில் இருக்கும் எவரும் முகம் பதிவாகாத அளவுக்கே கடந்து போகிறார்கள். படத்தின் முக்கியமான கதாபாத்திரம் ப்ரூனோ என்கிற நாய். அது தன்னுடைய வேலையை மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறது. யோகி பாபுவின் நகைச்சுவை தேவையில்லாத ஒன்றாக இருக்கிறது.

**இசை, காட்சித் தொகுப்பு, ஒளிப்பதிவு**

பாடல்கள் இல்லாத படம். அதே நேரத்தில் ஜி.வி.யின் பின்னணி இசையைக் குறை சொல்ல முடியாது. அந்தந்தக் காட்சிக்குத் தேவையான பதற்றத்தைப் பின்னணியில் கொடுத்து அதிர வைக்கிறார். நீரவ் ஷாவின் ஒளிப்பதிவும், ஆண்டனியின் காட்சித் தொகுப்பும் படத்துக்குப் பலம் சேர்க்கின்றன. இருட்டின் அடர்த்தியை நீரவ் ஷாவின் கமரா அழகாகப் படம் பிடித்துள்ளது.

**பலம் - பலவீனம்**

நாயகனுக்கான பிரச்சினை, அவர் திருடலாம் என்று முடிவெடுக்கும் சூழ்நிலை, அந்த வீட்டை அவர் தெரிவு செய்வதற்குக் காரணம் போன்றவை நம்பும்படியாக இருக்கின்றன. ஆனால், கடன் கொடுத்தவர் நள்ளிரவு 12 மணி வரைக்கும் அடிக்கடி அவருக்கு அழைப்பு மேற்கொண்டு வெறுப்பேற்றுவதில் நம்பகத்தன்மையில்லை. நாயகன், நாய் தவிர மற்றைய கதாபாத்திரங்களில் ஈர்ப்பும். இல்லை. அதனால் படத்துடன் ஒன்றிக்க முடியவில்லை. ப்ரூனோ நாய் செய்யும் சில விடயங்களில் மட்டும் சுவாரஸ்யம் தெரிகிறது. மற்றபடி அழகான அம்சங்களோ, த்ரில் விடயங்களோ, பதற்றமோ, பரபரப்போ படத்தில் குறைவு. தொழில்நுட்ப ரீதியில் தரமாக இருக்கும் படம் இயக்குநர் வடிவமைத்த காட்சி ரீதியாகக் கொஞ்சம் பின்வாங்குகிறது.



# சுவிஸ் எனும் அழகிய நாடு!

12

ஏ.ஜே.ஞானேந்திரன்



சுவிஸ் பிராங் ஒன்றின் இன்றைய இலங்கைப் பெறுமதி 175 ரூபா. சுவிஸ் நாட்டில் உணவுப் பண்டங்கள் சிலவற்றின் விலையைத் தருகிறேன் நீங்களே ஒப்பிட்டுக் கொள்ளலாம். சுவிஸ் நாட்டின் சம்பளம் இலங்கை நாட்டின் சம்பளத்தை விடக் குறைந்த பட்சம் 10 மடங்கு அதிகம் என்பதால், நமது பலவீனமான ரூபாய் நாணயத்துடன், பலமான சுவிஸ் பிராங்கை ஒப்பிடுவது அசட்டுத்தனம் என்று நினைத்தா லும், நீங்கள் அறிந்து கொள்வதற்குச் சிலவற்றின் விலை கள் இதோ:

மக்டொனால்ட்ஸ் உணவகம்(ஒருவருக்கான உணவு) 14 சுவிஸ் பிராங், சாதாரண உணவகத்தில் ஒருவ ருக்கான உணவு 20 சுவிஸ் பிராங், உள்ளூர் பியர் 0.5 லீற்றர் 6 சுவிஸ் பிராங், பால் (1லீற்றர்) 1.60 சுவிஸ் பிராங், பாண் (500 கிராம்) 2.70 சுவிஸ் பிராங், 12 முட்டைகள் 5.35 சுவிஸ் பிராங், மாட்டிறைச்சி (1 கிலோ) 48 சுவிஸ் பிராங், வாழைப்பழம் (1 கிலோ) 2.95 சுவிஸ் பிராங்.

இங்கே எங்கள் நாட்டின் சங்கக் கடைகள் போல மக்களின் அன்றாடத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு, சுவிஸ் எங்கிலும் கிளைகளுடன் கோப், மிக்றோஸ் என்ற பெயரில் இரண்டு விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

**மிக்றோஸ் எனும் நிறுவனம்**

மிக்றோஸ்(ஜேர்மன் மொழியில் மிக்றோ) சுவிஸ் நாட்டின் மிகப்பெரிய விற்பனை நிலையம் மாத்திரமல்ல. உலகிலேயே மிகப் பெரிய விற்பனை நிலையமும் இது தான்! சுவிஸ் நாட்டின் குடிமக்கள் எவருமே இதன் பங்குதாரர்கள் ஆகலாம்.

மக்களுக்காக மக்களால் நடாத்தப்டும் இந்தப் பிரமாண்டமான விற்பனை நிறுவனம், நாடெங்கிலுள்ள கிளைகளில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோருக்கு வேலை வாய்ப்பளித்து வருகிறது.

பொருள்களை விற்பது, மாத்திரமல்ல, இவர்களது பெயாரில் பல பொருள்கள், உணவுப் பணடங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1925ஆம் ஆண்டில் சூரிச் நகரில் ஒரு தனியார் நிறுவனமாக ஆரம்பித்து, இன்று, பெரு விருட்சமாகி, பரந்து கம்பீரமாக எழுந்து நிற்கின்றது. இதன் ஸ்தாபகரின் விருப்பப்படி 93வருடங்கள் கழிந்த நிலையிலும் இவர்கள் மதுபானம் விற்பதில்லை என்ற கொள்கையைத் தக்க வைத்துள்ளார்கள்.

சுவிஸ் நாட்டுக்கு வருபவர்கள் மிகவும் குறைந்த விலையில் எதையாவது வாங்குவதானால் இங்குதான் செல்ல வேண்டும். பல கிளைகளுடன் இயங்கும் இரண்டாவது பெரிய நிறுவனமே கோப் சுப்பர் மார்க்கெற். .

**ஆனந்தம் பொங்கும் நாடு**

ஒரு நாட்டில் வாழும்போது, அந்த நாடு தனது குடிமக்களுக்கு மன அங்கலாய்ப்பு அற்ற வாழக்கையை அளிப்பது முதற் கடமையாகின்றது. பெண்கள் இரவில் வீதிகளில் சுதந்திரமாக நடமாடலாம். இலஞ்ச, ஊழல்கள் இருக்கக் கூடாது, வேலையிலில்லாத் திண்டாட்டம் மக்களை வாட்டக்கூடாது.

விலைவாசி உயரக்கூடாது. நல்ல சுகாதார வசதி இருக்க வேண்டும். இப்படி மனித வாழக்கைக்குப் பல அவசியங்கள் இருக்கின்றன.

இதெல்லாம் ஒன்றுகூடி ஒரு நாடு கொண்டிருப்பது, அந்த நாட்டை வளர்ச்சிப் பாதையின் உச்சிக்கு கொண்டு சென்று விடுகின்றது.

நான் சுவிஸ் நாட்டில் கழித்த நாள்கள் மிக மகிழ்வை ஏற்படுத்திய காலம்.

மனதில் குறையொன்றும் இருக்கவில்லை. வேலை வாய்ப்பு, உழைப்பு, அமைதியான வாழ்வு, திருப்தியான நிதி நிலைமை, ஆரோக்கியமான வாழ்வுஇவற்றைவிட வேறு என்ன வேண்டும்.?

(தொடரும்)



நயினை விசு. இராசநாயகம்

## பொல்லாத காலம் போகட்டும்!

விகாரிப் புத்தாண்டே!
தமிழர் தம் வாழ்வில் நல்
விடியலைத் தருவாயா?
புத்தாண்டுகள் பல கண்டோம்
விளம்பி வந்து சென்றது பயன்
ஏதும்
எம்மவர்க்கு இல்லை
மலருகின்ற விகாரிப் புத்தாண்டே
மக்களுக்கு நல்ல மங்கலங்கள்
தருவாயா?
புதிய நம்பிக்கையுடன்
வரவேற்கிறோம்
புதிய விடிவொன்றை எமக்குத்
தருவாயா?
மலர்ந்து வா மக்கள் மனங்களில்
நல் மாற்றத்தைக் கொண்டு வா
மக்கள் எல்லோரும் நிம்மதியாக
வாழ்ந்திட மனிதயேம் காப்போம்
பொல்லாத காலம் போய் நல்ல
காலம் பிறந்ததென வாழ்வோம்



உடுவிலூர் கலா.

## சித்திரை மகளே வருக...!

சித்திரை மகளே வருக
சிங்கார வனப்புடன் வருக
விகாரி எனும் பெயருடன்
விடியலாய் நீயும் வருக

புத்தாடை அணிந்து
புதிய தேசம் மலர்ந்திட
அடிமை நிலை நீங்கி
அன்பொளி வீசிட வருக
வடக்கின் வறட்சி நீங்கி
வாழ்வாதாரம் சிறப்புற
வாளின் கூர்மை மழுங்கி
வன்முறைகள் களைந்திட வருக

போதை அரக்கன் அழிந்து
பேதையர் வாழ்வு மகிழ்ந்திட
சமூக அவலங்கள் நீங்கி
சமரசம் நிலைபெற வருக

நற்பொழுதுகள் புலர்ந்து
நன்மைகள் பல கிடைத்திட வருக

தடுமாறும் இளையோர்
தலைகுனியும் நிலைமாற
வாழ்வியல் நெறிமுறைகள்
வகுத்தளிக்கின்ற புதிய
ஆண்டாய் வருக...



செ. மகேஷ்

## சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி

கருத்து

# புலமையைப் புலப்படுத்துமா பரிசில்?

“தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை இனிவரும் காலங்களில் நடைபெறப் போவதில்லையாம்” என்றார் சிவபாதத்தார்.

அதைக் கேட்ட செல்லத்தம்பியருக்கு ஒரு புறத்தில் மகிழ்ச்சி வேரூன்றினாலும் மறுபுறத்தில் அதுபற்றி அவர் அறிந்த செய்தி மயக்கம் மிகுந்ததாகவே அவரது சிந்தனையை அலைக்கழித்தது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இனிக் கட்டாயமில்லை என்பதாக வெளி வந்த செய்தியால் அவர் சற்றே குழம் பித்தான் போனார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்குவதற்காகவும் தேசிய பாடசாலைகளில் தரம் 6 வகுப்பில் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காகவும் ஆண்டுதோறும் இந்தப் பரீட்சை நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் பரீட்சையால் சிறுவர்கள் மன தளவில் பாதிக்கப்படுவதும் அவர் மீதில் எல்லை மீறிய அழுத்தங்கள் பயன்படுத்தப்படுவதும் யாவரும் அறிந்த உண்மைதான்.

ஆனால் இந்தப் பரீட்சையை மையமாகக் கொண்டுதேசியப்பாடசாலைகளில் சிறுவர்களை இணைத்துக் கொள்ளும் செயற்பாடென்பது பிள்ளைகளை மாத்திரமல்ல பெற்றோரையும் உள ரீதியாகவும் பணரீதியாகவும் உறுத்தும் மிகப் பெரிய முயற்சியாகவே பார்க்கப்பட்டதென்பதையும் மறுப்பதற்கில்லை. அந்த நோக்கில் சிந்தனை யைச் செலுத்திய செல்லத்தம்பியருக்கு இந்தப் பரீட்சை நடைபெறப் போவதில்லை என்பதாகச் சிவபாதத்தார் சொன்ன சொல்லில் உண்மை இருப்பதாகப்படவில்லை.

குறித்துரைக்கப்பட்ட வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள பிள்ளைகள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றலாம் என்ற கருத்தில் பரீட்சை நடைபெறும் என்பது உறுதியாகத் தெரிகிறது. அத்துடன் ஏனையோருக்கு இது கட்டாயமில்லை என்பதாகக் கூறப்பட்ட நிலையில் நீங்கள் விரும்பினால் நடைபெறும் பரீட்சையில் உங்கள் பிள்ளைகளையும் தோற்றுவதற்கு முன்னிறுத்தலாம் என்பதாகச் சொல்லப்படுவதின் மூலம் பெற்றோரின் மனத்தில் குழப்பம் தோற்றுவிக்கப்பட்டு விட்டதாகவே செல்லத்தம்பியர் சிந்தித்தார்.

✦✦✦✦

சுற்றறிக்கை விதிகளைப் பேணிப் பிள்ளைகளைப் பாடசாலைகளில்; சேர்க்கும் முறைமைகளிலிருந்து இந்தப் பரீட்சை விலகிக் கொண்டு விட்டதா? என்பதைப் புரியாமல் விழித்தார் செல்லத்தம்பியர். பரீட்சையை மையமாகக் கொண்டே பாடசாலை அனுமதிகள் நடைபெற்றதான ஒரு ஞாபகம் அவரைத் தொடர்ந்தும் குழப்பியது. இந்தப் பரீட்சை நிறுத்தப்பட்டால் இதனால் உள, உடல் ரீதியாக வருத்தமுற்ற சிறுவர் பெற்றோர், பெரியோர் எல்லோருக்குமே மனதளவில் ஓர் ஆறுதல் கிடைக்கும் என எதிர்பார்த்தபோதும். அது முழுமையான நிம்மதியைத் தந்ததாக எண்ணவே முடியவில்லை. செல்லத்தம்பியரின் நிலைத்த குழப்பம் நீங்கவேயில்லை.

பரீட்சை நடைபெறும் என்பதும், விரும்பினால் தோற்றலாம் என்பதும் பரீட்சைக்குத் தோற்றும் ஒரு குறிப்பிட்ட தொகையினரான சிறுவர்களை வருத்தவே செய்யும். இந்தப் பரீட்சை தொலைந்தால் ரியூசன் கொடுத்து மாணவர்களின் ஓய்வைக் குலைக்கும் தனியார் நிறுவனங்களும் காணாமற் போய்விடும் என்று எதிர்பார்த்தவருக்கு அது தனது அத்திபாரத்தைப் பலமான வேறொரு தளத்தில் வலுப்படுத்தப் போகிறதோ என எண்ணியபோது துயரமே எஞ்சியது.

ஒருவனின் கல்வி அடைவை அளவிடுவதற்கும் நாட்டின் தேவை கருதி அவனைத் தேர்ந்தெடுப்பதற்கும் இந்த எழுத்துப் பரீட்சையைத் தவிர வேறு எந்த உத்திகளையும் கண்டறிய முடியாதவாறு எமது கல்வி எல்லைப்படுத்தப் பட்டுவிட்டதாகவே செல்லத்தம்பியர். சிந்தித்தார்.



ஒருவனைக் கல்வியின் மூலமும் ஒழுக்கத்தின் மூலமும் மேம்படுத்தி, உயர்த்தித் தோன்றச் செய்யும் அறிவு, ஆளுமை, திறமை என்பவற்றைக் கணிப்பிடும் தகுந்த வழி தெரியாமல் தவிக்கிறோம் என்பதாக எண்ணியபோது செல்லத்தம்பியருக்கு வெட்கம் ஏற்பட்டது. ஒவ்வொருவனும் ஏறத்தாழப் பதின்மூன்று வருடங்கள் பாடசாலைக் கல்வியைப் பெறுகின்றான். வருடாவருடம் எழுத்துப் பரீட்சைகளும் பாடங்களோடு தொடர்புடைய செய்முறைப்பரீட்சைகளும் இடம் பெறுகின்றன.

இவை தவிர இணைபாடச் செயற்பாடுகளும் இடம் பெறுகின்றன.

பிள்ளையின் எதிர்பார்ப்புக்களும் நாட்டின் தேவைகளும் மதிப்பிடப்படாமலேயே கல்வியைப் பரீட்சைக்கு விடையளிக்கும் ஒரு பயிற்சியாகவே முன்வைக்கின்றார்களோ என்ற ஐயம் செல்லத்தம்பியருக்கு ஏற்பட்டது.

பதின்மூன்று வருடங்கள் தம்மிடம் கற்ற ஒருவனின் கல்வித்தேர்ச்சியை அனுபவித்து. அவதானித்து அளவிடும் துணிவு கல்வியியலாளர்களிடம் இருந்து ஏன் தொலைந்து போனது? வினாத்தாளுக்கு விடையெழுதும் எழுத்துப் பரீட்சை மாத்திரமே பிள்ளையின் கல்வியை அளவிடும் ஒரேயொரு கருவியாகிப் போனமையை யாரிடம் சொல்வது! செல்லத்தம்பியர் மௌனமானார்.




“இந்தப் பரீட்சையால் சிறுவர்கள் மனதளவில் பாதிக்கப்படுவதும் அவர் மீதில் எல்லை மீறிய அழுத்தங்கள் பயன்படுத்தப்படுவதும் யாவரும் அறிந்த உண்மைதான்.

அனுபவம்

# சிறைக்கதவில் எத்தனை கம்பிகள்




தாஸ் மாஸ்ரர்

சிலர் எந்த விடயத்திலும் ஒத்துழையாமை இயக்கம் நடத்துவார்கள். களுத்துறையில் இருந்த அநேக கைதிகள் எந்த விடயத்தை எடுத்தாலும் 'ஆறு பின்னோக்கிப் பாயும்' என்ற கருத்துப்படக் கதைப்பார்கள். யோசனையுடன் மெதுவாக உலாவுவது, சேர்ந்திருந்து கதைப்பது, பாட்டுப் பாடுவது, தகாத வார்த்தைகள் பேசித்திரிவது, வாழ்க்கை அனுபவம் கலந்த சுவராஸியமான கதைகள் பேசுவது என எல்லாமே சிறைக்குள் இருக்கும் கைதிகளிடம் எப்போதும் இருக்கும். 'போலின்' என்ற சத்தத்துடன் நாம் அறைகளில் பிரித்து அடைக்கப்படப் போகிறோம் எனும் நிலை வரும்போது மனது சுமையாகும். சிறைக்கதவுகள் வாய் திறந்து எம்மை விழுங்கி விடும். அப்போது சிறை முற்றம் வெறுமையாகி விடும். கிழிந்த கடதாசிகளும், தேவைக்கு உதவாத துணிகளும், வேறு பொருள்களும், சிறை முற்றம் எங்கும் படவிக் கிடந்தன. கலகலப்பு மாறி மயான அமைதி சிறையில் நிலவும். சிறை முற்றத்தில் வீசப்பட்ட கழிவுப் பொருள்களைக் கைதிகள் மறந்தது போலவே சமுகம் எம்மை மறந்து விட்டதோ? ஏன எண்ணத் தோன்றும்.

வாழ்க்கையில் பயனற்ற மனிதர்களாக ஆக்கப்பட்டு விட்டோம் என்பது கவலையளிக்கும். சிறைக்கதவின் கம்பிகளூடே எப்போதாவது தெரியும் ஒரு நட்சத்திரம் அல்லது ஒரு நிலவுத் துண்டு எங்கள் உணர்வுகளையும், நண்பர்களையும், குடும்ப உறவுகளையும், தூரத்தில் எமக்காக காத்திருக்கிறார்கள் என நம்ப வைத்தன.



++++

சிலர் சிறை நிர்வாகத்துக்கு விசுவாசமாக இருப்பதற்காக கைதிகளின் விடயங்களை வெளியில் சொல்வார்கள். எதையும் சகித்துக் கொள்ளும் மிக நல்ல மனிதர்களையும் நான் சிறைக்குள் சந்தித்தேன். சிறை என்றால் இவ்வளவு தான் என்று ஒரு வரைவிலக்கணத்தை இலகுவில் கூறிவிட முடியாது. ஒரு விடயம் சரிபோலத் தெரிவது பின்பு பிழைபோலத் தெரியும். பிழை என்று நினைப்பது பின்னர் சரியாகி விடும். பிழை சரி எல்லாம் கலந்த கலவையாகவே சிறை வாழ்க்கை இருக்கமுடியும். இந்த முடிவு கூட இன்னோர் கோணத்தில் பிழையாகியோ, சரியாகியே விட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

++++

நாம் பூஸா சிறைக்கு மாற்றப்பட்டு 23 நாள்களுக்குப் பின் (13.02.2001) ஐ.சி.ஆர்சியினர் எம்மைப் பார்க்க வந்தார்கள். லின்டா என்ற அம்மணி வந்திருந்தார். அவர் மூலம் எனது மனைவிக்குத் தகவல் கொடுத்தனுப்பினேன். அதன் பின் 17.02.2001அன்று எனது மனைவியிடமிருந்து முதலாவது கடிதம் வந்தது. மிகவும் ஆறுதலாக இருந்தது. பூஸாவில் கடிதம் கிடைத்ததும் மிகவும் சந்தோசமாக இருக்கும்.

களுத்துறைச் சிறைச்சாலையை விட பூசாவில் முற்றிலும் வேறுபட்ட ஒரு மன உளைச்சல் இருப்பதை உணர்வதுண்டு. பூசாவில் அதிகமாக எல்லோராலும் எதிர்பார்க்கப்படுவது இரண்டு விடயங்கள் மட்டுமே. ஒன்று கடிதம் தருகின்ற சிறைச்சாலை ஊழியர். மற்றையது வழக்குக்குக் கூப்பிடுகின்ற பாட்டிக்காரன்.

பூஸாவில் கலீல் என்ற முஸ்லிம் அதிகாரி தான் கடிதங்களை பரிசோதித்துத் தருவார். அவரது கைகளில் 10 கடிதங்கள் வந்தாலும் அங்குள்ள கைதிகளின் பெரும்பாலானோர் ஓடிப்போய் வேலிக்கருகில் நின்று"கலீல் மாத்தையா எனக்கு இருக்கா", "கலீல் ஜயா எனக்கு இருக்கா" என்றெல்லாம் கத்துவார்கள். ஆனால், கலீலிடம் கடிதத்தை இலகுவில் எவரும் வாங்கிவிட முடியாது.

தனது குடும்ப நிலை, கையறு நிலை எனப் பலதையும் கைதிகளுக்கு ஒப்பிப்பார். காலையில் 5 மணிக்கு நடந்து சென்று பஸ் பிடித்தது, பிள்ளைகளுக்குச் சுகவீனம், இன்னமும் சாப்பிடவுமில்லை, பள்ளிக்குப் போகவில்லை எனப் பலவும் அவரது வாயிலிருந்து வழமையாக வரும் பேச்சுக்களாகும். பதிவுத் தபால் ஒன்று வந்தால் அதை ஒரு கொப்பியில் பதிந்து, எங்கள் முன்னால் உடைத்துப் பின்னர் ஜெயிலர் ஒருவரிடம் கையெழுத்து வாங்கி அதைக் கலீலிடமிருந்து வாங்கி எடுப்பது என்பது பகிரதப் பிரயத்தனம். சிலவேளை கைதிகள் ஆத்திரத்தில் பேசினால் "நான் என்னப்பா செய்வது" என்பார்.

ஒரு கைதி சொன்னார் "தமிழ் ஈழத்துக்கு வாங்கோ ஜயா உங்களுக்கு அங்குள்ள சிறைச்சாலைக்குள்ள நல்ல பதவி ஒன்று வாங்கித் தாறோம்" எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு விடயத்தைச் சொல்ல வேண்டும். கலீல் விடுமுறையில் சென்று விட்டால் அவர் மீண்டும் வேலைக்கு வரும்வரை சிறைச்சாலைக்குள் கடிதம் விநியோகிப்பதில்லை. ஏனெனில் பூசாவில் இருந்த, தமிழ் தெரிந்த ஒரே ஒரு கடிதப் பரிசீலனை அதிகாரி அவர் மட்டும் தான்.

---



அபீர்ராஜன் அன்ரனிபீற்றர்

# யாருக்கு எடுத்துரைப்போம்?



காகம் என்றாலென்ன குயில் என்றாலென்ன
கழுகுபோல் ஆகிவிட முடியுமா?
சோகம் தான் தமிழர் வாழ்வு முழுதும்
அதைச் சொல்லிடவும் வேண்டுமா?
பாகம் பிரிப்பதற்குப் பாம்பிடமா செல்வது?
பால் வார்த்தாலும் விசமில்லை என்றாகிவிடுமா?
வேகக் கட்டுப்பாடு வண்டிகள்
மோதுண்டே நிற்கும் முதலுமில்லை

போராடி உரிமை கேட்ட மண்ணில்
சுழலும் சொற்போரே நடக்கிறது
வேரோடு சாய்த்திட எண்ணிடும் முதலைகள்
போதையில் புரள்கின்றனர் விடலைகள்
யாருக்கு எடுத்துரைப்போம் எம்மின நிலமையை?
பேருக்குத் தான் எமது தலைமைகள்
ஊருக்கு நன்றாய்ச் சொல்கிறார்கள் உபதேசம்
உலகமே போடுது பல வேசம்

கூச்சலும் குழப்பமும் செய்த முடித்திட்டார்
கொள்கைதான் பெரிதென்று பிரிந்திட்டார்
வீச்சான வாய்ச் சொல்லில் வீரர்கள்
அடுத்த தேர்தலுக்கே இந்த மோதல்கள்
அச்சமில்லை என்று மக்கள் எண்ணும்படி
ஆருயிரும் நோக்காரே தலைவர்கள்
உச்சமென மக்கள் மனங்களில் உயர்வார்
எச்சமென அப்படியாய் எவருமிலர்?



சிவரம்யா

# புதுமை செய்க் வருக!

வினைகள் தீர்க்கும்
விகாரி ஆண்டே வருக!
அன்பதனை உணர்த்தி
அகிலமதைக் காக்க
ஏற்றங்கள் நாம் காண
ஏமாற்றாது அருள் தருக!
உஷ்ணத்தை நீக்கி
உலகில் மழை தருக
பகைமை பாவம் அகற்றி
பண்பு தனை அருள்க
நல்லறம் நாம் புரிந்து
நன்மை என இனி உணர்க!

மேடை - 25

தொடர்



# அதியுயர் காண்டத்து மேடைகள்

தையிட்டி. அ.இராசதுரை

வீட்டின் வடக்கு வேலி வீட்டோடு மருவியபடியே நிற்குமந்தப் பெரிய புளியமரத்தின் பெரிய கொப்பொன்றும் தடாலென்ற அதிர்வான சத்தத்தோடு, நெருக்கிட்டு முறிந்து விழுவதுபோன்ற பேரிடிச் சத்தம்... இனியாவது படுத்தெழும்புவோம் என்ற... படுக்கைச் சுகம் காணவென்ற அவதித் துடிப்போடு, படுக்கைக்குப்போன அந்த இனிய தாம்பத்தியத் தம்பதியரிருவரும்... இந்தவலச் சத்தத்தோடு, திடுக்கிட்டுத் திசை மாறி, துடித்துப் பதைத்துக் கொண்டே, கட்டிலைவிட்டெழும்பிப் பேய் அடித்தவர்கள் போல், முழிசித்தள்ளிக் கொண்டே நின்றார்கள்...!

✦ ✦ ✦ ✦

விளக்கு அணைக்கப்படாமலே, எரிந்து கொண்டுதானிருந்தது. நேரமும் பிற்சாமம் 2மணியைத் தொட்டுக் கொண்டிருந்தது... "இதென்ன காத்துமில்லை... ஒண்டுமில்லை..." இந்தப் பேரிடியுலகில், தோன்றிய மனிதன், முதலில் வாய் திறப்பதுபோல அர்ச்சுணா அதிர்ச்சி நீங்கியவனாய்... இப்படிக் கொஞ்சம் சத்தமாகச் சொல்லியபடியே, ரோர்ச் லைற்றையெடுத்து, படுக்கையறை ஜன்னலைத் திறந்து, புளியடிப் பக்கமாக அக்கறையோடும், அவதியோடும் பயந்து பயந்து ஒளிபாய்ச்சிப் பார்த்தான். அப்படிக்கி எந்தப் புளியம் கொப்பும் முறிந்த மாதிரித் தெரியவில்லை.

"அப்ப பின்ன இதென்ன கோதாரி... பேய் பிசாசு விளையாட்டோ, அதோ... இதோ..." என்றெல்லாம் அர்ச்சுணாவின் வாயலட்டல் தொடங்கி, பயத்தை இன்னுமின்னுமாய்க் கடுகதியில், கூட்டத் தொடங்கத் திடீரென்று சுடலையில் எரிந்து கொண்டிருக்கும் பிரேதத்தின் சகிக்க முடியாத வெடில் மணம் வந்து, அறை முழுதும் சடாரென்று வீசித் தள்ளுவதுபோல், பிணி நாற்றம் கூடிக் கூடி... வெளி மேலே வித்தியாசமான சத்தம் கேட்டு, அசுமாத்தங்களை அர்ச்சுணா, உணர்ந்து பிடிக்க மகா பயமானது, அவனைப்போட்டு ஆட்டியலைக்கத் தொடங்கி அவனைப்போட்டுச் சிப்பிலியாட்டி வைக்கிறது...



வீட்டின் கூரை ஓடுகளுக்கு மேலால் யாரோ நடப்பதுபோன்று திடீரென்று...! அசிங்கமாகச் சிரிப்பதுபோல்...! நாயொன்று கில்லிட்டுக் கத்துவதுபோல்...! திகைப்புக்கள் கோவிலடிப் பக்கச் சத்தங்களும் திடீரென்று கேட்டுக் கேட்டு அர்ச்சுணாவுக்கு எல்லுப்போலையொரு ஆறுதலைக் கொடுத்துக் கொண்டிருக்க, ஒரே நீட்டுக் கெரிந்து தன்னையே கொடுத்துக் கொண்டிருந்த கைவிளக்கும் என்ணை வற்றிச் சீவனை விடுவதற்கு ரெடியாகிக் கொண்டிருந்தது...

கானுக்குள்ளும் ஒரு சொட்டு எண்ணைத் துளியுமில்லை. நாளைக்குத்தான் பிரி கேட்டிலிருந்து றேசன் கொடுப்பனவு வாற கணக்கு... இப்ப இந்தக் கைவிளக்கும் இந்த இக்கட்டான கட்டம் பார்த்துச் சுனாமி அலையடிக்கும் நட்ட நடுச் சமுத்திரத்தில் கவிழ்ந்து போன படகாகிவிட்டதுபோல், அர்ச்சுணா தலையிலடித்துக் கொண்டான்...!

பாவியள் போன இடம் பள்ளமும் திட்டியும்போல், மூன்று பற்றரி ரோர்ச்சும், பற்றரி வீக்காகித் தன்னிடமுள்ள வெளிச்சத்தை அருந்தி வருந்திக் கொடுப்பது போல் ஆபத்துப் படகாய்க் கொடுத்துதவிக் கொண்டிருந்தது.

வெளியில் திசை பிடிபடாத முறையில் குதிரை கணைப்பதுபோன்ற கரடு முரடான சத்தம்...! நேரமும் இரண்டரை என்று அர்ச்சுணாவின் வாய் அன்னம்பற அகோரக் கலக்கடியில் மூணுக்குமப்பால் போய்விட்ட நிலையைத் தொட்டு நின்றுகொண்டிருந்த ளுவம்வேலி நெருக்கிடுவதுபோன்ற அகோர சத்தம் சாவடியைத் தொடர்ந்து, உய்யென்றொரு சுழிக் காற்றின் உலுப்பல்... திடீரென்று புகை போன்று அந்தர பவனியில், ஆணும் பெண்ணுமாய் இரண்டு, அகோர உருவங்களின் வெளிப்பாடு... அந்த ஆவி உருவங்களின் பின்னால், அவற்றோடு ஒட்டியபடியே நாய் உருவம்! அர்ச்சுணாவுக்கு இது சுது பண்டாவின் கிறைநெற் வீச்சில் வீரச்சாவடைந்துபோன அந்த மகத்தானரைகர் உட்பட சூசைட் பண்ணி முடித்த, கரடியார் பெமிலியின் ஆவிக் காட்சி தானென்பதைத் தனக்குள் அன்டஸ்ற்றாண்ட் பண்ணி முடித்து இன்னுமின்னுமாய்... பதறிப் பதகழித்து அந்த நேரத்திலும் தாரை தாரையாய்... வியர்த்துக் கொட்டிக் கொண்டிருக்க...

அந்த மூன்று உருவங்களும் தரித்து நிற்காமல் அப்படியே கோடிழுத்துக் கொண்டு போன கணக்காய்... தெற்கு நோக்கிப் போய் ஒரு நெருப்பு வெளிச்சமாய் மறைந்தும் விடுகின்றன. அந்தக் கையோடு மீண்டும் ஒரு திடீர்ச் சுழல் காற்றுச் சிலாவ... பேந்தும் தான் ஒரு வெடில் நாற்றம் வீசித் தள்ளுகின்றது.



பாவியள் போன இடம் பள்ளமும் திட்டியும்போல், மூன்று பற்றரி ரோர்ச்சும், பற்றரி வீக்காகித் தன்னிடமுள்ள வெளிச்சத்தை அருந்தி வருந்திக் கொடுப்பதுபோல் ஆபத்துப் படகாய்க் கொடுத்துதவிக் கொண்டி ருந்தது. வெளியில் திசை பிடிபடாத முறையில் குதிரை கணைப்பதுபோன்ற கரடு முரடான சத்தம்...!

✦ ✦ ✦ ✦

அந்த நேரம் பார்த்து றொய்லெற் கதவைச் சடாரெனத் திறந்து கொண்ட மாதவி, மூக்கை அமத்திப் பிடித்துக் கொண்டே, "இதென்னப்பா இது?" என்று குளறிச் சத்தம் போட்டாள். இந்தப் பிணி நாற்றத்துக்கு இவ்வளவு அக்கப்பாடுகளும் போட்டுத் தள்ளிவிட்ட தன்னுடைய வைவ் ஆன மாதவி, சற்று முன்னடியாகத் தான் கண்டு முடித்த, ஐயிற்றத்தை நேர்கொண்டு பார்த்திருப்பாளானால், அந்த இடத்திலேயே குளோசாகி விடுவாளென்று நூறுக்கு நூறு வீதமாகவும் நம்பிக் கொண்ட, புத்திசாலி அர்ச்சுணா, அந்தச் சம்பவிப்பைப் பற்றிச் சொன்னாலும்தான் அதுவும்தான் பெரிய டேஞ்சராக முடிந்துவிடு மென்ற ஐடியாவோடு அதை மறைத்துவிட்டு...

மாதவி, வயிற்றையமத்திப் பிடிக்கத் தொடங்கவும் அர்ச்சுணா தாமதிக்காது கிழக்கு வாசல் கதவைத் திறந்து, சடாரென்று அவளை றொய்லெற்றுக்குள் விட்டு விட்டு.. அந்தர பவனியில் நிற்க முடியாமல் நின்றுகொண்டிருந்தான். திடீரென்று கண்டதே காட்சி, கொண்டதே கோலம்போல கிழக்குப் பக்கதுத்து முட்கி

---



# தமிழ்ப் புத்தாண்டே வருக!

தமிழ்ப் புத்தாண்டே வருக!
தமிழர் தம் வாழ்வில் ஒளிபெறவே வருக!
பாதையிலே போதைவஸ்து அகலவே வருக!
போதையற்ற நாடாக மாற்றவே வருக!
பாதையில் பெண்கள் அச்சமின்றி நடக்கவே வருக!
தேவையற்ற கலாசாரங்களைத் தூக்கிவீச வருக!
சேவை செய்யும் மானிடத்தை வாழ்த்தவே வருக!
தமிழ்ப் புத்தாண்டே வருக!

வேற்றுமை மறந்து தமிழினம்
ஒற்றுமையாய் வாழவழி பிறக்கவே வருக!
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
இரண்டு பட்டால் உரிமை கிடைக்காதென்று
இடித்துரைக்கவே வருக!
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கண்ணீருக்கு
விடையளிக்கவே வருக!
காணி, நிலம் வேண்டிப்



போராடும் உறவுகளுக்கு
தீர்வு வழங்கவே வருக!
நல்லதோர் அரசியல் தீர்வு
கிடைக்கவே வருக!
தமிழர் நாம் சம உரிமை
பெற்று வாழ வழி
பிறக்கவே வருக வருக
தமிழ்ப் புத்தாண்டே வருக!

வேலணையூர்
பொன்.நகுலன்





கட்டுரை

# ‘குடி’காரர்களைக் கண்டால் குதூகலிக்கும் நுளம்புகள்!

மனிதனை ஆட்டிப்படைக்கும் போதையால் நுளம்புகளை எதுவும் செய்ய முடியாது என்பது ஆச்சரியத்திலும் ஆச்சரி மில்லையா? மதுபானம் அருந்திப் போதையில் திளைத்திருக்கும் மனிதர்களின் குருதியைக் குடிக்கும் நுளம்புகளுக்குப் போதை உண்டாகாது என்று கண்டறியப்பட்டுள்ளது. அமெரிக்காவின் பிலடெல்பியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் தான்யா டாப்கே என்பவர் தான் இதைக் கண்டறிந்துள்ளார்.

மது அருந்தியவரின் குருதியில் மதுபானத்தின் சதவீதம் குறைவாகவேனும் இருக்கும். அந்த நபரின் குருதியைக் குடிக்கும் நுளம்புக்கு எவ்வித பாதிப்பும் இருக்காது என்றுள்ளார் அவர்.

அத்தோடு ‘பொப்புலர் சயன்ஸ்’ என்னும் இதழில் அமெரிக்காவின் வடகரோலினா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பூச்சியியல் துறைப் பேராசிரியரான கோபி ஸ்சால் என்பவர் எழுதிய கட்டுரையில், ‘மதுபானத்தைக் குடித்த ஒருவரது குருதியில் 0.2 சதவீதம் அளவுக்கு மதுச் செறிவு இருக்கும். அந்த நபரது குருதியைக் குடிக்கும் நுளம்பின் செயற்பாட்டில் அதனால் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை’ என்று குறிப்பிட்டுள்ளார். நுளம்பு உள்ளேடுக்கும் மதுகலந்த குருதியால் நுளம்பின் உடலில் எவ்வித மாற்றமும் ஏற்படாது.

இதற்கு அதன் பரிணாம வளர்ச்சி காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஏனெனில், நுளம்பு உள்ளெடுப்பவை நேரடியாக அதன் செரிமான மண்டலத்துக்குச் சென்று நொதித்தல் வினைக்கு உட்படுவதால், திரவங்கள் அதன் மத்திய நரம்பு மண்டலத்தை அடைவதில்லை என்று கருதப்படுகிறது. நுளம்புகள் மட்டுமின்றி அனைத்து விதமான பூச்சிகளும் குடிக்கும் சாறுகள் நேரடியாக அதன் உடல் முழுவதும் பரவுவதில்லை. பூச்சிகளின் செரிமான மண்டலத்தில் நடைபெறும் நொதித்தல் நிகழ்வின்போது மதுபானம், பாக்ரீரியா உள்ளிட்ட தீமை விளைவிப்பவை தனியே வெளியேற்றப்படுகின்றன என்று கூறுகிறார் லண்டனிலுள்ள ‘நேச்சுரல் ஹிஸ்ரோறி’ அருங்காட்சியகத்தின் மூத்த அதிகாரியான எரிக்கா மெக்அலிஸ்டர்.

அத்தோடு ‘ஓ’ குருதி வகையைக் கொண்டிருப்பவர்களின் குருதியை நுளம்புகள் குடிப்பதற்கு இரண்டு மடங்கு அதிக வாய்ப்புள்ளது. அதுமட்டுமின்றி, அதிக உடல் வெப்பத்தைக் கொண்டிருப்பவர், கர்ப்பமாக உள்ளவர்,

அதிகளவு காபன்டைஒக்சைட்டை வெளியிடுபவர் ஆகியோரை நுளம்புகள் அதிகளவில் கடிப்பதற்கு வாய்ப்புள்ளதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. இவற்றிலிருந்து நுளம்புகளுக்குப் போதையுண்டாகது என்பது தெளிவாகிறது.

ஆனால், போதையிலிருப்பவர்களைக் கண்டுவிட்டால் நுளம்புகளுக்குக் கொண்டாட்டமாக இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. காரணம் போதை வசப்பட்டவர்களைத் தஞ்சமடைந்து குருதி குடிக்கும்போது அவர்கள் நுளம்புகளை விரட்டுவதில்லையாம்... இதனால் போதை மயக்கத்தில் தம்மை அரவணைத்துக் கொள்ளும் இந்த மதுப் பிரியர்களிடமிருந்து தமக்குத் தேவையான குருதியைப் புசிப்பதில் நுளம்பு களுக்குத் தடையேதுமில்லையாம்...! குடிகாரர்களைக் கண்டு இதனால் தான் நுளம்புகள் குதூகலிக்கவும் செய்கின்றன.






மீசாலையூர் கமலா.

## விகாரிப் புத்தாண்டே எமக்காய் எழுந்து வருக!

விகாரிப் பெண்ணே எழுந்து விட்டாயா?
ஆஹா! என்ன அழகு என்ன அழகு!
எங்கள் கலாசார ஆடைகள் அணிந்து
சித்திரையாளே! சீராக எழுந்து வருபவளே!
தேசமே உன் பாதங்களைத் தொட்டு வணங்குகின்றது
தோசங்கள் யாவற்றையும் நீ நீக்கியே
நாட்டுக்கும் நமக்கும் நலங்கள் விளைவிப்பாய்!
நாட்டில் தாண்டவமாடும் போதைப் பொருள்கள்
வன்முறைகள் யாவற்றையுமே விரட்டியடிக்க வருக

ஓ! விகாரிப் பெண்ணே!
நேர்மை, நீதி, நேசம், நலங்கள் தருவதற்காய் எழுந்து வருக
இரு இனங்கள் கொண்டாடும் புத்தாண்டே
இன்பத் திருநாளே எழுந்து வருக
அர்ச்சனைகள், ஆராதனைகள், சோடனைகள் புத்தாடைகள்
திரும்பும் இடமெல்லாம் உனக்கு வரவேற்புக்கள்
'பா'க்களில் அடக்கிடவே முடியாது
பாதங்கள் பற்றுகின்றோம் விகாரிப் பெண்ணே!
எமது உயர்வுக்கு உற்ற துணையாகிட எழுந்து வருக!



முருகேசுபிள்ளை செல்வராஜா



## சித்தத்தை வென்றிடும் சித்திரை

சித்திரை வருடம் பிறந்ததம்மா இளம்
சேயிழையர் முகம் மலர்ந்ததம்மா!
சித்தத்தில் இன்பம் பெருகி நிற்க இன்று
சீர்மிகு விகாரி வந்ததம்மா!.
பொங்கிப் படைத்த பட்சணத்தோடு இறையை
போற்றி வழிபடும் நாளிதம்மா!
எங்கும் ஒலித்திட வெடியோசை இன்று
இன்முக நாளது சேர்ந்ததம்மா!.
செங்கமலத் துறை லட்சுமியாள் இல்லம்
சேர்ந்திடும் நாளதும் வந்ததம்மா !
மங்களம் பாடியே மனை சிறக்க இனிய
விகாரிப் புத்தாண்டு மலர்ந்ததம்மா!.

விகாரி வருடம் பிறந்ததம்மா – அது
மக்கள் மகிழ்ந்திடச் செய்ததம்மா!
வந்தனம் செய்து வரவேற்க – யாவரும்
வாசலில் கூடியே நிற்போமம்மா!
சிங்கள தமிழர் உறவினிலே – என்றும்
சீர்மைகள் பெருக வேண்டுமம்மா!

இங்கு வாழ் மக்களின் ஐக்கியம் தினமும்
இதயத்தில் நிறைந்திட வேண்டுமம்மா!
அன்பு, அகிம்சை பெருகிடட்டும் நல்ல
அருளோடாற்றல் ஓங்கிடட்டும்
துன்பம், துயரம், தொல்லையெலாம் நீங்க
தூயதாம் விகாரி வழிதரட்டும்!
நீதி நிலைத்து நிறைகாத்து – வரும்
தீது அகன்று அருளிடட்டும்!
சாதி, சமய பேதமெலாம் நீங்கி
சூது வாதுகள் ஒழிந்திடட்டும்!
மூடிய முகிலது கலைந்திடவே
மூடங்கள் வாட்டங்கள் பறந்திடட்டும் !
தேடிய செல்வமெம் தேயிலையால் இந்தத்
தேசமே நன்கு செழிந்திடட்டும்!

நாற்றுக்கு உரமாகும் பசளையைப்போல் இந்த
நாட்டுக்கு உரமாகும் தோட்ட மக்கள்
மாற்றும் வழிதேடும் காலம் கண்டு
புதுப் பேற்றுக்கு வழிதேட முனைய வேண்டும்!
கடமையைக் கண்ணெனக் காண்பவர்கள் கட்டாயம்
மடமையைப் பொசுக்க வேண்டும்
உடமையாய்க் கல்வியை உயர்த்தி எண்ணி – கற்றலால்
உயரிய சமூகத்தைக் காண வேண்டும்!
ஆளுக்கொரு கட்சி மாறி மாறி – புதிதாய்
நாளுக்கொரு சங்கம் தோன்றி
வாழ்வுக்கொரு பாதை காண்பிக்கவே – மலையக
வருங்காலத் தலைமைகள் இணைய வேண்டும்!
நாளொடு கட்சியில் சேர்ந்துகொண்டு – தினம்
பொழுதொரு அறிக்கையை விட்டுக்கொண்டு
மல்லுக்கட்டும் கட்சி அரசியல் இனியும்
மலையகத்தில் வேண்டாம்! வேண்டாம்!

வடக்குக் கிழக்குப் பூமியிலே
வசந்தம் நிலைத்து நீள வேண்டும்
அடக்கு முறையின் அடையாளமாம் அங்குள்ள
அவலப் பிரச்சினைகள் தொலைய வேண்டும்!
போரின் சத்தம் வேண்டாம் ! வேண்டாம் !
இனியங்கு குருதிக் கறைகளும் படிய வேண்டாம்
சித்தத்தை வென்றிடும் சித்திரையில் வெறி
பித்தத்தை மறந்து வாழ்ந்திடுவோம்!
வேண்டும் வேண்டும் அமைதியென்று – புத்தாண்டை
வேண்டுதல் செய்து வரவேற்போம்
மீண்டும் நமது நாட்டினிலே – நல்ல
மேன்மைகள் தொடர வேண்டி நிற்போம்!
பிஞ்சுக் குழந்தைகளுக்கும் இதைக் கூறி – வரும்
பிரிவினை வாதத்தை மாய்த்திடுவோம்!

# ராசிபலன்



# இந்த வாரம்

**14.04.2019 முதல் 20.04.2019 வரை**

நீங்கள் எப்படி?

## மேடம்

ராகு, சுக்கிரன், குரு, சந்திரன் சிறப்பான பலன் வழங்குவர். பணிகளில் சுறுசுறுப்பும் நேர்த்தியும் இருக்கும். உடன் பிறந்தோர் இணக்கத்துடன் இருப்பர். வெளியூர் பயணம் அளவுடன் இருக்கும். வீடு, வாகனத்தில் பாதுகாப்பில் கவனம் வேண்டும். பிள்ளைகளின் ஆர்வக் கோளாறால் குளறுபடி ஏற்படலாம். சொத்து ஆவணம் பிறர் பொறுப்பில் தர வேண்டாம். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்..மனைவியின் நற்செயல்களை பாராட்டுவீர்கள்; தொழில் வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வதன் மூலம் வளர்ச்சி கூடும். பணியாளர்கள் கேட்ட கடனுதவி கிடைக்கும். பெண்கள், கணவரின் அன்பு பாசத்தில் திளைப்பர்.

## இடபம்

சூரியன், புதன், குரு, சந்திரன் அனுகூலமான இடத்தில் உள்ளதால் மனதில் வேகமும், செயலில் உற்சாகமும் ஏற்படும். குடும்பத்தில் சுபநிகழ்வு ஏற்படும். சமூகப் பணிகளில் ஆர்வம் கொள்வீர்கள். தாய்வழி உறவினர் உதவுவர். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். பிள்ளைகளின் அறிவாற்றல் மேம்படும். எதிரிகள் விலகிச் செல்வர். உடல்நலம் சீராக இருக்கும். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர உதவுவீர்கள். தொழில் வியாபாரத்தில் படிப்படியாக வளர்ச்சி ஏற்படும். பணியாளர் கூடுதல் வேலை வாய்ப்பை பெறுவர். மாணவர்கள் படிப்பில் அதிக முன்னேற்றம் காண்பர்.

## மிதுனம்

சூரியன், புதன், சுக்கிரன், குரு ராஜயோக பலன் தருவர்; திட்டமிட்ட காரியம் நிறைவேறும். பண வரவு அதிகரிக்கும்; வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. பிள்ளைகள் பெருமை சேர்ப்பர். உடல் ஆரோக்கியம் மேம்படும். மனைவியின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், உற்பத்தி விற்பனை செழித்து வளரும். அரசு உதவி எளிதாக கிடைக்கும். பணியாளர்கள் குறித்த நேரத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்கள் விரும்பிய புத்தாடை நகை வாங்குவர். மாணவர்கள் நன்றாக படித்து பெற்றோரிடம் பாராட்டும், பரிசும் பெறுவர். செல்லக் கூடாது.

## கடகம்

கேது, சனி, சுக்கிரன், செவ்வாய் அளப்பரிய நற்பலன் தருவர். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நடைபெறும். நண்பர்களின் உதவி கிடைக்கும். நற்பெயரும், புகழும், தேடி வரும். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். பிள்ளைகள் கல்வி, வேலையில் முன்னேற்றம் காண்பர். உடல் ஆரோக்கியம் மேம்படும். வழக்கில் வெற்றி கிடைக்கும். மனைவி இணக்கமுடன் நடந்து கொள்வார். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் லாபம் உயரும். பணியாளர்களுக்கு கூடுதல் சலுகை கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவர். மாணவர்கள் படிப்புடன், கலைகளும் பயில்வர்.

## சிங்கம்

ராகு, புதன், குரு, சந்திரனால் நன்மை உண்டாகும். அக்கம் பக்கத்தவர் அன்பு பாராட்டுவர். செயல்களில் நேர்த்தி இருக்கும். உடன்பிறந்தோருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பூர்வ சொத்தில் பணவரவு உண்டு. பிள்ளைகள் நேர்மறை எண்ணங்களுடன் செயல்படுவர். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியிடம் உறவினர் குடும்ப விவகாரம் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனத்தில் அதிக லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து செயல்படவும். மாணவர்கள் அக்கறையுடன் படிக்க வேண்டியது அவசியம்.. வெளியூர் பயணத்தில் பாதுகாப்பு

## கன்னி

சந்திரன் மட்டுமே ஓரளவு நற்பலன் தருவார். பேச்சில் நிதானம் வேண்டும். நண்பரின் உதவி ஓரளவு கிடைக்கும். வீடு, வாகனத்தில் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். பிள்ளைகள் மனதில் ஆன்மிக சிந்தனை மேலோங்கி, படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள். ஆடம்பரச் செலவுகளை தவிர்க்கவும்;. மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வார். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய அணுகுமுறையை கடைப்பிடிக்கவும். பணியாளர்கள் பாதுகாப்பு விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். மாணவர்கள் சாகச விளையாட்டுகளில் ஈடுபடக்கூடாது. . .

## துலாம்

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூலமாக உள்ளதால் புதிய யுக்தியுடன் பணிகளை துவங்குவீர்கள். சமூக நிகழ்வு இனிய அனுபவம் தரும். வாகன பயன்பாடு அதிகரிக்கும்; பிள்ளைகள் உங்களுடன் இணக்கமாக நடந்து கொள்வர். உறவினர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். உடல் ஆரோக்கியம் மேம்படும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் செயல்களில் சிறு குளறுபடி வரலாம். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும் வாய்ப்பு உள்ளது. பணியாளர் நிர்வாகத்தின் நன்மதிப்பை பெற்று சலுகை பெறுவர்.

## விருச்சிகம்

குரு, சுக்கிரன், சந்திரனால் ஓரளவு நன்மை அடைவீர்கள். சகோதரர்களுடன் இணக்கமாக நடந்து கொள்வதன் மூலம் மன அமைதியை பாதுகாக்க முடியும். புதிய வீடு, வாகனம் வாங்குவதில் தாமதம் ஏற்படலாம். பிள்ளைகள் தங்கள் நற்செயல்களால் பெற்றோருக்கு பெருமை தேடித்தருவர். இஷ்டதெய்வ வழிபாட்டால் வழக்கில் வெற்றி கிடைக்கும். மனைவி வழி உறவினர்கள் பாசத்துடன் பழகுவர். தொழில் வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். பணியாளர்கள் குறித்த நேரத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

## தனுசு

புதன், சுக்கிரன், செவ்வாய், சந்திரனால் அதிக நற்பலன் உண்டு. அன்புக்கு உரியவரின் ஆலோசனை உற்சாகம் தரும்; மனதில் தெளிந்த சிந்தனை பிறக்கும். வெளியூர் பயணம் செல்வீர்கள். பிள்ளைகள், பெற்றோர் சொல் கேட்டு நல்வழியில் செயல்படுவார். பணப் வரவு அதிகரிக்கும். உடல்நலம் சீராக இருக்கும். எதிரிகள் விலகுவர். மனைவியின் செயல்பாடுகள் குடும்ப நலனை பாதுகாக்கும். தொழில் வியாபாரத்தை மேம்படுத்த பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு கூடுதல் வேலை பளு ஏற்படும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவர். .மாணவர்கள் படிப்புடன், கலைகளிலும் ஆர்வர் கொள்வர்.

## மகரம்

சூரியன், சுக்கிரன், ராகு, சந்திரனால் நற்பலன் கிடைக்கும். உங்கள் பேச்சில் ஆன்மிக கருத்து வெளிப்படும். மனதில் தைரியம் வளரும். சகோதரர்கள் உதவுவர். வெளியூர் பயணம் செல்வீர்கள். பிள்ளைகளை இதமாக வழி நடத்தி படிப்பு செயல்திறனில் முன்னேற்றுவீர்கள். குல தெய்வ அருள் உண்டு. கடன் வாங்குவதில் நிதானம் வேண்டும். சீரான ஓய்வு உடல்நலத்தை பாதுகாக்கும். மனைவியின் மனதில் உங்கள் மீதான நம்பிக்கை அதிகரிக்கும். தொழில் வியாபாரம் கூடுதல் உழைப்பால் சீரான வளர்ச்சி பெறும். பணியாளர் பணியிடத்தின் சூழல் அறிந்து பணிபுரிய வேண்டும். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் வேண்டும்.

## கும்பம்

கேது, சுக்கிரன், குரு, சனீஸ்வரர் அளப்பரிய நற்பலன் வழங்குவர். நண்பரால் உதவி உண்டு. மனதில் தைரியம் வளரும். இஷ்ட தெய்வ அருளால் திட்டமிட்ட பணி நிறைவேறும். நடைமுறை வாழ்வு சிறப்பாக இருக்கும். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வாகனத்தில் மிதவேகம் நல்லது. பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். உடல்நலம் பிரச்னை குறையும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி உங்களின் நற்குணங்களை பாராட்டுவார். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரித்து பணவரவு கூடும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிவர். சலுகையும் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்..

## மீனம்

சுக்கிரன், செவ்வாய், சந்திரன் அனுகூல பலன் தருவர்;.மனதில் உத்வேகமும், செயல்களில் வசீகரமும் ஏற்படும். குடும்பத்தில் சுபநிகழ்வு உண்டாகும். பிள்ளைகளின் விருப்பங்களை வசதிக்கேற்ப நிறைவேற்றுவீர்கள். எதிரியால் இருந்த தொந்தரவு குறையும். எதிர்கால தேவை கருதி பணம் சேமிப்பீர்கள். உறவினர்கள் நல்ல ஆலோசனை சொல்வர். மனைவியின் அன்பு, பாசத்தில் மனம் நெகிழ்வீர்கள். தொழில் வியாபாரம் அபரிமிதமாக செழித்து வளரும். பணியாளர்கள் பணி இலக்கை எளிதில் பூர்த்தி செய்வர். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

# தென்கிழக்கு திசையில் இருந்து...



பதிவுகள்

## களை கட்டியது



மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இந்த முறை சித்திரைப் புத்தாண்டு வியாபாரங்கள் களை கட்டியிருந்தன. குறிப்பான புத்தாடைகள் வாங்குவதில் தமிழ் மக்கள் பெரும் ஆர்வம் காட்டியதுடன் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை வாங்குவதிலும் பெரும் ஆர்வம் காட்டியதால் வியாபார நடவடிக்கைகள் களை கட்டியிருந்தன.

ஜவுளிக் கடைகள் மக்கள் நிறைந்து காணப்பட்டதுடன் புடவை வியாபாரத்தில் ஈடுபடும் அங்காடி வியாபாரிகளுக்கும் நல்ல வியாபாரங்கள் இடம்பெற்றன. இதேவேளை இந்த மாவட்டங்களில் சித்திரைப் புத்தாண்டையொட்டிய கலை, கலாசார நிகழ்வுகள் உட்பட புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகளை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**சமாதானமும் சுபீட்சமும் நிறைந்த புத்தாண்டு மலரட்டும்**






## வெள்ளரிப் பழப் பருவம்

தென்கிழக்குப் பிரதேசத்தில் தற்சமயம் வெள்ளரிப்பழப் பருவம் ஆரம்பமாகியுள்ளதுடன் பல இளைஞர்களுக்கு நாளாந்த வருமானம் தரும் வியாபாரமாகவும் மாறியுள்ளது. இறைக்கும் கொடும் வெயிலால் உடல் உஷ்ண நிலை உயர்ந்து மக்கள் பரிதவிக்கும் இந்த நிலையில் உடல் உஷ்ணத்தைத் தணிப்பதற்குப் பெரிதும் பயன்படும் இந்த வெள்ளரிப்பழங்களை வாங்கி உண்பதில் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். மட்டக்களப்பு கிரான் மற்றும் படுவான் கரைப் பிரதேசங்களிலிருந்து ஆட்டோக்கள், மோட்டார் சைக்கிள்களில் கொண்டு வரப்படும் வெள்ளரிப் பழங்கள் தின மும் சில மணிநேரங்களிலேயே விற்பனையாகி முடிவதுடன் பல இளைஞர்களுக்கு நாளாந்த வருமானம் தரும் தொழிலாகவுள்ளது.

**காலமறிந்து பயிர் செய்!**





## போதை ஒழிப்பு மாநாடு

கல்முனை புகைத்தல், போதைப் பொருள் ஒழிப்பு செயலணியினரால் ஒழுக்கமுள்ள போதையற்ற சமூகத்தை உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளிலான புகைத்தல் போதைப் பொருள் ஒழிப்பு மாநாடு ஒன்று நடைபெற்றது.

செயலணியின் தலைவரும் அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவருமான வைத்தியர் எஸ்.எம்.ஏ.அஸீஸ் தலைமையில் கல்முனை முகைதீன் ஜும் ஆ பெரிய பள்ளிவாசலில் இந்த மாநாடு நடைபெற்றது.

மாநாட்டில் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம். அப்துல்லாஹ் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டதுடன் கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் ஹயஸ கருணாரட்ண உட்பட பாதுகாப்பு தரப்பு உயரதிகாரிகள், உலமாக்கள், புத்திஜீவிகள், அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர். பெருமளவிலான பொதுமக்களும் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் புகைத்தல், போதை ஒழிப்புத் தொடர்பில் சத்தியப்பிரமாண நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

**புகைத்தல்,
போதையற்ற கல்முனையைக் காண்போம்.**

## மீளவும் மக்கள் பயபாட்டுக்கு!

கல்முனை மாநகர சபைக்குரிய பொது மண்டபமான நகர மண்டபம் மக்கள் பயன்பாட்டுக்கென மீளவும் வழங்கப்பட ஆவன செய்யப்பட்டுள்ளது. கடந்த சில வருடங்களாகத் தனியார் நிறுவனமொன்றுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த இந்த பொதுமண்டம் மாநகர மேயர் மூத்த சட்டத்தரணி ஏ.எம்.றகீபின் பெரு முயற்சியால் மீட்டெடுக்கப்பட் டுள்ளது. கருத்தரங்குகள், கூட்டங்கள் உட்பட பொதுநிகழ்வுகள் நடத்தவெனப் பொதுமக்கள் மற்றும் அமைப்புக்கள் இந்த நகர மண்டபத்தை வாடகைக்குப் பெற்றுப் பயன்படுத்தலாமென தற்சமயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**தனியாருக்கு வாடகைக்கு
விடவா பொதுமண்டபம்?**

## ஒருநாள் செயலமர்வு

அக்கரைப்பற்றுப் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் பிரிவிலுள்ள உப அஞ்சல் அதிபர்களுக்கு அஞ்சல் திணைக்களம் ஒருநாள் செயலமர்வு ஒன்றை நடத்தியது.

அக்கறைப் பற்று அஞ்சல் அத்தியட்சகர் அலுவலக முதன்மை இலிகிதர் ஏ.சீ.நஸீர் தலைமையில் நிந்தவூர் மாவட்ட தொழிற்பயிற்சி நிலைய மண்டபத்தில் செயலமர்வு நடைபெற்றது.

"தலைமைத்துவமும் ஆளுமையைக் கட்டியெழுப்புதல்' "புதுயுக அஞ்சலின் இலக்கை அடைதல்" ஆகிய தலைப்புக்களில் முறையே பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெகன் முதன்மை இலிகிதர் நஸீர் ஆகியோர் செயலமர்வில் விளக்க உரையாற்றினார். பிரதேச அஞ்சல் அத்தியட்சகருடனான உப அஞ்சல் அதிபர்களின் சிறப்புக் கலந்துரையாடலும் இடம்பெற்றது.

## ஓய்வூதியர் பொதுக்கூட்டம்

அரச சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதிய அம்பாறை மாவட்ட சங்கத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவிருக்கின்றது. சங்கத் தலைவர் ஜீ.வை.சிரிசேன தலைமையில் அம்பாறை நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இந்தக் கூட்டத்தில் அம்பாறை நகர சபை தவிசாளர் எம்.ஏ.சுமிந்த சுதத் முதன்மை அதிதியாகக் கலந்து கொள்வார். நடப்பு வருட அலுவலர் தெரிவுகளுடன் ஓய்வூதியர் நலன்சார்ந்த பிரேரணைகள் பலவும் கூட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ளதாகச் சங்கச் செயலர் ஏ.எல்.எம்.அமீன் தெரிவித்துள்ளார்.

**ஓய்வூதியர் நலன் காப்போம்**



## சிறுபோக நெற்செய்கை!

அம்பாறை மாவட்டத்தில் இந்த முறை மேற்கொள்ளப்படவிருக்கும் சிறுபோக நெற்செய்கை தொடர்பில் விவசாயிகள் பெரும் குழப்ப நிலையை அடைந்துள்ளனர். இந்த மாவட்டத்தில் நீர்ப்பாசனத்துக்கு முதன்மையாகத் திகழும் சேனநாயக்க சமுத்திரத்தில் நீர்மட்டம் குறைந்துள்ளதால் 75 வீதமான காணிகளிலேயே சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ள வாய்ப்புள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. இதனாலேயே செய்கை பண்ணும் காணிகளைத் தெரிவு செய்வதில் விவசாயிகள் குழப்ப நிலைக்குள்ளாகியுள்ளனர்.

**வர்ணபகவானே
மழை பொழிவாயா?**

உலகம்

ரவுண்ட் த வேள்ட்

தொகுப்பு
பிரகாஸ்



# சிரியாவின் இட்லிப் பகுதியில் அல் பக்தாதி பதுங்கியுள்ளார்

ஐஎஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபூபக்கர் அல் பக்தாதி, சிரியாவின் இட்லிப் பகுதியில் பதுங்கியுள்ளார் என்று சிரியப் பாதுகாப்புப் படை அறிவித்துள்ளது. சிரியப் பாதுகாப்புப் படையின் செய்தித் தொடர்பாளர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இதற்கு முன்னரும் ஈராக் பாதுகாப்புப் படைகள் அபூபக்கர் பாக்தாதி உயிருடன் உள்ளார் என்று தெரிவித்து வந்தன. இந்த நிலையில் சிரியாவும் அதை நம்புகிறது. சிரியாவின் கிளர்ச்சியாளர்களுக்கும், ஐ.எஸ். தீவிரவாதி களுக்கும் எதிராக உள்நாட்டுப் போர் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இதில் கிளர்ச்சி யாளர்கள் வசம் இருந்த பல்வேறு பகுதிகள் அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கின்றன.

சிரியாவின் ராக்கா அருகே கடந்த ஆண்டு ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் முக்கியத் தலைவர்கள் பங்கேற்ற கூட்டம் நடந்தது. அப்போது சுகோய் ரக போர் விமானங்கள் மூலம் அவர்கள் குழுமியிருந்த பகுதியில் சுமார் 10 நிமிடம் வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் ஐஎஸ் தீவிரவாத அமைப்பின் 30 முக்கிய தளபதிகளும், அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்த 300க்கும் மேற்பட்ட தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர். இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற ஐ.எஸ் அமைப்பின் தலைவர் இப்ராஹிம் அபு பக்கர் அல் பாக்தாதியும் உயிரிழந்தார் ரஷ்யாவும், அமெரிக்காவும் கூறியது.

எனினும் பாக்தாதி இறந்ததற்கான எந்த உறுதியான தகவலும் இதுவரை கிடைக்கவில்லை. இந்த நிலையில் பாக்தாதிக்கு அந்தத் தாக்குதலில் வெறும் காயம் மட்டுமே ஏற்பட்டது. தற்போது அவர் இட்லிப் பகுதியில் வாழ்கிறார் என்று சிரியப் படைகள் அறிவித்தன.

'தேடப்படுகிறார் பக்தாதி...'

# எபோலா தீவிரம்

ஆபிரிக்க நாடான காங்கோவில் எபோலாவின் தாக்கம் மீண்டும் தீவிரமடைந்துள்ளது. சுமார் 600 பொதுமக்கள் இந்தத் தாக்கத்தால் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் 2013ஆம் ஆண்டு 'எபோலா' நோய் பரவியது. முதலில் கினியா நாட்டில் பரவிய நோய் பின்னர் சியாரா லியோன், லைபிரியா, காங்கோ குடியரசு உள்ளிட்ட நாடுகளிலும் பரவியது. 2016ஆம் ஆண்டு வரை இந்த நோய் தொடர்ந்து பரவி வந்தது. இதில் 28 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டனர். அவர்களில் 11 ஆயிரத்து 310 பேர் உயிரிழந்தனர். 2016ஆம் ஆண்டு பிற்பகுதியில் எபோலா ஓரளவு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

ஆனால் காங்கோவில் ஏபோலாவின் தாக்கம் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அவதானிக்கப்பட்டது. காங்கோவில் கடந்த மூன்று மாதங்களில் சுமார் 600 பேர் எபோலாவால் சாவடைந்துள்ளனர். எபோலாவில் சாவடைந்தவரின் சடலம் வைக்கப்பட்டுள்ள சவப்பெட்டிகூட மிகவும் நுணுக்கமான முறையில் துப்புரவு செய்யப்படுகின்றன. அந்த அளவுக்கு அந்த நோய் அங்கு தீவிரம் பெற்றுள்ளது.

'எபோலா எனும் பேரரக்கன்...'



# பாப்பரசரின் கோரிக்கை

தெற்கு சூடான் தலைவர்களின் காலில் விழுந்து முத்தமிட்ட போப் பிரான்சிஸ் உள்நாட்டுப் போரைத் தடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். ஒவ்வொரு புனித வியாழன் அன்றும் வத்திக்கானில், கைதிகளுடன் தூய்மைச் சடங்கை (கால்களைக் கழுவுதல்) நடத்துவது வழக்கம். ஆனால் ஆபிரிக்கத் தலைவர்களின் காலில் விழுந்து உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுமாறு கூறியது இதுவே முதல் முறையாகும்.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பாப்பரசர், தெற்கு சூடான் தலைவர்களைச் சந்தித்தார். தெற்கு சூடான் அதிபர் சல்வா கிர், எதிர்க்கட்சித் தலைவர் ரியக் மச்சார் மற்றும் 3 துணை அதிபர்கள் கலந்துகொண்டனர். அப்போது அனைவரின் காலில் விழுந்து, முத்தமிட்ட பாப்பரசர், உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவருமாறு வேண்டினார்.



பாப்பரசரின் இந்த எதிர்பாராத செயலால் அனைவரும் அதிர்ச்சிக்குள்ளாகினர். தெற்கு சூடானின் துணை அதிபர்களில் ஒருவரான ரெபேக்கா கரங் கூறும்போது, "இதுபோன்ற நிகழ்வை நான் பார்த்ததில்லை. அப்போது என் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது" என்றார்.

'கடவுளின் பிரதிநிதி...'

# வாழை இலையால் பிரபலமாகும் தாய்லாந்தின் 'சுப்பர் மார்கெட்'

பொலித்தீன் பைகளுக்குப் பதிலாக வாழை இலையைப் பயன்படுத்தும் தாய்லாந்து சூப்பர் மார்க்கெட் ஒன்று அந்த நாட்டில் பிரபலம்டைந்து வருகிறது.

உலகம் முழுவதும் கரியமில வாயுக்கள் வெளியீடு அதிகரித்து வருவதால் உலகின் வெப்பநிலை அதிகரித்து பருவ நிலையில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இதனைத் தடுக்க உலக நாடுகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

அந்த வகையில் தாய்லாந்தைச் சேர்ந்த சூப்பர் மார்க்கெட் ஒன்று பொலித்தீன் பைகளுக்கு மாற்றாக வாழை இலையை அறிமுகப்படுத்தி இருகிறது. இந்த சூப்பர் மார்க்கெட்டில் விற்கும் பொருள்கள் அனைத்தும் குறிப்பாக பழங்கள், காய்கறிகள் அனைத்து வாழை இலையால் பொதி செய்யப்பட்டுத் தரப்படுகின்றன. இதனை வாடிக்கையாளர்களும் வரவேற்று தங்களது ஆதரவை சூப்பர் மார்கெட்டுக்கு வழங்கியுள்ளனர்.

'புதிய முயற்சிதான்...'





# அசாஞ்சே கைதானார்

அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் இரகசியத் தகவல்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியிருந்த விக்கிலீக்ஸ் பத்திரிகையின் இணை நிறுவுனர் ஜூலியன் அசாஞ்சே கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார்.

பிரிட்டனில் உள்ள ஈகுவடோர் தூதரகத்தில் அடைக்கலமாகியிருந்தார் அசாஞ்சே. அவரை அமெரிக்காவும், இன்டர்போலும் தேடப்படும் குற்றவாளியாக அறிவித்தன. ஈக்குவடோர் அரசு அசாஞ்சேக்கான பாதுகாப்பைத் திரும்பப்பெற்றதை அடுத்தே அவர் கைது செய்யப்பட்டார்.

'பத்திரிகை மீதான அடி...'

பகிர்வு

# ஈழத் தமிழர்கள் வேண்டிநிற்கும் தீர்வை 'விகாரியே' கொண்டுவர வேண்டும்



காரை எம்.பி.அருளானந்தம்

பன்னிரு இராசிகளில் முதலாவது இராசி மேடம். மேடத்துக்குள் சூரியன் புகுந்து கொள்ளும் தொடக்க நாள் சித்திரை முதல் நாள் ஆகும். அந்தத் திருநாளே சித்திரைப் புத்தாண்டு. இந்துக்களும் பௌத்தர்களும் இதைக் கொண்டாடுகிறார்கள். புதுவருடப் பிறப்பைப் பண்டிகையாகக் கொண்டாடும் மரபும் உண்டு. சூரியன் நகரும் நிலையைக் கொண்டு பருவகால மாற்றங்கள் ஏற்படுகின்றன. இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என ஒரு வருடத்தில் ஆறு பருவ காலங்கள் ஏற்படுகின்றன. வசந்தம் எனும் இளவேனிற் காலம் உயிரினங்களுக்கு இதமான, சுகமான காலம். மிதமான காலநிலை. பதமான இயற்கைச் சூழல், பூத்துக் குலுங்கும் மலர்களின் மலர்ச்சி, அறுடைக்குப் பின்னர் தானிய விருத்தி போன்றன இளவே



னிற் காலத்து வெளிப்பாடுகள். இந்த மகிழ்ச்சியும் பூரிப்பும் நிறைந்த கொடைவசந்தத்தின் தொடக்கத்தில் புது வருடம் பிறக்கிறது.

**இந்துக்கள் புதுவருடத்தைக் கொண்டாடும் முறை**

புது வருடப் பிறப்பைத் தொடர்ந்து வருகின்ற இளவேனிற் பருவத்தை ஆடல், பாடல், விளையாட்டுக்கள், மங்கலகரமான காரியங்கள், விருந்துண்ணல் என்பவற்றில் மக்கள் ஈடுபாடு கொண்டு இன்பமாகக் களிப்பர்.

இத்தகைய இன்பமான, சம்பிரதாயமான, மரபு வழியான விளையாட்டுக்களும், பொழுது போக்குகளும் மலர்கின்ற புத்தாண்டை அலங்கரிக்கின்றன. உலகியல் இன்பங்களை ஆன்மீகத்துடன் இணைத்து, ஆன்மிக ஒப்புதலுடன் அனுபவிக்கும்போது அதனால் கெடுதல் இல்லை. இந்துக்கள் புதுவருடத்தைக் கொண்டாடி மகிழும் நெறிமுறைகளைப் பார்க்கும்போது இதைப் புரிந்து கொள்ள முடிகிறது. இதனால் வருடப்பிறப்புப் பண்டிகை அதைத் தொடரும் பல்வேறு நிகழ்ச்சிகள் யாவும் சமயத்தோடு தொடர்புபடுத்தி இறை சிந்தனையுடன் ஆற்ற வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

**புண்ணியகாலம்**

புதுவருடப் பண்டிகை ஒரு சமூக விழாவாக மாத்திரம் அமையாது, சமய விழாவாகவும் விளங்குவதில் அதன் சிறப்புத் தனியானது. புதுவருடம் பிறப்பதற்கு முன்னும் பின்னும் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியைப் புண்ணிய காலம் என்பர். இந்தப் புண்ணிய காலத்தில் இறைவனை நினைத்துச் சங்கற்பித்து, மருத்துநீர் தலையில் தேய்த்து நீராடி, புத்தாடை அணிந்து திருக்கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து குரு, பெற்றோர், பெரியோர் ஆகியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று இயன்றளவுக்குத் தான தர்மங்களைச் செய்தல் வேண்டும்.

**கைவிசேடம்**

சுப நேரத்தில் கைவிசேடம் நடைபெறும். கைவிசேடம் என்பது வெற்றிலையில் நெல் அல்லது பச்சையரிசியிட்டு, மஞ்சள் வைத்து அதன் மீது பணம் வைத்துக் குடும்பத் தலைவர் தமது குடும்பத்தவருக்கு வழங்குதல் என்பதைக் குறிக்கும். பெரியோர் முதியவர்களும் இதை வழங்குவர்.

**சுபவேளையில் கருமங்களை ஆரம்பித்தல்**

கைவிசேடத்தைப் பெரியவர்களிடம் பெற்ற பின்னரே கொடுக்கல் வாங்கல் ஏனையவர்களிடம் செய்வது முறை. விருந்துண்ணல், குரு, பெரியவர்கள் தரிசனம் என்பன வியாழன், செவ்வாய் தவிர்ந்த நாள்களில் திதி, நட்சத்திரம், யோகம் என்பன சுபமாகவுள்ள வேளையில் நிகழ்த்தப்ப டும். எந்த வேலைகளையும் நல்ல நாள் மூகூர்த்தம் பார்த்துச் சுப வேளையிலே புது வருடத்தில் தெய்வத்தை நினைத்துத் தொடங்கும் பாரம்பரியம் கடைப்பிடிக்கப்படுகிறது. இவை அனைத்தும் வெறும் சம்பிரதாயங்கள், அர்த்தமற்ற சடங்குகள் என்று கருதிவிடக் கூடாது. இவற்றுக்குப் பின்னால் பல அர்த்தங்கள் உண்மைகள் உண்டு. இவை வீணானவை என்றால் எப்போதோ மறைந்திருக்கும்.

**தமிழ் வருடங்கள் அறுபது**

பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரஜோற்பத்தி, ஆங்கிரஸ, ஸ்ரீமுக, பவ, யுவ, தாதூ, ஈஸ்வர, வெகுதான்ய, பிரமாதி, விக்கிரம, விஷ, சித்திரபானு, சுபானு, தாரண, பார்த்திப, விய, சர்வஜித்து, சர்வதாரி, விரோதி, விக்ருதி, கர, நந்தன, விஜய, ஜய, மன்மத, துர்முகி, ஹேவிளம்பி, விளம்பி, விகாரி, சார்வரி, பிலவ, சுபகிருது, சோபகிருது, குரோதி, விசுவா வசு, பராபவ, பிலவங்க, கீலக, சௌமிய, சாதாரண, விரோதிகிருது, பரிதாபி; பிரமாதீச, ஆனந்த, இராக்ஷஸ, நள, பிங்கள, காளயுக்தி, சித்தார்த்திரி, ரௌத்திரி, துன்மதி, துந்துபி, ருத்ரோத்காரி, ரக்தாக்ஷி, குரோதன, அஷ்ய என ஒவ்வோர் ஆண்டும் மாறி மாறி வந்து போகின்றன. இத்தகு புதுவருடத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் மனப்பூர்வமான நல் வாழ்த்துகளும், நல்லெண்ணங்களும் வாழ்வில் அமைதியும், சாந்தியையும் தரும் என்பது திண்ணம். நீண்ட காலமாக ஈழத்தமிழர்கள் வேண்டிநிற்கும் தீர்வுகள் விகாரியிலாவது கிட்ட வேண்டும். எல்லோரும் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்குரிய ஆண்டாக விகாரி அமைய வேண்டுமென இறைவனை வேண்டுவோமாக.



கே.எஸ்.சிவஞானராஜா



# ''தோற்காத தலைமை வேண்டும்''

சிங்கார மாகவரும் விகாரியே உலகை
சின்னாபின்ன மாக்க நீ வந்திடாதே! இங்கு
எங்காயினும் பங்கம் ஏற்படுமானால் நீ
எழுந்து நீதி கேட்க வேண்டும் அயர்ந்து விடாதே!

மங்காமல் கொள்ளாமல் வரமாக வேண்டும்
மழலைகள் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும்
மகிழ்வ[illegible] வீடுகளில் குடியேற வேண்டும்
புதிய தொழில்களை நீ உருவாக்க வேண்டும்

செங்கமலப் பொற்பாதம் தந்தருள வரவேண்டும்
சித்திரையில் பெருமாரி பூமிக்குத் தரவேண்டும்
தொங்கு நிலைக் குடும்பங்கள் ஒன்று சேரவேண்டும்
தோற்காத தலைமையொன்று உருவாக வேண்டும்

விகாரியில் விவசாயம் பெருக வேண்டும்,
விகாரியில் விபச்சாரம் ஒழியவேண்டும்
விகாரியில் பெண்ணடிமை நீங்க வேண்டும்
விகாரியில் விபத்துக்கள் தடுக்கப்பட வேண்டும்

" பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரஜோற்பத்தி, ஆங்கிரஸ, ஸ்ரீமுக, பவ, யுவ, தாதூ, ஈஸ்வர, வெகுதான்ய, பிரமாதி, விக்கிரம, விஷ, சித்திரபானு, சுபானு, தாரண, பார்த்திப, விய, சர்வஜித்து, சர்வதாரி, விரோதி, விக்ருதி, கர, நந்தன, விஜய, ஜய, மன்மத, துர்முகி, ஹேவிளம்பி, விளம்பி, விகாரி, சார்வரி, பிலவ, சுபகிருது, சோபகிருது, குரோதி, விசுவா வசு, பராபவ, பிலவங்க, கீலக, சௌமிய, சாதாரண, விரோதிகிருது, பரிதாபி, பிரமாதீச, ஆனந்த, இராக்ஷஸ, நள, பிங்கள, காளயுக்தி, சித்தார்த்திரி, ரௌத்திரி, துன்மதி, துந்துபி, ருத்ரோத்காரி, ரக்தாக்ஷி, குரோதன, அஷ்ய என ஒவ்வோர் ஆண்டும் மாறி மாறி வந்து போகின்றன.



எஸ்.தர்சி

# என்னுள் நீ...!

நகருமென் கணங்களில்
காட்சிப் பிழையாய் நீ என்னுள்
சரியாய்ப் பொருந்தியிருக்கிறாய்....
எங்கெங்கு காணினும்
நீயே தோன்றுகிறாய்....

பேருந்துக்காகக் காத்திருக்கையில்...
ஜன்னலோரத்தில் தலை சாய்க்கையில்....
உன் பெயரை சொல்லி யாரையோ
அழைக்கையில்....
மழையின்போது மண்வாசம்
உணருகையில்....
திடீரென மழை நனைக்கையில்....
கொளுத்தும் வெயிலில் மரநிழல்
எதிர்ப்படுகையில்....
முடியைக் கலைக்கும்
ஜன்னல் காற்றில்.....
குழந்தைகளுடன் குதூகலிக்கையில்......
சொந்தங்கள் பலவும் பேசுகையில்....
நண்பியின் திருமணத்தில்....
பாட்டியென் கைபற்றிப் பேசிய
கணங்களில்......

பசி வயிற்றைக் கிள்ளியெறியும் போதில்....
வயிறு நிரம்பியிருக்கும் வேளைகளில்....
வேலை நேரங்களில்....
அமைதியை நாடும் தனிமையில்....
முகப்புத்தகத்துள் நுழைகையில்
அதனுடைய இரகசிய
வார்த்தையாய் உன் பெயரை
இடுகையில்...
மெல்லிசையில் மனம் லயிக்கையில்...
குறுஞ்செய்தி எழுப்பும் ஒலியில்....
படுக்கையில் ஓய்வெடுக்கையில்...
நாளிதழ்கள் வாசிக்கையில்....
கவிதைகள் படிக்கையில் ....
கனவுகளை நினைக்கையில்...
எண்ணங்களைச் சொல்கையில்....
ஏக்கங்களை எழுதுகையில்...
துயரம் மேலிட.
தனித்திருந்து அழுகையில்

மகிழ்ச்சியில் திளைக்கையில்....
படுவேகத்தில் நிதானிக்கையில்...
ரசனை மிகுகையில்....
காலை எழுமுன் கட்டிலில் புரள்கையில்....
இரவு நித்திரையில் வீழ்கையில்....
இதயம் துடிக்கும் தோறும்....
இமைகள் மூடியிருக்கும் போதும்....
வாழ்தலின் தூண்டுதலிலும்...
சாவின் விளிம்பிலும்....
எங்கெங்கு காணினும்..
காட்சிப் பிழையாய் நீ என்னுள்!

# போட்டி

## சொற்சிலம்பம் போட்டி இல: 565

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | ■ |
| 6 | | | | ■ | 7 | | 8 |
| 9 | | ■ | 10 | 11 | | | |
| | ■ | 12 | | | | ■ | |
| ■ | 13 | | | | ■ | 14 | |
| 15 | | | | ■ | 16 | | |
| 17 | | | ■ | 18 | | | ■ |
| 19 | | ■ | 20 | | | | |

அனுப்புபவர் பெயர்:.................................................

முழுமையான தபால் விலாசம்: ...............................

.................................................................

கையொப்பம்:.......................................................

### இடமிருந்து வலம்

1. நித்தியம்
6. குறி
7. அவசரச் செய்திப் பரிமாற்ற முறைகளில் ஒன்று
9. தூங்கு
10. இராஜினாமாச் செய்
12. கணக்கு வகைகளில் ஒன்று
13. இந்தப்போட்டியில்நீங்கள்நிரப்பவேண்டியது இதைத்தான்
14. ஆய்ந்து கொள்
15. ஜோஸ்யம்
16. கட்டியணை
17. பாத்திரம்
18. மணி: நிமிடம், செக்கன் போன்றவை இதன் அளவீடுகளே
19. சாப்பிடு
20. தமிழரின் வரலாற்றில் இதுவும் ஓர் படையணி

### மேலிருந்து கீழ்

1. விளைச்சல்
2. அளவீட்டு அலகுகளில் ஒன்று
3. ஒரு திசையின் சுருக்கம்
4. தன்னைத் தானே பீற்றிக் கொள்வதை இப்படிக் கூறுவர்
5. விளையாட்டு உபகரணம்
7. தோல் வாத்தியம்
8. ஆராய்வு
11. சுவடு
12. பல.பலர் ஒன்று சேர்வதால் வருவது
13. செம்பருந்து
14. இலங்கையின் மாநகரங்களில் ஒன்று
15. வேள்வியில் போடப்படுவது
16. பாடசாலை வகுப்புக்களுக்கு இந்தப் பெயர்
18. இந்தியாவின முதல் பிரதமர்

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தி யில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 563
இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) பாதுகாப்பு (5)புண் (6) விரைவு (7) தியானி (9)தகர்த்தல் (11) புதல்வி (13)தம் (14)தையல் (17) அதிக (19)சய (20)வரம்பு (22) திம்பு (23)உடும்பு

**மேலிருந்து கீழ்**
(1) பாவிப்பு (2) துரை (3) காவுதல் (4) புதிர் (5) புனிதம் (8) யாத்தல் (10) கவிதை (12) தந்திரம் (15)யதி (16) இயல்பு (17) அவதி (18) கம்பு (19)சரம் (21)விடு

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.565**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (24.04.2019 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.565 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 28.04.2019 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறா தவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 563 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
யே.கபிஷா,
யா/பாஷையூர், சென்.அன்ரனீஸ், றோ.க.மகளிர் வித்தியாலயம்.

**2 ஆம் பரிசு**
அ.யூஜின் ஜெனிற்றா,
11ஆம் வட்டாரம் நெடுந்தீவு, மத்தி கிழக்கு.

**3 ஆம் பரிசு**
பானுமதி செல்வராசா
இல.91 மாயவனூர் கிளிநொச்சி.

**4 ஆம் பரிசு**
ச.நித்தியானந்தன்,
பண்ணாகம், சுழிபுரம்

**5 ஆம் பரிசு**
சோபிசகிந்தன்,
இல.21பத்தினியார்,மகிழங்குளம், தாண்டிக்குளம், வவுனியா.

### பாராட்டுப் பெறுவோர்

சிவராஜகுமார் சிவடனுஷன்,
இல.22/14விதானை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

பொன்.கனகரத்தினம்,
சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை

நா.மோகனேஸ்வரன்,
இல.8/1 தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி 563 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

ரமேஸ்குமார் யனுசிகா,
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை
தரம் - 5D




# பள்ளிக்கூடம் போகலாமா?

பள்ளிக் கூடம் போகலாமே
சின்ன பாப்பா
நிறைய பிள்ளைகளோட
பழகலாமே
சின்னப் பாப்பா!

ஆட்டம் பாட்டம்
கொண்டாட்டம்
சின்ன பாப்பா கல்வித்
தோட்டம்
அந்த பள்ளிக் கூடம்
சின்னப் பாப்பா!

பள்ளிக் கூடம் திறந்தாச்சு
சின்னப் பாப்பா உனக்கு
நல்ல நேரம் பிறந்தாச்சு
சின்னப் பாப்பா!

வீட்டுச் செய்தி கதைகள்
பேசி
பொழுது போக்கலாம் அட
ஏட்டுக் கல்வி பாடம் கூட
எழுதிப் பார்க்கலாம்!

உடலும் மனமும்
வளர்வதற்கு
சின்ன பாப்பா ஏற்ற
இடமே இந்தப்
பள்ளிக் கூடம்

பள்ளிக் கூடம் போகலாம்
வா சின்னப் பாப்பா நிறைய
பிள்ளைகளோட
பழகலாம் வா
சின்னப் பாப்பா!






# குயில் அக்கா, காக்கா அண்ணா, ஆந்தையார்

கற்பூரவள்ளி என்ற காட்டில் ஆந்தை குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. ஆந்தைக்கு இரண்டு ஆந்தைக் குஞ்சுகள் இருந்தன. தனது குஞ்சுகளை பேணி பராமரித்து வளர்த்தது தாய் ஆந்தை. குஞ்சுகள் வளர வளர அம்மாவிடம் பல கேள்விகள் கேட்க ஆரம்பித்தன. ஒரு நாள், "அம்மா எல்லாரும் பகலில்தான் சுறுசுறுப்பாக உலாவிக் கொண்டிருக்கின்றனர். நாம் மட்டும் பகலில் தூங்கிவிட்டு இரவில் இரை தேடுகிறோம். நாம் சென்று இரை தேடும் வேளையில் ஊரே உறங்கிக் கொண்டிருக்கிறது. இது ஏன்?" என்றது. "நமக்குப் பகலில் கண் தெரியாது. இரவில்தான் கண் தெரியும். அதனால்தான் நாம் பகலெல்லாம் துங்கிவிட்டு இரவில் சென்று இரை தேடுகிறோம்," என்றது தாய் ஆந்தை. "ஏனம்மா கடவுள் நம்மை மட்டும் இப்படிப் படைத்துவிட்டார்?" என்று கேட்டது இன்னொரு ஆந்தை குஞ்சு. "கடவுள் நம்மையெல்லாம் ஒரே மாதிரித்தான் படைத்தார். முன்னொரு காலத்தில் நம்முடைய முன்னோர்களில் ஒருவர் செய்த தவறைத்தான் நாம் இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்," என்றது தாய் ஆந்தை. "அப்படி என்ன தவறு செய்தார்?" என்று கேட்டன குஞ்சுகள். "ஒரு முறை நம் முன்னோர் ஒருவர் காகம் ஒன்றிடம் மிகவும் நட்பாக இருந்தார். ஒரு நாள் அந்த காகத்திற்கு உடல்நிலை மிகவும் சரியில்லை. எனவே, அதை அழைத்துக் கொண்டு காட்டில் மருத்துவராக இருந்த குயில் மருத்துவரிடம் சென்றனர். "குயில் டாக்டரோ நன்றாக வைத்தியம் பார்த்து காக்காவை குணமாக்கிவிட்டது. அதன் பிறகு குயிலுக்குப் பணம் கொடுக்கணும் இல்லையா? ஆனால், இவர்கள் இருவரும் கொடுக்கவில்லை. எனவே, குயில் எனக்கு கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுங்கள் என்று கேட்டது. "இவர்கள் இருவரும் எங்களிடம் பணம் இல்லை என்று சொல்லிவிட்டு ஓடி வந்துவிட்டனர். அதன் பிறகு இவர்கள் இருவரையும் பார்க்கும் பொழுதெல்லாம் பணம் கேட்க ஆரம்பித்தது குயில் என்னடா தொல்லையாப் போச்சு என்று நினைத்த நம்முடைய பாட்டனாரான ஆந்தையார், பகலில் தலைகாட்டுவதே இல்லை. இரவில் மட்டுமே வெளியே வருவதும் இரையை பிடித்து தின்பதுமாக இருந்திருக்கிறார். "பகல் முழுவதும் மரப் பொந்துகளில் படுத்து நன்கு துங்குவது... இரவில் எழுந்து வெளியே செல்வது... இப்படியே இருந்ததால் ஆந்தையாரை கண்டுபிடிக்க முடியவில்லை குயில் மருத்துவர் அதனால் ஆத்திரமடைந்து குயில் டாக்டர், காக்காவைபிடித்துநன்குதிட்டியிருக்கிறது. "அந்த திருட்டு காக்கா கடுமையாக வேலை செய்தாவது மருத்துவருக்கான பணத்தை கொடுத்திருக்க வேண்டியதுதானே... அப்படி கொடுக்கவில்லை. இதனால் கோபம் கொண்ட குயில் டாக்டர், இனிமேல் எங்கள் இனத்தார் இடும் முட்டைகளை எல்லாம் உன் இனத்தார் தான் காவல் காக்க வேண்டும் என்று சொல்லிவிட்டுசென்றுவிட்டது. "அன்றிலிருந்து குயில் இனத்தார் அனைவரும் காக்கையின் கூட்டில் தங்கள் முட்டைகளை இட்டுவிட்டு சென்று விடுவர். அது குயிலின் முட்டை என்பது தெரியாமலே காக்கை இனம் வளர்த்து கொண்டு வருகிறது. "நம்முடைய இனத்தார் பகலில் தூங்கித் தூங்கியே நமக்குப் பகலில் கண் தெரியாமல் போய்விட்டது.

இதுதான் கதை," என்றதுதாய் ஆந்தை. "அம்மா பிறரை ஏமாற்று வதால் ஏற்படும் கஷ்டம் காலம் காலமாக பலரை பாதிப்பதை புரிந்து கொண்டோம். இனிமேல் நாங்கள் ஒருகாலும் இப்படிப்பட்ட காரியத்தை செய்யவே மாட்டோம்," என்றனர். செல்லமாக தன் குஞ்சுகளை அணைத்து முத்தமிட்டது தாய் ஆந்தை. ■



# அன்புத் தாயின் தாலாட்டு

ஆராரோ ஆராரோ கண்ணே நீ
ஆராரோ ஆரிரரோ!
ஆராடித்தார் நீ அழுதாய்? கண்ணே உனை
அடித்தாதே சொல்லி அழு!
மாமி அடித்தாளோ? உன்னை
மல்லியப்பூச் செண்டாலே!
மச்சான் அடித்தானோ! உன்னை
மாலையிடும் கையாலே!
அக்கா அடித்தாளோ? உன்னை
அலரிப்பூச் செண்டாலே!
அடித்தாரைச் சொல்லியழு அவர்க்கு
ஆக்கினைகள் செய்திடுவேன்!
தொட்டாரைச் சொல்லியழு அவர்க்குத்
தோள்விலங்கு பூட்டிடுவேன்!
யாரும் அடிக்கவில்லை! என்னை
ஐவிரலும் தீண்டவில்லை!
பசிக்கல்லவோ நான் அழுதேன்! எந்தன்
பாசமுள்ள தாயாரே!



நித்திய சுகம் 419

உடலே கோயில்

மருத்துவர் ஜெசிதரன்



# குழந்தைகளும் சூழல் இயைபாக்கமும்

குழந்தைப் பருவம் ஆபத்தை அறியாத ஆழமறியாது காலை விட்டு மாட்டிக் கொள்ளும் பருவமாகும். பெற்றோரும் வீட்டிலுள்ளோரும் கவனம் இல்லாது இருந்தால் குழந்தைகள் விபத்துகளில் சிக்கிக் கொள்ளும் துர்ப்பாக்கிய நிலை தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

**குழந்தைகள் இறப்பு வீதம்**

ஒவ்வொரு வருடமும் எம் நாட்டில் 600 சிறுவர்கள் இறக்கிறார்கள். அதேபோல கிட்டத்தட்ட 2 லட்சத்து 70 ஆயிரம் சிறுவர்கள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுகின்றார்கள். காயங்கள் காரணமாக அதிகமாகக் காப்பாற்றப்படும் சிறுவர்கள் அங்கவீனங்களுடன் வாழ்கின்றார்கள். விபத்துக்களைத் தவிர்த்து வளரும் குழந்தைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அவை பற்றிய அடிப்படை அறிவு அவசியமாகும்.

**குழந்தைகள் பாராமரிப்பு**

குழந்தைகள் நிலத்தில் கிடக்கும் சிறிய பொருள்களை எடுத்து வாயில் போட்டுக் கொள்ளும் இயல்பு கொண்டவர்கள். இதன் விளைவாக வயிற்றோட்டம், வாந்திபோதி போன்ற தொற்றுநோய்கள் ஏற்படலாம். மிகவும் சிறிய விதைகள், குன்றிமணி, பட்டன், மாபிள், முத்து போன்வற்றை மூக்கினுள் செலுத்தும் அபாயமும் உண்டு. இது மூச்சுக் குழாயில் சிக்குண்டு மூச்சுவிடக் கஷ்டம் ஏற்பட்டு போதிய் உடனடிக் கவனம் செலுத்தாத போது இறப்புக் கூட சம்பவிக்கலாம்.

எனவே இவற்றை சிறுவர்களுக்கு எட்டாத வகையில் பேணுவதுடன், நிலத்தில் சிறு பொருள்கள் சிந்தி இல்லாதவாறு நிலத்தைக் கூட்டித் துப்புரவாகப் பேணுதல் வேண்டும். அண்மையில்கூட சமையல் அறையினுள் தவழ்ந்து சென்ற குழந்தை வெங்காயத்தை வாயினுள் செலுத்தி மூச்சுத்திணறலுக்குள்ளாகி பரிதாபகரமாக இறந்த சம்பவம் எல்லோர் மனங்களிலும் சோகத்தை ஏற்படுத்தியது. அதேபோல வீட்டிலுள்ள வயது முதிர்ந்தவர்கள் தம் நோய்களுக்காகப் பாவிக்கும் கிளினிக் மருந்து மாத்திரைகளையும் குழந்தைகளுக்கு எட்டாத உயரத்தில் வைத்தல் வேண்டும்.

**சமையலறை முகாமைத்துவம்**

குழந்தைகள் சமையல் அறையினுள் அழைத்து வருவதைத் தவிர்த்தல் நன்று. கடுகஞ்சி, சுடுநீர் கொட்டுதல், சுடு எண்ணெய் கொட்டுதல், நெருப்புச் சுடுதல் போன்ற எரிகாயங்கள் ஏற்பட அதிகம் வாய்ப்பு உள்ளது. அதிலும் நிலத்தில் அடுப்பு வைத்து சமைக்கும் இடங்களில் மிக மிகக் கவனமாக இருத்தல் வேண்டும். மண்ணெண்ணெய், பெற்றோல் போன்ற எரிபொருள்களை சோடாப் போத்தல்களில் சேமித்து வைக்கவோ அல்லது குழந்தைகளுக்கு எட்டும் உயரத்தில் வைக்கவோ கூடாது. சோடா எனத் தவறாக நினைத்து எரிபொருளைப் பருகும் நிலை ஏற்பட்டு உயிராபத்துக்கள் ஏற்படலாம்.

**சுற்றுப்புறச் சூழல் தொடர்பான அவதானம்**

கிணற்றின் மேல் பாதுகாப்பு கம்பிவலை அற்ற கிணறுகளின் அருகில் குழந்தைகள் செல்வதற்கோ, விளையாடுவதற்கோ அனுமதிக்கக் கூடாது. இயலுமானவரை பாதுகாப்பற்ற கிணறுகளுக்கோ மலக் குழிகளுக்கோ தடுப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளுதல் நன்று. மழை காலங்களில் ஏற்கனவே வெட்டப்பட்ட குழிகளில் தேங்கி உள்ள வெள்ள நீரினுள் வீழ்ந்து மூச்சுத் திணறி இறப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களும் உண்டு.

மோட்டார் கார்களில் பயணிக்கும்போது முன் சீற்றில் குழற்தையை மடியில் வைத்துப் பயணித்தல் கூடாது. பாதுகாப்பு இருக்கையில் குழந்தையை இருத்திப் பயணிப்பதே சிறந்தது. மோட்டார் சைக்கிள்களில் கைக்குழந்தைகளுடன் பயணிப்பது ஆபத்தானதே.

குழந்தைகள் தண்ணீருடன் விளையாடுவதற்கு அதிகம் பிரியப்படுவர். எனவே இது விடயத்திலும் எங்கள் கவனம் இருத்தல் வேண்டும். தமது கைக்கெட்டும் குழாயைத் திறந்து வாளிகளில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் தண்ணீரில் தட்டி விளையாடுதல் குழந்தைகளின் வழக்கம். இதன் காரணமாக அடிக்கடி சளித் தொற்றுக்கு உள்ளாவார்கள். இதனால் வயதுக்கு ஏற்ற நிறை அதிகரிப்பு ஏற்படாத தன்மை ஏற்படலாம். எனவே தேவையற்ற குழாய்களை நன்கு இறுக்கி மூடிவிடுவதும், தேவை முடிந்த பின்னர் நீரைக் கொட்டி விடுவதும் நன்று. சில சமயம் பெரிய பாத்திரங்களில் உள்ள நீரில் விளையாட முனைந்து நீரில் மூழ்கும் ஆபத்தும் நிகழலாம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும். இவ்வாறான பாத்திரங்களை மூடி கொண்டு மூடி விடலாம்.

**வீட்டில் உள்ள பொருள்களின் ஒழுங்கமைவு**

ஒருவயதுக்குக்குறைந்த குழந்தைகளை நீராட்டும்போது அனுபவம் வாய்ந்தவர்களின் உதவியுடன் ஆலோசனையுடனும் கவனமாக நீராட்டவும். இரண்டு, மூன்று வயதுடைய குழந்தைகள் கதிரைகளிலோ சிறிய மேசைகளிலோ அடிக்கடி ஏறி இறங்கி விளையாடும் தன்மை கொண்டவர்கள். பாரம் குறைந்த பிளாஸ்ரிக் கதிரையில் ஏறி இறங்கும்போது சமநிலை தப்பி விழுந்து அடிபடும் நிலை ஏற்படலாம். எனவே பிளாஸ்ரிக் கதிரைகள். சிறிய மேசைகள் மற்றும் கால் உடைந்த சமநிலை அற்றகால்களுள்ள கதிரைகளை அவர்கள் விளையாடும் இடங்களிலிருந்து அகற்றுதல் நன்று. இந்த வயதொத்தவர்கள் மேசை மீதுள்ள பொருள்களை எடுப்பதற்காக மேசை விரிப்புக்களை இழுத்து கீழே வீழ்த்தும் குணம் கொண்டவர்கள். எனவே மேசைக்கோ மற்றும் மேசைகளுக்கோ மேசை விரிப்புக்கள் போடாதிருத்தலே நல்லது. அல்லாது விட்டால் மேசை மீதுள்ள பொருள்கள் அவர்கள் மீது விழுந்து காயங்களையும் முறிவுகளையும் ஏற்படுத்தி விடலாம். மின் அழுத்தியை பாவனையின் பின்பு வைக்கும் போது கூடிய கவனம் செலுத்த வேண்டும். தரையில் வைத்து மின் அழுத்தியைப் பாவிப்பதைத் தவிர்க்கவும். கண்ணாடி அலுமாரிகளை சுவர்ப்பக்கமாகத் திருப்பி வைப்பதால் வெட்டுக் காயங்களையும் அங்க இழப்புக்களையும் தவிர்த்திடலாம். மின்னிணைப்பு பொருத்திகளை அவர்களின் கைக்கெட்டாத உயரத்தில் பொருத்திக் கொள்ளுதல் மூலமும் பாதுகாப்பான மூடியுள்ள பிளக் பொய்ன்ட்ஐ பொருத்திக் கொள்வதன் மூலமும் மின்னொழுக்கு அபாயத்திலிருந்து குழந்தைகளைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். மாடிப் படிகளில் தடக்கி விழுந்து ஏற்படும் காயங்களைத் தவிர்த்திட பாதுகாப்புக் கதவை மாடிப் படிகளுக்குப் பொருத்திக் கொள்ளுதல் வேண்டும்.

பயண விழிப்புணர்வு

துவிச்சக்கர வண்டியில் குழந்தைகளைக் கொண்டு செல்லும் போது அதற்கான ஆசனத்தைப் பொருத்தி அதில் அவர்களை இருத்திக் கொண்டு செல்லலாம். மாறாக ஒரு கையால் குழந்தையை தாங்கிப் பிடித்துக் கொண்டு ஒரு கையால் சைக்கிளை செலுத்துவதை முடியுமானவரை தவிர்த்துக் கொள்ளவும். குழந்தைகளைப் பின் இருக்கையில் ஏற்றிச் செல்வதும் சரியான முறையன்று. ஓரளவு வளர்ந்த குழந்தைகளை பின் கரியலில் ஏற்றிச் செல்லும் போது கால் பாதம் சில்லினுள் அகப்படும் அபாயம் எப்போதும் உள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பாதத்தை மூடிய சப்பாத்து அணியாது சைக்கிளில் ஏற்றக் கூடாது.

**பொழுது போக்கு அம்சங்களில் அதிகளவான கவனம் வேண்டும்**

விட்டின் முன்படலையை எப்போதும் மூடி வைத்திருக்க வேண்டும் குழந்தை விளையாடும் போது பந்து தெருவுக்கு உருண்டேடுவதனாலோ அல்லது பிள்ளைதானே சுயமாகவோ விதிக்கு ஓடிச் சென்று எதிர்பாராத வாகனவிபத்துக்கள் ஏற்படலாம். இதனைத் தவிர்த்திட பிள்ளை விளையாட பாதுகாப்பான இடம் ஒன்றைத் தெரிவு செய்து கொடுத்திடல் வேண்டும்.

பிள்ளைகள் சேர்ந்து விளையாடும்போதும் உங்கள் கண்காணிப்பு இருத்தல் அவசியமாகும் அவர்களிடம் ஏற்படும் முரண்பாடுகளும் காயங்களை ஏற்படுத்தலாம் வளர்ப்புப் பிராணிகளுடன் விளையாடும்போதும் அவதானம் வேண்டும் அவை உணவு உண்ணும் போதோ, நித்திரை செய்யும் போதோ குட்டி ஈன்று இருக்கும் போதோ குழந்தைகள் அவற்றுக்கு அருகேசெல்வதை அனுமதிக்காதீர்கள் அல்லாதவிடத்து அவர்கள் அந்த விலங்குக் கடிக்கு உள்ளாக நேரிடலாம்,

முன்பள்ளிக்கோ, கடைத் தெருவுக்கோ நடத்திக் கூட்டிச்செல்லும்போது, போக்குவரத்து இல்லாத பக்கமாகப் பிள்ளையை வலுவாகப் பிடித்துக் கொள்ள வேண்டும் இது அனாவசிய விபத்துக்களை தவிர்த்திட உதவும். விட்டில் தரித்து நின்ற வாகனத்தை பின்னோக்கி செலுத்தும் போது மிகமிக கவனமாக இருங்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் பிள்ளைகளை வாகனத்தின் பின்புறமாகவோ அண்மையாகவோ, செல்ல அனுமதிக்காதீர்கள். பிள்ளைகள் தனியாகவோ அல்லது அவர்களின் நண்பர்களுடன் சேர்ந்தோ அனுபவமுள்ள ஒருவரின் மேற்பார்வையின்றி நீர்நிலைகளில் குளிப்பதற்கோ அல்லது நீந்துவதற்கோ அனுமதிக்காதீர்கள் எமது நாட்டிலும் நீர்ச்சுழியில் அள்ளுண்டு சாவடைந்த பல சம்பவங்கள் அண்மையில் நடந்துள்ளன.

வழுக்கும் மாபிள் தரையில் வோக்கரில் நடைபயின்ற குழந்தை வேகக்கட்டுப்பாட்டை இழந்து திறந்திருந்த கதவின் வழிபாய்ந்து இறந்ததைத் தொடர்ந்து மேலை நாடுகள் வோக்கரை பாவிப்பதை தடை செய்துள்ளன. நாமும் அதனை பாவிப்பதை நிறுத்தி மூன்று சில்லு நடை வண்டிலை பயன்படுத்தலாம். மேலும் சிறுவர்களுக்கு வயதுக்கு பொருத்தமான விளையாட்டுப் பொருள்களை வாங்கிக்கொடுப்பதை கருத்தில் கொள்ளவும் விளையாட்டுப்பொருள்களின் பைகளில் இது எந்த வயதுக்கு உகந்தது என குறிப்பிடப் பட்டிருக்கும் அதனை பார்த்து வாங்கிக் கொடுக்கவும். இரண்டு வயதுக்கு குறைந்தவர்களுக்கு தகரம், கம்பியினால் உருவாக்கப்பட்டவையும் கூரான விளிம்புகளை கொண்டவையுமான விளை யாட்டுப்பொருள்களை தவிர்த்துக்கொள்ள வேண்டும் சிறுவர்களின் மனதில் பழிவாங்கும் உணர்வு சண்டை வெறி மன விகாரங்களை ஏற்படுத்தும் போர் வாகனங்கள் சுடுகலன் போன்ற விளையாட்டுப் பொருள்களை வாங்கித்தராதிருப்பதே சிறந்தது. எவ்வளவு விலை மதிப்பான விளையாட்டுப்பொருள்கள் வாங்கினாலும், அவற்றை காட்சி அலுமாரியில் வைக்காது பிள்ளைகள் விளையாடி உடைக்க கொடுப்பதே சிறந்தது. இது அவர்களின் மூளைவிருத்தி கற்பனாசக்தியை அதிகரிக்கும் என அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

**பாதுகாப்பான சூழலை வளம்படுத்துவோம்**

சிறுவர்கள் உள்ள விடுகள் படிக்கும் பாடசாலைகள், சிறுவர்களுக்கு நட்புச் சூழலை வழங்குகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதோடு அவை அவர்களுக்கு காயங்கள் ஏற்படுத்தாத, பாதுகாப்பான சூழலாக அமைந்திட உதவுகின்றதா என்பதையும் பெரியவர்களான நாம் உறுதிப்படுத்துதல் அவசியமாகும். சிறுவர்களுக்கு ஏற்படுகின்ற விபத்துக்கள், காயங்கள் என்பவைபற்றி மற்றவர்களையும் விழிப்படைய செய்து எதிர்காலச் செல்வங்களான குழந்தைகளைப் பாதுகாப்போமாக.

*கட்டுரையாளர்*
*நீரிழிவு சிகிச்சை நிலையம்,*
*போதனா மருத்துவமனை*
*யாழ்ப்பாணம்*

# உன்னத வாரம் புனித வாரம்



■ அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

உதயன் பத்திரிகையின் சிறப்பு இணைப்பான சூரியகாந்தியின் இந்த வார கிறிஸ்தவ ஞாயிறு பகுதியில் கிறிஸ்தவ மக்களின் மிக முக்கிய காலமான தவக்காலம் மற்றும் புனித வாரம் பற்றி இந்த ஆக்கம் பேசுகிறது.

**புனித வாரம்**

தவக்காலம் விபூதிப்புதனுடன் ஆரம்பமாகி உயிர்ப்பு ஞாயிறுடன் நிறைவாகும். இறுதி வாரமான புனித வாரம் குருத்தோலை ஞாயிறு முதல் உயிர்ப்பு ஞாயிறு வரையிலான காலமாகும். இவ்வாரத்திலும் பெரிய வியாழன், பெரிய வெள்ளி, பெரிய சனி ஆகிய நாள்கள் அதி முக்கியம் வாய்ந்த நாள்கள் ஆகும். இந்த நாள்களில் பாதம் கழுவும் சடங்கு இயேசு நற்கருணையையும் குருத்துவத்தையும் ஏற்படுத்தியமை இயேசு சாவடைந்து பின்னர் வெற்றி வீரனாய் உயிர்த்தமை போன்ற நிகழ்வுகள் நினைவு கூரப்படும். இவற்றின் விளக்கத்திற்கு இப்போது செல்வோம்.



**குருத்து ஞாயிறு**

இயேசுக் கிறிஸ்து தன் இலட்சியக் கனவை நிறைவேற்றிக் கொள்வதற்கு துணிவுடன் ஜெருசலேம் ஆலயத்திற்குள் நுழைந்ததை இன்று திருச்சபை நினைவு கூருகின்றது. மக்கள் கோவிலுக்கு வெளியே குருத்தோலையைக் கையில் ஏந்தி நிற்பர். சிவப்பு நிற திருப்பலி உடைகளை அணிந்த குருவானவர் புனித வாரத்தின் தொடக்கமாகவும் நுழைவாயிலாகவும் அமையும் குருத்து ஞாயிறு சடங்குகளை நடத்துவார். ஜெருசலேம் ஆலயத்திற்குள் நுழையும் இயேசுவின் இந்தச் செயல் ஒடுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வந்த பாமர மக்களின் நம்பிக்கைக் கனவுகளுக்கு புதிய அர்த்தம் கொடுப்பதாக அமைகிறது. எனவே இந்தப் புனித நாளில் நமது கரங்களில் ஏந்தும் குருத்து மடல்களும் நாம் இசைக்கும் ஓசன்னா கீதமும் இந்த ஒட்டுமொத்தப் பூமியில் நிலவும் மனித உரிமை மீறல்களுக்கும் ஏற்றத் தாழ்வுகளுக்கும் ஆதிக்கத் தனங்களுக்கும் சாவு மணி அடிக்கும் உரிமைக் குரல்களாக ஒலிக்கட்டும். ஆண்டவருடைய திருப்பாடுகளின் வரலாறு எரியும் திரிகளும் தூபமும் இன்றி வாழ்த்துரை கூறாமலும் திருநூலில் சிலுவை அடையாளம் வரையாமலும் வாசிக்கப்படும்.




**பெரிய வியாழன்**

திருப்பலி தொடங்க முன் நற்கருணைப் பேழை வெறுமையாக இரக்க வேண்டும். உன்னதங்களிலே என்னும் கீதம் பாடப்படும்போது ஆலய மணிகள் ஒலிக்கும். இதுமுதல் பாஸ்கா திருவிழிப்புவரை மணிகள் ஒலிக்காது. இயேசுவின் பாஸ்கா விழாவை இன்று கொண்டாடுகின்றோம். பாஸ்கா என்றால் கடத்தல் என்று பொருள். பழைய ஏற்பாட்டில் கடவுளின்கனிந்த உள்ளத்தால் பாரவோனின்ஆதிக்கத்தில் இருந்தும் அடிமைத்தனத்தில் இருந்தும் இஸ்ராயேல் மக்கள் விடுதலை அடைந்து கானான் நாட்டை உடமையாக்கிக் கொண்டனர். அதாவது பாஸ்கா என்றகடத்தல் நிகழ்வின் வழியாக தீமையின் ஆதிக்கத்தில் இருந்து கடந்து வந்துநித்தியத்திற்கும் நிலையான இறைவனை பற்றிக் கொண்டனர்.

இயேசு இன்று குருத்துவத்தை ஏற்படுத்துகிறார். இயேசுவின் இந்தக்குருத்துவத்தில் நாம்பங்கெடுக்க விரும்பினால் அவரைப் போல் நாமும் பிறரது நலன்களுக்காக நம்மையேஉடைத்துக் கொடுக்க பகிர்ந்து வாழ முன்வர வேண்டும்.

வாழும் காலம் சிறிதென்றாலும் நாம் நீதியின் வழியில் பயணிக்க வேண்டும். இயேசுவும் துணிந்து நீதியின் வழியில் நம்மை மீட்க முன்வருகிறார். நீதியையும் சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் எடுத்துக் காட்டும் இயேசுவின் இந்த நற்கருணைவிருந்தில் துணிவுடன் பங்கு பெறுவதற்கான அருளை இத்திருப்பலியில் பெறுவோம்.



**பாதம் கழுவும் சடங்கு**

யூத சமுதாயப் பின்னணியில் இந்த நிகழ்வினைப் பார்க்கின்றபோதுதன் வீட்டில் இருக்கும் பணியாளர் தனது எஜமானின் கால்களைக் கழுவது வழக்கம். ஆனால் அதே சமுதாயத்தில் பிறந்த இயேசு தனது செயற்பாடுகளில் ஒரு வித்தியாசமான ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடிக்கின்றார். அதாவது இறைமகன் இயேசு தானே முன்சென்று தனது சீடர்களின் பாதங்களைக் கழுவி தாழ்ச்சியின் உன்னத தன்மையைவெளிப்படுத்துகின்றார்.

**நற்கருணைப் பவனி**

திருப்பலி நிறைவேற்றிய தலைமைப் பீடத்தில் இருந்து தனியாக அலங்கரிக்கப்பட்ட பீடத்திற்கு பவனியாக நற்கருணை எடுத்துச் செல்லப்படுகிறது. பவனி புதிய பீடத்தை அடைந்ததும் அனைவரும் முழந்தாள் படியிடுவர். பின்பு அருள்பணியாளர் தூபம்காட்டுவார் அப்போது மாண்புயர் கீதம் இசைக்கப்படும்.

**புனித வெள்ளி**

சிலுவை திரிகள்பீடத்துணிகள் அனைத்தும் அகற்றப்பட்டு பீடம் வெறுமையாக இருக்கும். பிற்பகலில் குறிப்பாக மூன்று மணியளவில் திருப்பாடுகளின் வழிபாடு நடைபெறும்.

இன்றைய வழிபாடு மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. இன்று திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதில்லை. திருப்பலிக்குரிய சிவப்பு நிற உடைகள் அணிந்து அருட்பணியாளர் பீடத்திற்கு முன்வந்து வணக்கம் செலுத்தி முகம் குப்பற விழுந்து அல்லது வசதிக் ஏற்ப முழந்தாள் பணிந்து இருப்பார்.

பதவி ஆசையில் தங்களை பழக்கிக் கொண்ட பரிசேயர்களும் சதுசேயர்களும் மறைநூல் அறிஞர்களும் உரோமையர்களுக்குத் தங்களை அடிமைப் படுத்திக்கொண்டு வாழ்ந்தனர்.

யூத சமுதாயத்தில் தங்களை மட்டுமே உயர்ந்தவர்களாகத் தூக்கிப்பிடித்துக் கொண்டு ஏழை எளியவரின் உழைப்பை உறுஞ்சிக்குடித்த இவர்களுக்கு இயேசுவின் அணுகுமுறைகள் சாவு பயத்தை ஏற்படுத்தின. ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துகொண்டு ஆடம்பரமாக வாழ நினைத்தவர்களுக்கு இயேசுவின் போக்குகள் சரியான சவுக்கடிகளாக மாறின.

ஒடுக்கப்பட்ட வறியவர்களோடும் பெண்களோடும் நோயாளிகளோடும் பாவிகளோடும் இயேசு கொண்டிருந்த மேசை உறவு ஆட்சியில் இருந்தோரை ஆட்டிப்பார்த்தன.

இன்றைய வழிபாடானது 01. இறைவாக்கு வழிபாடு 02. திருச்சிலுவை ஆராதனை 03. திருவிருந்து என மூன்று முக்கிய பகுதிகளைக் கொண்டுள்ளது.

**மன்றாட்டுக்கள்**

இன்று மன்றாட்டுக்கள் பின்வரும் கருத்துக்களுக்காக அமையும் 01. தூய திருச்சபைக்காக 02. திருத்தந்தைக்காக 03. திருச்சபையில் பல்வேறு நிலையில் உள்ளவர்களுக்காக 04. திருமுழுக்குப் பெறத்தயார் செய்வோருக்காக 05. கிறிஸ்தவர்களின் ஒற்றுமைக்காக 06. யூத மக்களுக்காக 07. கிறிஸ்துவில் இன்னும் விசுவாசம் கொள்ளாதவர்களுக்காக 08. கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களுக்காக 09. நாடுகளை ஆள்வோருக்காக 10. துன்புறு வோருக்காக

**திருச்சிலுவை ஆராதனை**

விசுவாசிகளின் மன்றாட்டு முடிந்தவுடன் திருச்சிலுவை ஆராதனை நடைபெறும். "திருச்சிலுவை மரம் இதோ; இதிலேதான் தொங்கியது உலகத்தின் இரட்சணியம்"

"எல்லோரும் வருவீர் ஆராதிப்போம்" என்று பாடி திருச்சிலுவையை முத்தி செய்வர்.

**திருவிழிப்பு திருப்பலி**

இருளின் பிடியிலும் சாவின் நிழலிலும் அடிமையின் ஆதிக்கத்திலும் வாழந்த இஸ்ராயேல்மக்களுக்கு தான் தேர்ந்து கொண்ட மேசே வழியாக விடுதலை அளித்தார். ஒளியின்பாதையிலே அவர்களை வழிநடத்திச் சென்று பாலும் தேனும் பொழியும் கானான்தேசத்திலே கரைசேர்த்து தம் மக்களை பேருவகை கொள்ளச் செய்தார். இலட்சிய வாழ்வில் துன்பங்கள் கட்டாயம் இருக்கும் ஆனால் அந்தத் துன்பங்கள் ஒருபோதும் இலட்சியத்தை சிதைக்க இயலாது. இறுதியில் இலட்சியம் மட்டுமே வெல்லும்என்பதைத் தான் இயேசுவின் உயிர்ப்பு நிரூபித்துக் காட்டுகிறது. இருளில் இருந்துஒளிக்கும் சாவில் இருந்து வாழ்விற்கும் கடந்து சென்ற இறைவனை வழித்துணையாகவும் வாழ்வாகவும் கொண்டு எமது பயணத்தைத் தொடருவோம். இந்தத் திருவிழிப்புச் சடங்கானது ஒளிவழிபாடு இறைவாக்கு வழிபாடு திருமுழுக்குவழிபாடு நற்கருணை வழிபாடு என நான்கு பகுதிகளைக் கொண்டது.

தீயையும் திரியையும் மந்திரித்தல்

பாஸ்காத் திரியை அருட்பணி யாளர் எடுத்து அதில் எழுத்தாணி கொண்டு சிலுவையின்அடையாளத்தை வரைகிறார்.



## புதிய உச்சத்தைத் தொட்ட
# ஆளப்போறான் தமிழன்

விஜய் நடிப்பில் வெளியான `மெர்சல்' படத்தில் இடம்பெற்றிருந்த `ஆளப்போறான் தமிழன்' பாடல் யூடியூப்பில் புதிய உச்சத்தைத் தொட்டு சாதனை படைத்துள்ளது. ஸ்ரீ தேனாண்டாள் பிலிம்ஸ் நிறுவனத்தின் 100ஆவது படமான `மெர்சல்' படத்திற்கு ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்த நிலையில், படத்தில் இடம்பெற்றுள்ள `ஆளப்போறான் தமிழன்' பாடலுக்கு சமூக வலைதளங்களில் அமோக வரவேற்பு கிடைத்திருக்கிறது.

கடந்த நவம்பர் மாதம் வெளியாகிய இந்த பாடல் யூடியூப்பில் புதிய சாதனையை படைத்துள்ளது. யூடியூப்பில் இதுவரை இந்த பாடலை பார்த்தவர்களின் எண்ணிக்கை 100 மில்லியனை தாண்டியிருக்கிறது. ஏ.ஆர்.ரகுமான் இசையில், விவேக் வரிகளில் கைலாஷ் கெர், சத்யபிரகாஷ், தீபக், பூஜா இந்த பாடலை பாடியுள்ளனர். தமிழையும், தமிழர்களின் பெருமையையும் சொல்லும் வரிகளில் இந்த பாடல் பட்டிதொட்டி எங்கும் ஒலித்து வருகிறது. அட்லி இயக்கிய இந்த படத்தில் விஜய் மூன்று தோற்றத்தில் நடித்திருந்தார்.













## இது புதுசு





**சமையலறையில் பயன்பாட்டுக்கு எளிதாக நன்னீரை சுத்திகரித்துத் தரக்கூடிய நீர் சுத்திகரிப்பு வடிகட்டி புதிதாக அறிமுகமாகியுள்ளது. இவை ஆயிரத்து 699 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.**

## படித்ததில் பிடித்தது



***ஒரு நாட்டு மன்னன் தன் அரண்மனையில் நாட்டியம் ஆடவந்த பெண்ணின் அழகில் மயங்கி அவளை அடைய ஆசைப்பட்டான்.***

அப்பெண்ணோ "மன்னா...!!! நடனம் ஆடுவது எங்கள் குலத்தொழில்.

நாங்கள் ஆண்டவனுக்கு தொண்டு செய்பவர்கள். ஆதலால் இது வேண்டாமே" என்றாள்.

மன்னவனோ "ஆண்டவனும் அரசனும் ஒன்று தான். நீ என் இச்சைக்கு இணங்கதான் வேண்டும். வா நான் இந்த நாட்டுக்கே உன்னை அரசியாக்குகிறேன்" என்றான்.

அப்பெண் எவ்வளவே வாதாடியும் விடவில்லை. மன்னனிடம் கடைசியில் ஒப்புக்கொண்டாள். அந்தப்பெண் "சரி மன்னா... நாளை தாங்கள் என் வீட்டுக்கு வாங்கள் விருந்து வைக்கிறேன். அமுதுண்டு பிறகு சல்லாபிக்கலாம்" என்றாள். மன்னனும் சென்றான். அந்தப் பெண் மன்னனுக்கு 16 வகை கலரில் இனிப்பு வழங்கினாள்.

மன்னன் எனக்குச் சாப்பிட பொறுமை இல்லை. நீயே ஊட்டி விடு என்று கூறினான். அப்பெண்ணும் ஊட்டி விட்டாள்.

மன்னன் சுவைத்தான்.

விருந்து முடிந்தது.

மன்னனிடம் கேட்டாள்...

"மன்னா...!!! 16 வகையான இனிப்புச் சுவைத்தீர்களே ஒவ்வொன்றின் சுவை எப்படி இருந்தது?

"நிறம் மட்டுமே வேறு வேறு சுவை ஒன்று தான்" என்றான் மன்னன்.

"மன்னா நாங்களும் அப்படிதான். பெண்கள் நிறம் மட்டுமே வேறு வேறு சுவை ஒன்று தானே என்றாள்.

மன்னன் அந்தப்பெண்ணின் காலில் விழுந்து வணங்கினார்.

"தாயே என் அறிவுக்கண் திறந்தவளே" என்றான்.

நம் வீட்டிலும் பெண்கள் உண்டு.

பிற பெண்களிடம் பழகும் போது நம் வீட்டுப் பெண்களாக நினைத்து சகோதரிகளிடம் பழகுவதாக பழகுங்கள்.

நட்பு வளர்க்கும் பிற பெண்கள் மனதை காயப்படுத்தாதீர்கள்!

குறிப்புகள்

# குழந்தைக்கு வரும் விக்கலை நிறுத்துவது எப்படி?



குழந்தை தாய்ப்பால் குடிக்கும்போதோ உணவு உண்ணும் போதோ விக்கல் வரலாம். தும்மல், அழுகை, ஆழ்ந்த மூச்சி விடும்போது விக்கல் வருவது இயல்பு. மிகவும் அரிதாக, உடல் நல பிரச்சி னைகளால் விக்கல் வரக்கூடும்.
விக்கல் வந்தால் அவசர சிகிச்சை தேவை என்பதெல்லாம் கிடையாது. அது இயல்பான ஒரு விடயம் தான். ஒரு சிலருக்கு மிகவும் அரிதாகச் சில பிரச்சினைகளை விக்கல் ஏற்படுத்தலாம். அவர்களுக்கு விக்கல் மாதம் முழுக்க வந்தால் என்ன பிரச்சினை எனப் பார்க்க வேண்டும். இது போல் இருப்பவர்களுக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும்.
குழந்தைகளுக்கு வரக்கூடிய விக்கல் மிகவும் பொதுவானது. பயம் கொள்ளத் தேவையில்லை. உணவு உண்ணும்போதோ உணவு உண்ட பின்போ ஏற்படுவது வழமை. குழந்தைகள் தங்களை அறியாமலே அதிக காற்றை உணவு உண்ணும் போதும் பால் அருந்தும்போதும் உள்ளெடுத்து விடுகின்றனர். வயிற்றில் உள்ள வாயு (காற்று) விக்கலை ஏற்படுத்துகிறது.
சின்ன சின்ன முயற்சிகளைப் பாதுகாப்பாக மேற்கொண்டால் விக்கல் குழந்தைகளுக்கு ஏற்படாமல் தவிர்க்க முடியும். தாய்ப்பால் ஊட்டும் போது குழந்தையை உங்கள் தோள்ப்பட்டை அருகில் சரியான நிலையில் தூக்கி வைத்துக் கொண்டு தாய்ப்பால் கொடுக்கலாம்.
குழந்தையைச் சரியான நிலையில் தூக்கி வைத்து தாய்ப்பால் அருந்தும்படி செய்தால், தேவையில்லாமல் காற்று குழந்தையின் வாயின் வழியாகச் செல்வது தடுக்கப்படும். இதனால் விக்கல் வருவதும் தடுக்கப்படும்.
குழந்தைக்குப் பாலூட்டும் போத்தலில் பெரிய துளை இருந்தாலும் அதன் வழியாக அதிக காற்று சென்று குழந்தைக்கு விக்கல் ஏற்படலாம். பலூட்டும் போத்தலூடகப் பால் சொட்டுச் சொட்டாக வரும் படி இருக்கவேண்டும். அப்படியே தொடர்ந்து சிலர் விக்கல் வரும்போது தாய்ப்பால் கொடுக்காதீர்கள் என்பார்கள். ஆனால், அது தவறு. விக்கல் வந்தாலும் குழந்தைக்கு நீங்கள் தாய்ப்பால் ஊட்டலாம். கொதிக்கின்ற நீரில் சோம்பை போட்டு, அந்தத் தண்ணீரை இளஞ்சூடாக கொடுக்க விக்கல் நிற்கும். உடனடியாக விக்கலை நிறுத்தும் வைத்தியம் இது.
குழந்தையின் வயிறு வலி, வாயு பிடிப்பு போன்றவற்றுக்கு ஓமத் தண்ணீரை சிறிதளவு கொடுக்கலாம்.. இந்த வைத்தியம் குழந்தையின் வயிற்றில் உள்ள வாயு பிரச்சினையைச் சரியாக்கும். வயிற்று பிடிப்புகூட சரியாகும். விக்கல் ஏற்படாமல் தவிர்க்கலாம்

# கூந்தல் வளர்ச்சியை அதிகரிக்கும் சின்ன வெங்காயச்சாறு



தலைமுடி உதிர்வதைத் தடுத்து முடியின் வேரை வலுப்ப டுத்தி கூந்தல் வளர்ச்சியை அதிகரிக்கச் செய்வதில் சின்ன வெங்காயம் முக்கிய பங்காற்றுகிறது.
கூந்தல் வளர்ச்சியை அதிகரிக்கும் சின்ன வெங்காயச்சாறு தலைமுடி உதிர்வதைத் தடுத்து முடியின் வேரை வலுப்படுத்திக் கூந்தல் வளர்ச்சியை அதிகரிக்கச் செய்வதில் சின்ன வெங்காயம் முக்கிய பங்காற்றுகிறது எனலாம். இதற்குக் காரணம் சின்ன வெங்காயத்தில் உள்ள சல்பர் என்ற வேதிப் பொருள்தான். சின்ன வெங்காயச் சாற்றை தலையில் 5 நிமிடம் மசாஜ் செய்வதனால் குருதி ஓட்டத்தை அதிகரிக்கச் செய்கிறது.
முடி வளர கைகளில் கிடைக்கும் கண்ட எண்ணெயை வாங்கிப் பயன்படுத்திச் சோதனை செய்வதை விட்டு வெங்காயச் சாற்றை பயன்படுத்துவது பக்கவிளைவை ஏற்படுத்தாத ஒரு வழிமுறையாகும்.
வெங்காயச் சாறு தயாரிக்கும்போது நறுக்கிய சின்ன வெங்காயத்தைத் தண்ணீரில் போட்டு நன்கு கொதிக்க வைக்க வேண்டும்.
பின்னர் வெங்காயம் நன்கு வெந்து அதிலுள்ள சாறு வெளியேறியவுடன் அந்த நீரை வடிகட்டி ஸ்கால்ப்பில் நன்கு மசாஜ் செய்ய வேண்டும்

# தாய்மார்களுக்கு வரும் முதுகு வலியும் தீர்வும்

***இளமையிலே முதுகு வலி, மூட்டு வலி என அவதிப்படும் பெண்கள் அதிகம். அதுவும் குழந்தை பெற்ற பிறகு இந்தப் பிரச்சினையில் அதிகமாக அவதிப்படுகின்றனர். தைலம், மருந்துகள் என எதுவும் பெரிதாகப் பலன் தருவதில்லை. இந்த வலிக்கான காரணமாக நம் வாழ்வியல் மாற்றமே முதலிடத்தில் இருக்கிறது. இதைச் சரி செய்வது எப்படி எனப்பார்க்கலாம்.***



**முதுகு வலி**

அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு, முதுகில் ஊசி போடப்படுவதால் அதன் வலி நீண்ட காலத்துக்கோ இறுதி வரைக்குமோ இருக்கலாம்.
அவர்கள் நிறையத் தண்ணீர், பழச்சாறுகள், இளநீரைக் குடிக்க வேண்டும்.
நீண்ட தூரம் இருசக்கர வாகனங்களில் பயணம் மேற்கொள்ளாதீர்கள்.
உடற்பயிற்சி இல்லாத வாழ்க்கைமுறை இருந்தாலும் முதுகு வலி வரும்.
சில நேரத்தில் வயிற்றில் ஏதேனும் பிரச்சினை இருந்தாலும் கீழ் முதுகில் வலி வரலாம்.
தாய்மார்களுக்கு வரக்கூடிய மன அழுத்தமும் முதுகு வலிஒரு காரணம்.
சிறுநீரகம், சிறுநீரகப் பையில் கல் இருப்பதாக் கீழ் முதுகில் வலி வரலாம்.
வெள்ளைப்படுதல் பிரச்சினை இருந்தாலும் கீழ் முதுகில் வலி வரலாம்.
கூன் விழுந்த நிலையில் உட்காருவது, நிற்பது, நடப்பதும் ஒரு காரணம்.
மேடு, பள்ளம் உள்ள வீதிகளில் தினமும் பயணிப்பது கூடாது.
திடீரெனக் குனிவது, நிமிர்வது ஒரு காரணம்.
உடல்பருமனாக இருப்பதும் ஒரு காரணம்.

**தீர்வுகள்**

நீண்ட நேரம் உட்கார்ந்து வேலை செய்தால் நாற்காலியில் அடி முதுகுக்குச் சிறு தலையணை வைத்துக்கொள்ளுங்கள். கூன் விழாமல் உட்காருவது நல்லது. அடிக்கடி எழுந்து நடை போடுங்கள்.
உட்கார்ந்திருக்கும்போது தொங்கவிட்ட கால்களின் நிலையை அடிக்கடி மாற்றுங்கள்.
உடற்பயிற்சி, நடை, நீச்சல், யோகாசனம் போன்ற ஏதேனும் ஒன்றைத் தொடர்ந்து செய்தால் முதுகுவலி வராமல் தடுக்கலாம்.
முதுகு வலி உள்ளவர்கள், கால்களை சிறிது மடித்த நிலையில், கால்களுக்கு இடையே தலையணை வைத்து உறங்கலாம். சமதளமான மெத்தையில் படுத்து உறங்குங்கள்.
உயரமான காலணிகளை அணிய வேண்டாம். நடப்பது, நிற்பது போன்றவை இரண்டு கால்களுக்கும் சமமாக இருப்பதைப் போல நிற்க வேண்டும். ஒரு காலுக்கு மட்டும் அதிக எடை இருக்க கூடாது.
பட்டி உள்ள கைப்பையை நீங்கள் பயன்படுத்தினால், அந்தப் பட்டி அகலமாக இருக்க வேண்டும். பல பெண்களுக்கு இதனால் முதுகு வலி வரும். இரண்டு தோள்ப்பட்டைகளிலும் மாட்டும் படியான பையை அணிவது நல்லது.
உங்கள் தலை, தோள் பட்டை, இடுப்பு ஒரே நேர் கோட்டில் இருக்க வேண்டும்.
முறையாக யோகாசனங்களைக் கற்றபின் தினந்தோறும் செய்து வந்தால் முதுகு வலியிலிருந்து எளிதில் தப்பிக்கலாம்.



# உச்சி முதல் பாதம் வரை நன்மை தரும் பலா

முக்கனிகளில் ஒன்றான பலா , பழங்களின் அரசன் என்றழைக்கப்படுகிறது. இதற்கு அந்தப்பழத்தின் தோற்றம் மட்டுமல்ல , அது பயக்கும் எண்ணற்ற நன்மைகளும் காரணமாகும். பலா மரங்கள் இந்தியா, பர்மா. இலங்கை, சீனா. மலேசியா. பிலிப்பைன்ஸ். பிரேசில், கென்யா போன்ற நாடுகளில் பெருமளவில் உள்ளன.
பலாப்பழம் ஊட்டச்சத்து மிக்கது. மருத்துவ குணம் கொண்டது. இதில் உடலுக்குத் தேவையான விற்றமின் ஏ, சி , பொட்டாசியம், கல்சியம், இரும்புச்சத்து, நையாசின் மற்றும் துத்தநாகம் போன்ற சத்துக்கள் அடங்கியுள்ளன.

**ஸ்தாபகரான ஐயம்பிள்ளை நடராசா அவர்களின் 72ஆவது பிறந்த தினத்தில்**
**அனைவருக்கும் இனிய விகாரி புதுவருடப் பிறப்பின் வாழ்த்துக்கள்**



**50 வருடங்களுக்கு மேலாக யாழ் குடாநாட்டு மக்களின் நன்மதிப்பைபெற்ற உங்கள் அபிமான**

# மைதிலி நகைமாடம்

## தனியார் நிறுவனம்

## Maithily Nakai Maadam (Pvt) Ltd



- அதி நவீன டிசைனுக்கேற்ப நம்ப முடியாத விலைக் கழிவுகள் வழங்கப்படும்.
- பழைய நகைகளைக் கொடுத்து நகை வாங்குவோருக்கு அன்றைய பவுண் விலைக்கே எடுக்கப்படும்.
- குறிப்பிட்ட நகைகள் தங்க விலைக்கே சேதாரம் இல்லாமல் வழங்கப்படும்.
- நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் அதி விசேட பரிசு காத்திருக்கின்றது.
- வாடிக்கையாளர் நன்மை கருதி ஏப்ரல் 10 தொடக்கம் மே 06 வரை உங்களின் மனதிற்கு ஏற்றவாறு நகைகளை ஓடர் செய்து அக்ஷய திருதியை தினத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**07.05.2019**
**அக்ஷய திருதியை தினத்தை முன்னிட்டு ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.**

**யாழ் மைதிலி ஜுவெலர்ஸ்**

89V கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 7902
79 Z, Sea Street, Colombo-11. Tel: 2396239.

---

வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது இனிய சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்

# Vayuputhra Phone Shop

# வாயுபுத்ரா போன் சொப்

No.364, Hospital Road, Jaffna.



T.P: 077 364 4246
077 859 5151



V 15, V15 Pro

F11, F11 Pro

அனைத்து விதமான போன் விற்பனை மற்றும் பழுதுபார்த்தல்



**வாயுபுத்ரா புக்கிங் சென்றர்**
அதிசொகசு பயணிகள் போக்குவரத்து சேவை
077 36 44 246 / 077 85 95 151

சகல விதமான பேருந்துகளுக்கும் ஆசனப் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.



ஆசனப் பதிவகம்
யாழ் ⇆ கொழும்பு
(தினமும்)

ஆசன பதிவுகளுக்கும் மேலதிக தொடர்புகளுக்கும் ➤ இல.364, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# மாசற்ற நீரே குறைவற்ற செல்வம்

"நீரினால் ஏற்படும் தொற்று நோய்களுக்கும் நீரிலுள்ள கடினமான தாது உப்புக்களால் ஏற்படும் சிறுநீரக கல், பித்தப்பை கல், சிறுநீரக அழற்சி போன்ற நோய்களை தவிர்ப்பதற்கு வடிகட்டிய நீரினை பருகுவது வைத்தியர்களால் பரிந்துரைக்கப்படுகின்றது."



மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனமானது வடமாகாணத்தில் சகல விதமான நீர் சார்ந்த பிரச்சினைகளுக்கும் உயர்தர தீர்வினை வழங்கி வருகின்றது.



**இலகு தவணை கொடுப்பனவு முறையிலும் பெற்றுக்கொள்ளலாம்**

மாதம் 3642/=லிருந்து

(நிபந்தனைக்கு உட்பட்டது)

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**

No.341, K.K.S Road, Jaffna.

HOTLINE: 075 331 3310

Tel: 021 222 6888



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்

# PNK GROUP

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
மொத்த கொள்வனவுக்கு வாகன வசதி உண்டு.



*American Water*

587, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம். T.P: 021 221 7277

(10)

**வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்கள்**







Since 1978

MJ

நடராசா கஜந்தன்

# நியூ மைதிலி ஜுவலர்ஸ்

ஒரிஜினல் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

காலத்தை வெல்லும் கலை நுட்பத்துடன் மின்னும் பொன்நகையால் மேலும் உங்கள் புன்னகை ஒளிரும் விரையுங்கள் நியூ மைதிலிக்கு

**அக்ஷய திருதியை 07.05.2019**

இதோ உங்கள் பழைய 22kt நகைகளை புதிய 22kt தங்கத்தின் விலைக்கே கொள்வனவு செய்து அதற்கு மாற்றாக நவீன விஸ்தரிக்கப்பட்ட எமது காட்சியறையில் உங்கள் மனதில் மின்னும் டிசைன்களை ஆனந்தமாக தெரிவு செய்யுங்கள்.



(10)

இதுமட்டுமல்லாது தங்களது கொள்வனவுகளுக்கு ஏற்ப பல்வேறு சிறப்பு பரிசுகளும் காத்திருக்கின்றன.
அட்ஷய திருதியைக்கான கொள்வனவு முற்பதிகள் 14.04.2019 முதல் தொடங்கியுள்ளன.

- ஏப்ரல்- 21, 28 ஆம் திகதி ஞாயிற்று கிழமைகளிலும், மே மாதம் - 05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையிலும் எமது காட்சியறை திறந்து இருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.
- தங்க நகைகளை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு அதிஸ்டலாபச் சீட்டு மூலம் நியூ மைதிலி ஜுவலர்ஸ் இன் பெறுமதி மிக்க பரிசுகளுக்கு வெற்றியாளர் ஆகுங்கள்.

38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 7878 Fax:021 2217877

newmaithily40@gmail.com

New Maithily Jewellers

0094212217878

பிறக்கும் சித்திரைப் புத்தாண்டு வாடிக்கையாளர் அனைவருக்கும்
சுபீட்சமாய் மலர்ந்திட வாழ்த்துகின்றோம்



# மயூரன்ஸ்
## நகை மாளிகை

22 கரட் தங்கப்பவுண் நகை வியாபாரம் *22 Karat Gold Jewellery*

அக்ஷய திருதியையை முன்னிட்டு
விசேட சலுகைகளுடன்
நவீன டிசைன்களில் நகைகள்
முன்கூட்டியே ஓடர்
செய்துகொள்ளுங்கள்

அக்ஷய திருதியை
07.05.2019



அக்ஷய திருதியையான (07.05.2019) தினத்தன்று தங்கத்தை
கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளருக்கும்
பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

# MAYURANS NAKAI MALIKAI

95 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Kasthuriyar Road, Jaffna.

T.P : 021 222 3015 / 077 651 0251 (16)

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

யாழ் நகரில் புதுப் பொலிவுடன்



# வெஸ்ரன் ஜுவலலர்ஸ்
# Western Jewellerss

அக்ஷய
திருதியை
07.05.2019

குறையாத செல்வத்தை வளமாக அள்ளித்தரும்
அதிசயத் திருநாளாம் அக்ஷய திருதியை
இம்முறை 07-05-2019 ஆம் திகதி
கொண்டாடப்படவிருக்கின்றது. இத்திருநாளில்
உங்கள் வாழ்வில் மேன்மேலும் சுபீட்சத்தை
உருவாக்கும் பெறுமதிமிக்க நகைகளை எமது
வெஸ்ரன் ஜுவலர்ஸில் கொள்வனவு செய்து
மகிழுங்கள். 2019 ஆண்டுக்கான
**வெஸ்ரன் ஜுவலர்ஸின்**
அக்ஷய திருதியை அன்று வழங்கப்பட இருக்கும்
மாபெரும் சலுகையை தவறவிட வேண்டாம்.

தரம் நம்பிக்கை கைராசி
மற்றும் தரம் குன்றா
சிங்கப்பூர் தரத்திலான
நகைகளை உத்தரவாதத்துடன்
பெற்றுக் கொள்ள இன்றே
நாடுங்கள்...

எங்கும் இல்லாத விலைக்கழிவுடன்
அதி நவீன புத்தம்புதிய டிசைன்கள்.



இல.81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 6916

ஒரு முறை விஜயம் செய்யுங்கள் மீண்டும் மீண்டும் வரத்தூண்டும்.

எம்மிடம் தங்க நகைகளை மிகவும் துள்ளியமாக
தரம் பார்த்து சான்றிதனைப் பெற்றுக்கொள்ளலாம் (10)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

தங்கநகை உலகில் 38 வருடம் அனுபவம் வாய்ந்த நாங்கள் உலகின் பல பாகங்களிலும் இருக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நம்பிக்கை, கைராசி மற்றும் தரம்குன்றா சிங்கப்பூர் தரத்திலான தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

Rube Since 1982 Jewellery

# ரூபி ஜுவல்லறி

என்றும் குறையாத ஐஸ்வர்யத்தை அள்ளித்தரும் அக்ஷய திருதியை திருநாளாம் 07.05.2019 அன்று எமது ரூபி ஜுவல்லறியில் தங்க நகைகளை கொள்வனவு செய்து ஐஸ்வர்யத்தை அள்ளிச் செல்ல அனைவரையும் அப்போடு அழைக்கின்றோம்

எதிர்வரும் 07.05.2019 எமது ஜுவல்லறியில் தங்கத்தினை கொள்வனவு செய்யும் 10 வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு

☆1ம் பரிசு LED TV ☆2ம் பரிசு Ladies Bycicle

மேலும் 8 வாடிக்கையாளர்களுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.






எம்மிடம் கடன் அட்டைகள் மூலம் கொள்வனவு செய்யும் வசதியும் உண்டு

இல.227-229, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 221 6919 / 0777 344 074

வாடிக்கையாளர் அனைவருக்கும்
இனிய சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்



சிறுவர்களுக்கான
ஆடை தினுசுகள்
பெண்களுக்கான சாறிகள்,
